க.பொ.த உயர்தர
வகுப்புக்குரியது

கம்பராமாயணம்

அயோத்தியாகாண்டம் திருவடிசூட்டு படலம்

சொக்கன்

S. Subothini
R.C.C.

கம்பராமாயணம்

அயோத்தியாகாண்டம்-
திருவடிசூட்டு படலம்

[1996 தொடக்கம் க. பொ. த. உயர்தரத்
தேர்வுக்குப் பாடநூல்களுள் ஒன்றாக
விதிக்கப்பட்டுள்ள பகுதி.]

க. சொக்கலிங்கம் எம். ஏ.
(சொக்கன்)

வெளியீடு
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்
1 991

விலை ரூபா 65/-

முதற் பதிப்பு : 1995 ஐப்பசி
2ஆவது திருத்திய பதிப்பு 1997 புரட்டாதி

பதிப்புரிமை : ஆசிரியருக்கே.

வெளியீடு :

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அச்சுப் பதிப்பு :

ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்,
63, பி. ஏ. தம்பி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

முகவுரை

கம்பராமாயணம் அயோத்தியா காண்டத்தின் இறுதிப் படலமாகிய 'திருவடி சூட்டு படலம்' 1996 தொடக்கம், க. பொ. த (உயர்தர)த் தேர்வில் 'தமிழ் 1' க்கான பாட நூல்களுள் ஒன்றாக விதிக்கப்பட்டுள்ளது. தாயாகிய கைகேயி, தசரதனிடம் பெற்ற வரங்களினாலே இராமன் காடாளவும், தான் அரசாளவும் நேர்ந்த கொடுமையைப் பொறுக்கலாற்றாத பரதன், இராமனைத் தேடிச்சென்று சித்திரகூடமலையிலே கண்டதும், இராமனை மீண்டுவந்து நாடாளப் பலவாறு வேண்டியும் அவன் இசையாததால் அவனுடைய பாதுகைகளைப் பெற்று வந்து நந்திக்கிராமத்திலே அவை (பாதுகைகள்) செங்கோல் நடாத்தத் தான் துறவு மேற்கொண்டொழுகியதுமாகிய சம்பவங்களைத் 'திருவடி சூட்டுபடலம்' விவரிக்கின்றது.

மேற்படி படலத்திலுள்ள 141 பாடல்களையும் முதலிலே தந்து, அடுத்துப் பதப் பிரிப்பும் தொடர்ந்து பாடற் பொழிப்பும், ஒவ்வொரு பாடலிலுமுள்ள அருஞ் சொற்களுக்குப் பொருளும் இடையிடையே சிறு விளக்கங்களும் சில இலக்கண முடிபுகளும் அமையுமாறு நூலை ஆக்கியுள்ளேன்; மேலும் விரிவானதோர் அறிமுகமும் மாதிரி வினாக்களும் தரப்பட்டுள்ளன. இவை 'திருவடி சூட்டு படலத்தைக் கற்பிப்போருக்கும் கற்போருக்கும் பெரிதும் பயன்படும் என்ற நம்பிக்கை பெரிதும் உடையேன்.

வழமைபோல இந்நூலையும் அச்சிற் பதித்து வெளியிடும் ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை உரிமையாளருக்கும் அச்சக ஊழியர்க்கும் எனது உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்

க. சொக்கலிங்கம்
(சொக்கன்)

கம்பராமாயணம்

திருவடி சூட்டு படலம் — ஓர் அறிமுகம்

தமிழ்க் காவிய வரிசையிலே கம்பராமாயணத்தின் இடம்.

பாரத நாட்டிலே தோன்றிய பேரிதிகாசங்கள் இராமாயணமும் மகாபாரதமுமாகும். இவை வடமொழியில் அமைந்தவை. இராமாயணம் வான்மீகியாலும் மகாபாரதம் வியாசராலும் ஆக்கப்பட்டவை. இராமாயணத்தைத் தமிழிலே தந்தவர் கம்பர். மகாபாரதத்தைத் தமிழிலே செய்தவர் வில்லிபுத்தூரர். இருவரும் வைணவர். ஆதலால் இவர்கள் கம்பநாட்டாழ்வார் எனவும் வில்லிபுத்தூராழ்வார் எனவும் வைணவராலே போற்றப்படுகின்றனர். இலக்கிய தரத்தைப் பொறுத்த வரையிலே வில்லி பாரதத்திலும் சிறந்ததாக மட்டுமன்றித் தமிழிலே தோன்றிய காவியங்கள் யாவிலும் மிக மேலானது கம்பராமாயணம் என்பதற்கு ஐயமில்லை.

கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

"தமிழுக்குக் கதியாவார் இருவர். ஒருவர் கம்பர், மற்றவர் திருவள்ளுவர்" என்று திருமணம் செல்வகேசுவர முதலியார் கம்பரையும் வள்ளுவரையும் போற்றுவது முற்றிலும் பொருத்தமானதே. சோழர் காலத்திலே (கி பி 900 - 1300) மூவர் 'கவிச்சக்கரவர்த்திகள்' என்ற பட்டப் பெயர் பெற்றிருந்தனர். செயங் கொண்டார். ஒட்டக்கூத்தர், கம்பர் ஆகிய மூவருமே அந்தக் கவிச் சக்கரவர்த்திகள். இருப்பினும் தமிழறிஞர்களுக்கே செயங்கொண்டார். ஒட்டக் கூத்தர் பற்றித் தெரியும். ஆனால் தமிழறிந்தார் யாவருக்குமே கம்பர் மிகவும் பழக்கப்பட்டவர். வடமொழி, தென்மொழி ஆகிய இருமொழிகளிலும் ஆழ்ந்த பேரறிவு பெற்றவர் அவர். இதனால், 'கல்வியிற் பெரியன் கம்பன்' என்ற புகழ்மொழி அவருக்கு உரித்தாயிற்று. இதனோடு கற்பனை வளம், நுண்ணுணர்வு, சொல்லாட்சி, தெய்வ

மாக் கதையினைப் பாடிய போதிலும் மானிடத்திற்கு மகிமை அளித்து மனித உள்ளப் போராட்டங்களையும் உணர்வுகளையும் திறம்படச் சித்திரிக்கும் ஆற்றல், கதையைச் சுவைபடச் சொல்லுந் திறன், உணர்ச்சி வேறுபாடுகளுக்கேற்ப விருத்தமெனும் ஒண்பாவினைப் பல வண்ணங்களிற் படைத்து அவையூடாகப் படிப்போரின் உள்ளங்களிலே அவ்வவ்விரசங்களை (மெய்ப்பாடுகளை) ஏற்படுத்திவிடும் சிறப்பு, கதை மாந்தர்களை (கதாபாத்திரங்களை) உளவியல் நோக்கில் அணுகி அவர்களின் தனித்தன்மைகளை இனங்காட்டும் விறல், சருக்கரையினுள்ளே பொதிந்து வைக்கும் மருந்துபோல இனிய நிகழ்வுகளினுள்ளே உயர் குறிக்கோள்கள், பத்தியுணர்வு, நல்லொழுக்கக் கோட்பாடுகள், அறத்தின் எழுச்சி, மறத்தின் (தீமையின்) வீழ்ச்சி ஆகியவற்றைப் புலப்படுத்தும் திறமை, என்ற பலவேறு திறங்களாலே கம்பர் தமிழ்க்கவிஞர் வரிசையிலே மிக உயர்ந்த இடத்தை வகிக்கின்றார். 'கம்பநாடன் கவிதையைப்போல் கற்றோர்க்கிதயம் களியாதே' என்றும், 'கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்றும் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும் மகாகவி சுப்பிரமணிய பாரதியாருமே போற்றுவர் என்றால், இவர்களுக்கு முற்பட்டோர் எவ்வாறெல்லாம் கம்பரைப் புகழ்ந்து போற்றியிருப்பர் என்று சொல்ல வேண்டுவதில்லை. அதிகம் ஏன்? 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்' என்ற பழமொழியே அவர் தமிழ் மக்களிடையே பெற்றிருந்த பெரும் புகழினை அறிந்து கொள்ளப் போதியதாகும்.

கம்பரின் காலம்

சோழப்பேரரசு புகழின் உச்சியிலே வாழ்ந்தகாலத்தில் பெருமன்னரும் போற்றி ஆதரிக்க வாழும்பேறு பெற்றவர் கம்பர். இவர் காலம் கி. பி. 12ஆம் நூற்றாண்டு என்று

இலக்கிய வரலாற்றாய்வாளர் கொள்வர். எனினும் வள்ளுவர் வாழ்க்கை போலவே கம்பரின் வாழ்க்கையும் ஆதார பூர்வமான அடிப்படை அற்றதாய், கட்டுக்கதைகள் பலவற்றினுள்ளே புதைந்து கிடப்பது கவலை தருவதாகும்.

கம்பராமாயணத்தில் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகள்.

காண்டம் என்ற பெரும் பிரிவுகள் ஆறும், படலங்கள் என்ற சிறுபிரிவுகள் நூற்றுப்பதினெட்டும் கொண்டதாய் விருத்தம் என்னும் பாவினத்தால், 10341 பாடல்களில் இயன்றது கம்பராமாயணம். இது 'இராமசரிதம்' எனவும் வழங்கும். பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரணியகாண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்தகாண்டம் என்பன கம்பராமாயணத்தின் ஆறுகாண்டங்கள். பாலகாண்டத்தில் இரண்டு நிகழ்வுகள் முதன்மையானவை. இராமன் நிகும்பலையில் தாடகையையும் அரக்கரையும் அழித்து வேள்வி காத்தல், மிதிலையிலே வில் முறித்துச் சீதையை மணந்தல் என்பனவே அந்நிகழ்வுகள். அயோத்தியா காண்டத்தில் சிறப்பிடம் பெறுபவை, இராமனுக்கு முடிசூட்டத் தசரதன் முடிவு செய்தல். அது நிறைவேறத் தடையாய்க் கூனியும் கைகேயியும் சூழ்ச்சி செய்தல், கைகேயியின் ஒரு வரத்தால் இராமனும், இலக்குவனும், சீதையும் வனம் செல்லல், இராமனின் பிரிவு தாங்காது தசரதன் இறத்தல், பரதன் தாயின் மற்றொரு வரமாகிய தான் நாடாள்வதை ஏற்காது இராமனைத் தேடிச் சென்று. அவன் நாடு திரும்பி முடிசூட மறுத்ததால், அவனது பாதுகைகளைப் பெற்று வந்து நந்திக் கிராமத்தில் ஆட்சி நடத்தல் என்பன. ஆரணிய காண்டத்தில், இராமனும் இலக்குவனும் அரக்கர் பலரை அழித்தல், சூர்ப்பனகை இராமன் மீது காதல் கொண்டு அது நிறைவேறாது மூக்கறுபட்டு இராவணனிடம் சென்று முறையிடல்,

✝ கம்பராமாயணத்தில் 12000 பாடல்கள் வரை உள்ளன என்பர். ஆனால் ஆய்வாளர் மிகைப் பாடல்கள் என்று தள்ளியபின் எஞ்சிய தொகையே இது.

இராவணன் சீதையைக் கவர்ந்து செல்லல், இராமனின் சோகம் என்பன முதன்மை பெறுகின்றன. கிட்கிந்தா காண்டத்தில் சுக்கிரீவனை அனுமனின் வாயிலாக இராமலக்குவர் நட்புக் கொள்ளல், சுக்கிரீவனுக்காக வாலியை இராமன் வதைத்தல், சுக்கிரீவன் சீதையைத் தேடுவதில் தனது படையினரையும் சிறப்பாக அநுமனையும் ஈடுபடுத்தல் சிறப்பிடம் பெறுகின்றன. சுந்தரகாண்டத்தில் சீதையின் பிரிவுச் சோகம், அசோக வனத்தில் இராம தூதுவனான அனுமன் சீதையைக் கண்டு, இலங்கையை எரித்துக் கிட்கிந்தை மீளல். இராமன், அநுமன் அளித்த செய்தியால் மனம் தேறுதல், இலங்கை செல்ல இராமலக்குவரும சுக்கிரீவன், அநுமன், வானரப் படையினர் ஆகியோரும் ஆயத்தமாதல் முக்கியமான நிகழ்வுகளாகும். யுத்தகாண்டத்தில் இராமலக்குவருக்காகச் சேது அணையை வானரர் கட்டுதல், விபீடணன் (இராவணனின் தம்பி) இராமன் பக்கம் சேரல், இராவணனோடு இராமன் போரிடல், இராவணனின் மகன் இந்திரசித்தன், தம்பி கும்பகருணன் இறுதியில் இராவணன் ஆகியோரும் படைகளும் அழிதல். சீதையின், சிறைமீட்பு, சீதையின் கற்பை இராமன் சோதிக்க அவளை அக்கினிப் பிரவேசம் செய்வித்தல் அயோத்தி திரும்பல், இராமபட்டாபிஷேகம் என்பன சிறப்பிடம் பெறுகின்றன. அகலிகை வரலாறு, இரணியன் வரலாறு முதலிய இராமாயணத்தில் வரும் குறிப்பிடத்தக்க துணைக் கதைகள்.

கம்பராமாயணத்தின் காவிய அமைப்பு

சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன தமிழின் ஆதி காவியங்கள். இவை தமிழ் மரபினை ஒட்டி எழுந்தவை. சோழர் காலத்திலே வடமொழிக்காவிய மரபினை ஒட்டி எழுந்த முதற்காவியம் சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசியும் காவியமரபை ஒட்டி எழுந்தவையே. ஆனால் அவற்றின் முழுமையும் கிடைக்கவில்லை.

இதிகாசமாயமைந்த வான்மீகிராமாயணத்தை ஒட்டியும், விலகியும், தமிழ்மரபுகளை ஆங்காங்கே பேணியும் அதேபோது வடமொழிக் காவிய மரபினை முற்றாகப் பின்பற்றியும் கம்பர் இயற்றியதே இராமாயணம். தண்டியின் 'காவியதர்சம்' என்ற வடமொழி அலங்கார நூலினை அடியொற்றி எழுந்த தமிழ்நூல் தண்டியலங்காரம். அது தரும் பெருங்காப்பிய இலக்கணத்தில் கூறப்பட்ட விதிகள் பின்வருவன.

"காப்பியத்தொடக்கத்தில், வாழ்த்து, வணக்கம், வருபொருள் (பாடஎடுத்துக்கொண்ட பொருள்) என்ற இவற்றில் ஒன்று (ஒன்றாவது) இடம்பெறல்வேண்டும். அது அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற பொருள்களையும் பயத்தல் வேண்டும். தன்னிகர் இல்லாத தலைவன் இடம்பெறல் வேண்டும். மலை, கடல், நாடு, நகரம், பருவங்கள் முதலானவற்றின் வருணனைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். (ஆற்றுவருணனையும் கம்பராமாயணத்தில் சிறப்பிடம் பெறும்) சூரிய சந்திரர் தோற்றம், மறைவு கூறப்படல் வேண்டும். தலைவ தலைவியர் (காதல்), திருமணம், முடிசூட்டு பூம்பொழில் நுகர்தல், (விளையாட்டு) நீர் விளையாடல், குழநதைப்பேறு, தலைவதலைவியர் புலவி கொள்ளல், கலந்து இன்புறல் என்ற இவை போல்வன புனையப்படல் வேண்டும். மந்திராலோசனை, தூது, படைச்செலவு, போர், வெற்றி என்பவற்றை உள்ளடக்கல் வேண்டும். கதைப்பிரிவுகள் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்ற பெயர்களைக் கொண்டமையலாம். (இராமாயணம் காண்டம், படலம் என்ற பெரும்பிரிவு சிறுபிரிவுகளைக் கொண்டது.) இவற்றோடு சுவை, பாவம் என்பன குறைவற அமைந்து கற்றோர் விரும்பத்தக்கவாறு ஆக்கப்படல் வேண்டும்."

மேற்கூறிய இயல்புகள் யாவும் குறைவற அமைந்த ஈடு இணையில்லாத பெருங்காவியமே கம்பராமாயணம்.

தலைவனான இராமனுக்கும் சீதைக்கும் குழந்தைப்பேறு ஏற்பட்டதைக் கம்பராமாயணத்திலே காணமுடியாது. ஆனால் தசரதனின் பிள்ளைப்பேறு சனகனின் (சீதையின் தந்தை) மக்கட்பேறு என்பன அற்புதரசம் அமையச் சித்திரிக்கப்பட்டுள்ளன. இராமன் வாலியை மறைந்திருந்து கொன்றமை அவனது தன்னிகரில்லாத் தலைமைப் பாட்டுக்கு இழுக்கென்பர். எனினும் காவியம் முழுமையிலும் இராமனுடைய தலைமைப்பாடு சிறந்து ஒளிர்வதை மறுத்தல் இயலாது.

\+ திருவடி சூட்டு படலம்

கம்பராமாயணம் அயோத்தியாகாண்டத்தில் மந்திரப் படலம், மந்தரைசூழ்ச்சிப்படலம், கைகேயி சூழ்வினைப் படலம், நகர்நீங்குபடலம், தைலமாட்டுபடலம், கங்கைப் படலம், வனம்புகுபடலம், சித்திரகூடப்படலம், பள்ளி படைப்படலம், ஆறுசெல்படலம் குகப்படலம், என்ற பன்னிரு படலங்களோடு இறுதிப்படலமாகத் திருவடி சூட்டு படலம் அமைந்துள்ளது. எல்லாமாக நூற்று நாற்பதெொரு பாடல்கள் இப்படலத்தில் உள்ளன.

பரதன், தன் சுற்றம், படைபரிவாரம், முனிவர்கூட்டம் நகரமாந்தர் கூட்டம் என்பவற்றோடு, கங்கையைக் கடந்து சித்திர கூடபர்வதம் சென்று, இராமனைக் கண்டு, அவனை நாட்டாட்சியைப் பெறுமாறு பலவாறு மன்றாடியும் அவன் இசையாததால் அவனுடைய பாதுகைகளைப் பெற்றுவந்து நந்திக்கிராமத்தில் அவையே துணையாக அயோத்தியை ஆளத்தொடங்கியது வரையுள்ள வரலாறு திருவடி சூட்டு படலத்தின் உள்ளடக்கம். இதனைத் தனித்தனிப் பிரிவுகளாக (நிகழ்வுகளாக)ப் பிரித்தால் அவை பின்வருமாறு அமையும்.

அ) பரதன் சித்திரகூட பர்வதத்திற்கு வந்து பரத்துவாசரைக் காணல், உரையாடல்.

\+ இப்படலம் 'கிளை காண் படலம்' எனவும் வழங்கும்.

ஆ) பரத்துவாசர் பரதனுடன் வந்தோர்க்கு விருந்தளித்து உபசரித்தல்.

இ) அவரோடும் சித்திரகூட பர்வதத்தில் வாழ்ந்தமுனிவர்கள், பத்தினிமாரோடும் தன் தாய்மார் மூவர், சுமந்திரன் உள்ளிட்ட அமைச்சர்கள், சேனைத்தலைவர்கள், சான்றோர்கள், உறவினர், அந்தணர், நகரமாந்தர் ஆகியோரோடும் இடையிலிருந்த பாலையைக் கடந்து சென்று பரதன் இராமனைக் காணல், அவன் அடிவீழ்தல், கதறியழுதல். இராமன் அவன் வாயிலாகத் தந்தை இறந்த செய்தி கேள்வியுற்றுக் கவலைக் கடலில் ஆழ்தல், வசிட்டர் தேற்றத் தேறித் தந்தைக்குக் கங்கையிலே நீர்க்கடன் செய்தல்.

ஈ) பரதன் சீதையைக் கண்டு அவள் கோலமும் சூழலும் நோக்கி மிகவருந்தி அவள் காலடியில் வீழ்ந்து அழுதல். இராமன் சீதைக்குத் தன் தந்தை இறந்த சேதியைச் சொல்ல அவள் அடைந்த சோகம்.

உ) இராமன் தாய்மாரோடு தன் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளல்.

ஊ) பரதன் இராமனை நாடு திருமபி ஆட்சியை ஏற்கப் பல காரணங்கள் காட்டி வேண்டுதல். அந்தவேண்டுதலைப் போதிய காரணகாரிய அடிப்படையில் இராமன் மறுத்தல்.

எ) வசிட்டரும பரதனுக்குச் சார்பாக வாதிட்டு இராமனை ஆட்சியை ஏற்க வற்புறுத்தல். அந்த வாதத்தையும் பணிவுடன். ஆனால் மிகுந்த திறமையாக மறுத்து இராமன் கொணட கொள்கையிலே உறுதியாய் நிற்றல்.

ஏ) இவர்களின் உரையாடல்களை வானத்தில் நின்று கேட்ட தேவர்கள், அரக்கரை அழிப்பதாகிய தங்களின் எதிர்பார்ப்பிற்கு மாறாகப் பரதன் இராமனை நாட்டிற்குத் திருபப அழைத்துச் சென்றுவிடுவானோ என்று அச்

சமும் கவலையும் கொண்டு, பரதனை நாடேகுமாறும், இராமனைப் பதினான்காண்டு காடுறையும் விரதத்தை நிறைவேற்றுமாறும் கேட்டல், இறுதியில் பரதன் இராமனின் முடிவை மிகுந்த தயக்கத்துடனும் வேதனையுடனும் ஏற்றல்.

ஐ) இராமன் காடுறைவதை ஏற்றாலும், அவன் பதினான்காண்டுகள் வனவாசம் முடித்துத் திரும்பி வந்து நாட்டாட்சியை ஏற்குமாறும், தவறினால் தான் தீப்புகுந்து மாள்வது உறுதி என்றும், இராமன் தனக்குப் பிரதிநிதியாகத் தன்னுடைய பாதுகைகளை வழங்க வேண்டும் என்றும் பரதன் வேண்டுதல்.

ஒ) பரதனின் முடிவு கண்டு இரக்கமும் உருக்கமும் கொண்ட இராமன், பாதுகைகளை வழங்கப் பரதன் அவற்றைத் தன் தலையிலே சூடியவனாய் நாடு மீளல், வந்தவர்கள் அனைவரும் குகனும் பரதனைத் தொடரல்.

ஓ) பரதன் கங்கையைக் கடந்து, அயோத்தி செல்லாது, நந்திக் கிராமம் என்ற இடத்திலே இராமனது பாதுகைகளே துணையாய்ச் செங்கோலாட்சி செலுத்திய வண்ணம் இடைவிடாது கண்ணீர் பெருக்கியவாறு துறவிக் கோலமும், உள்ளமுமாக வாழ்தல்.

ஔ) இராமன் தொடர்ந்து, தான் சித்திரகூட மலையிலே வதிந்தால் மக்கள் தனக்காக வேதனை கொண்டு வருந்துவர் என்று முடிவு செய்து சீதையுடனும், இலக்குவனுடனும் தென்றிசை நோக்கிச் செல்லல்.

பரதன் அறிமுகம்:

திருவடி சூட்டுபடலத்தின் தொடக்கப் பாடலிலேயே பரதன் அறிமுகமாகி விடுகின்றான். பரத்துவாசமுனிவர் அவனை வாழ்த்தி, நாடாளாது அவன் காடு வந்தது ஏன் என்று வினாவிய பொழுது பரதன் தன்னை வினாவியவர் முனிவர் என்று கூட நோக்காது, சீற்றங்கொண்டு கடுஞ்

சொற்கணைகளை அவர்மீது வீசக் காண்கின்றோம். தந்தையின் மரணத்திற்குத் தாயே காலானதும் தன் உயிரிலும் மேலான அண்ணன் ஆட்சி துறந்து காடேகியதும் தமையனைத் துரத்தித் தான் ஆட்சிக்குவந்ததாக மக்கள் பழிதூற்றுவரே என்ற அச்சமும், அவனை பெரிதும் வாட்டித் துன்பத்தின் உச்சியில் இருத்தியதாலேயே பரதன் உணர்ச்சிப் பிழம்பாகித் தன் உள்ளக் குமுறலை வார்த்தை நெய்யூற்றி எரியவிட்டான் என்பதால், அறிவாளரான பரத்துவாசரும் மற்றுமுள்ள முனிவர்களும் பதிற் சீற்றம்வெளிப்படுத்தாது அவனுடைய உயர் இலட்சியத்தைமனங்கொண்டு இறும்பூதெய்துகின்றனர். அன்பு, அறத்துக்கு மட்டுமன்றி மறத்துக்கும் துணையாகும், என்ற வள்ளுவரின் கருத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகப் பரதன் விளங்கக் காண்கிறோம்.

பரத்துவாசர் அளித்த விருந்து (ஓர் இடைவேளை)

சூழலெங்கும் சோகமே நெறிகட்டி நின்ற வேளையிலே பரத்துவாசர் பரதனோடு வந்த பரிவாரங்களுக்கு விருந்தளிக்கச் சுவர்க்கலோகத்தையே தமது ஆச்சிரமத்துக்கு அழைக்கிறார். தேவமாதரின் உபசரணை விரிவாக வருணிக்கப்படுகின்றது. பரிவாரங்களில் உயர்தகுதி படைத்தோரிலிருந்து தாழ்ந்தோர் வரை யாவருமே உயர்வு தாழ்வு கருதப்படாது தேவமாதரால் பலவாறு உபசரிக்கப்படுவதோடு இரவுவேளையை அந்த அழகிகளோடு கழிக்கும் வாய்ப்பும் இன்பமும் அவர்களுக்கு எளிதில் கிட்டுகின்றன.

மலையிலிருந்து பெரும் ஆழத்திலே வீழ்வதுபோல உன்னதமான ஓர் உணர்வுநிலை வீழ்ச்சியடைந்து விரசத்தின் எல்லைக்கே சென்றுவிடுவது போலத் தோன்றுகின்றதன்றோ? இந்தக் கலவியும் களிப்பும் இவ்விடத்தில் வேண்டியனவா என்ற கேள்வி நியாயமானதே.

ஆனால் இத்தனை வருணனைகளும் ஓர் உன்னதத்தினை வெளிப்படுத்தவே கம்பர் அமைத்தார் என்றே

கொள்ள வேண்டும். இவ்வளவு கோலாகலங்களுக்கு மத்தியிலும் பரதன் எவ்வாறு அந்த நாளைக் கழித்தான் என்பதே முக்கியம்.

....தோன்றல்தான்
அன்ன காயும் கிழங்கும் உண்டு அப்பகல்
பொன்னின் மேனி பொடிஉறப் போக்கினான்.

கம்பர் தாம் சித்திரிக்க எடுத்துக் கொள்ளும் கதாபாத்திரத்தின் உண்மையான நிலையையும் உளப்பாங்கையும் புலப்படுத்த இத்தகைய முரணான சூழ்நிலைகளை உருவாக்கும் உத்தியைப் பல இடங்களிற் கையாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பெருந்துயில் நீங்கி நூறுநூறு குடங்களாகக் கள்ளை அருந்தியும் எருமைகள் பலவற்றை உண்டும் தனது சிறுபசி போக்கிய பிரமாண்ட வடிவினனான கும்பகருணன், அதே வேளை தன் உருவத்திற்கும் உணர்வுக்கும் மாறான அறப் போக்கும் அண்ணனுக்காக உயிர்விடும் தியாகமும் நீர்க் குமிழி வாழ்க்கையின் நிலையாமையுணர்வும் பொருந்திய திடமுடைய 'குன்றன்ன கொள்கையா' னாய் விளங்குவதை முன்னைய முரணிலையோடு வைத்துப் பார்க்கும் பொழுது தான் கம்பரின் உத்திச் சிறப்பினை உணரலாம். பெருந் தொகையான பாடல்களால் இராவணனின் அசோகவன வருகையையும், அவனுடைய பெருவாழ்வின் சிறப்பையும் விரிவாக வருணித்த அதேவேளை, அந்த வணங்காமுடி காமத்தால் கருகிச் சீதையின் காலடியில் வீழ்ந்து அவளால் ''துரும்பே'' என்ற ஏசலுக்கும் உள்ளாகின்றான். ஆக முரணிலைகளை உருவாக்கி அவற்றின் மூலம் தாம் சித்திரிக்கும் பாத்திரத்தின் மனநிலைகளைப் புலப்படுத்துவது கம்பரின் வழக்கம். பாரகாவியம் செய்ய முற்பட்ட அந்த மகாகவியின் காலமும், மக்களின் வாழ்க்கைப் போக்கினை அவர் உணர்ந்த அநுபவமும் சுவைநோக்குமே இத்தகைய

கதை இடைவேளைகளை உருவாக்குவதில் அவரை ஈடு படுத்தின. இவ்வுத்தி தவறானதா என்பது சிந்திக்கத் தக்கதே.

செல்லும் சொல் வெல்லும் சொல்

கம்பரின் பேராற்றல்களுள் ஒன்று அவர் பாத்திரங் களின் உரையாடலை நுட்பமாக அமைத்துக் கொள்வதே யாகும். திருவடிசூட்டு படலத்தில் நிகழ்ச்சிகளிலும் மேலோங்கி நிற்பன, பரதன் - இராமன் - வசிட்டர் ஆகி யோரிடையே நிகழும் உரையாடல்கள் தாம்.

'அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமுமே' இராமபிரானைப் பதினான்காண்டுகள் காடுறைய வைத் தன. இது நியதி, தவிர்க்கமுடியாதது, நடந்தே ஆகவேண் டியது. ஆனால் இதனைத் தமது சொந்த விருப்பத்தலும் வேண்டுதல்களாலும், இராமன்மீது கொண்ட பேரன்பினா லும் மாற்றிவிடப் பரதனும் வசிட்டரும் முற்படுகின்றனர். தங்களின் முடிவினை வெற்றிபெறச் செய்ய அவர்கள் தமது நாவன்மையையும் கற்றகல்வியையும் முழு ஆற்றலுடன் கையாள்கின்றனர்.

பரதன் கூறிய நியாயங்கள்

1) (இராமன்) அறத்தினை நினைக்கவில்லை; அருளை யும் எண்ணிப் பார்க்கவில்லை; ஆட்சி முறைமையையும் கருத்திற் கொள்ளவில்லை.

2) கைகேயியின் வரங்கள் மனத்துக்கு ஒவ்வாதன. இவை ஆட்சியாளனான உன்னைத் தவவேடம் கொள்ள வைத்தன. தசரதனை இறக்கச் செய்தன.

3) பாவகாரியான என் அன்னை கைகேயியின் வயிற் றிலே பிறந்த நான் இறந்து போயிருக்க வேண்டும்; அல்லது துறவியாயிருக்க வேண்டும். பாவியாகிய எனக்கு இந்த இரண்டில் ஒன்றாவது இட்டவில்லை.

4) கற்பையிழந்த மகளிரின் இயல்பும், பொறுமையை இழந்த தவத்தின் இயல்பும் மிகமிகத் தீயனவே. ஆனால் 'மூத்தவனுக்கு அரசு' என்ற ஆட்சி முறைமையிலிருந்து தவறுதல் அவ்விரண்டிலும் மிகமிகத் தீயது.

5) நீ மூத்தவனாய்ப் பிறந்ததால் உனக்கு உரித்தான அரசினைத் துறந்து நீ தவம் செய்யத் துணிந்தாய் என்றால், தருமத்தினை மறந்து அதை வாளாலே கொன்று தின்றாற் போல நான் அரசை ஆள்வதோ? உனது அரசை நீ அயர்ந்திருக்க நான் கவர்வேனென்றால் நான் உனக்கு அத்தகைய பகைவனோ?

6) ஆகவே உன் தந்தை செய்த தீமையும் தாய் செய்த கொடுமையும் நீங்க நீ நாடு மீண்டு அரசு செய்வதே தக்கது.

7) எனக்குத் தசரதன் தந்ததால் உரித்தான அரசினை நான் உனக்குத் தருகின்றேன். நீ அதனை ஏற்று ஆள்வாய்.

இந்நியாயங்கள் மனத்தைத் தொடுவனவாயும் இரக்கம் கொள்ள வைப்பனவாயும், தவிர்க்க முடியாத வேண்டுதல்களை உள்ளடக்கியனவாயும் உள்ளன என்பது உண்மையே. ஆனால் இராமனிடம் அவை செல்லக்கூடிய சொற்களாகவோ வெல்லக்கூடிய சொற்களாகவோ அமையத் தவறிவிடுகின்றன.

இராமனுடைய நியாயங்கள்

1) ஒழுக்கம், உண்மை, நீதி, மேன்மை, தருமம் என்று தருமசாத்திரங்கள் வலியுறுத்துவன யாவும் அரசர்களின் கட்டளைகளாலேயே நெறி பிறழாது நடக்கின்றன.

2) நாம் பெற்ற கேள்வியறிவு, ஞானம், நல்லொழுக்கம், செயற்றிறம், மேன்மை தேவர் என்ற எல்லாம் குரவராகிய தாய் தந்தையரே.

3) தாய் வரத்தினைக் கொள்ள, தந்தை கட்டளையிட என் குலத்தின் தருமமாக இவற்றைக் கொண்டேன். இவற்றைக் கைவிடல் இயலாது.

4) பெற்றோருக்குப் பிள்ளைகளாகப் பிறந்தோர் அவர்களுக்குத் தம்முடைய நற்செயல்களால் புகழைத் தேடித்தரல் வேண்டும். அவர்களுக்கு நீண்ட வசையைத் தேடுவது பெருங் கொடுமை.

5) என் தந்தையின் உறுதி வாக்கினை நான் பிழைக்கு மாறு செய்து, ஆட்சியை ஏற்பதன் மூலம் அவரை மீளா நரகத்தில் ஆழ்த்தமாட்டேன்.

6) ஆகவே தந்தை கொடுக்கத் தாய் பெற்ற வரத்தினால் அரசு உன்னுடையதே ஏற்று ஆள்வாய்.

7) அன்பினனாகிய நீ அரசை எனக்கு அளித்தால் அது என் தந்தையார் அளித்த வரத்தினை நிறைவேற்றியதாகுமோ? இன்றோடு நான் காட்டிலே கழிக்க வேண்டிய பதினான்காண்டுகளும் முடிந்தனவோ?

இந்நியாயங்கள் செல்லும் சொல்லாகவும் வெல்லுஞ் சொல்லாகவும் அமையக் காரணம், பரதன்போல் உணர்ச்சிப் பிழம்பாய் நில்லாது, அறிவு நிலையில் நின்று நன்கு சிந்தித்துச் சொன்னமையே.

"வெற்றி வீர யான் விளம்பக் கேள்எனா
முற்றும் நோக்கினான் – மொழிதன் மேயினான்"

முற்றும் நோக்கினான் – பரதன் கருத்துக்களை முற்றாக எண்ணிப் பார்த்தவனான இராமன், (பாடலமைப்பில் நோக்கினான் என்பது நோக்கி என்ற எச்சப்பொருள் தந்ததால் அது முற்றெச்சம்)

பரதன் இராமனுக்குப் பதில் உரைக்க முற்பட்டதை விலக்கி வசிட்டன் கூறிய நியாயம்.

1) திருமாலின் உந்திக்கமலத்திலே உதித்த பிரமன் உலகத்தைப் படைத்த பொழுது உனது அரசகுலம் முதலில் தோன்றியது.

2) இன்றுவரை உன்முன்னோர், தம் பதவி முறையிலிருந்து பிழைக்கவில்லை. எனவே அந்த முறையின்படி நீயே அரசனாதல் வேண்டும்.

3) அன்றியும் கல்வித்துறைகள் யாவற்றையும் கற்பித்த குரு, தாய் தந்தையரிலும் மேலான குரவராவர். நான் உனக்கு அளவில்லாத கல்விகளை வழங்கியவன். எனவே குருவான என் கட்டளையினை ஏற்று மீண்டு வந்து அயோத்தியை ஆள்வாய்.

இந்த நியாயத்தில், பாரம்பரியத்தின் செல்வாக்கை யுணர்த்துவதோடு நில்லாது, தான் குரு என்பதையும் அழுத்திக் கூறி இராமனைத் தன் கட்டளையை ஏற்க வைக்க முயல்கிறான் வசிட்டன்; ஆனால் இராமன் தயங்கவில்லை.

1) சான்றோராகட்டும் பெரியவராகட்டும், முன்னரே செய்வதாக உறுதி எடுத்து மேற்கொண்ட செயலினை இவர்களின் கட்டளைக்குப் பணிந்து கைவிடலாமா?

2) தந்தை கட்டளையிட வந்தனவும் தாய் செய்க எனப் பணித்ததால் கைக்கொள்ள வேண்டியனவுமான கட்டளைகளை மேற்கொள்ளாது தீய ° புலையனைப் போல

° வசிட்டனுக்குத் தனது யதிலுரையை வழங்கத் தொடங்குகையில், வசிட்டனை,

'தேன்தரு மலருளான் சிறுவ!'

என்று இராமன் விளிக்கின்றான். ''இராமன் திருமால் அவதாரம், திருமாலின் மகன் பிரமன்; பிரமனின் புதல்வன் வசிட்டன், தனது அவதார உண்மையை வசிட்டனுக்கு உணர்த்தி அவனை இராமன் வாயடக்கினான்'' என்று இலக்கணவித்தகர் இ. நமசிவாய தேசிகர் தந்த விளக்கம் சிந்திக்கத்தக்கது.

வும், தனது செய்கையை உணராத நாய்போலவும் திரிவது நல்லதோ?

என்று வசிட்டனுக்குப் பதிலளித்தபொழுது இராமனுடைய பிறவிக்குணமான சாந்தம் சிறிதே குறைந்து சீற்றம் எழுவதுபோலத் தோற்றுகின்றது. ஆனால் இராமன் தன் மனத்திரிபினை உடனேயே விளங்கிக்கொண்டவனாய்,

2) முன்பு பெற்றோர் எனக்குக் கட்டளை இட அவற்றை என் தலைமேற்கொண்டு செய்யத் தொடங்கி விட்டேன், இப்பொழுது (அவர்களின் கட்டளைக்குப்பின்) நீ நாட்டை ஆளச்செல்லுமாறு கட்டளையிடுகிறாய். இது எனக்குப் பெருமையோ? நான் செய்யவேண்டியதை நீயே உரை''

என்று வசிட்டனுக்குப் பணிந்து முடிவை அவனிடத் தேயே விடுவது போலக் காட்டி, அவனை அமைதி அடையச் செய்யும் திறம் குறிப்பிடத்தக்கதாகும். இதற்குப் பின்பும் வசிட்டன்தொடர்ந்து வாதிக்க முடியாத நிலையில்,

'' ... உரைப்பது ஓர் முறைமை கண்டிலம்
இனி'' என இருந்தனன்.

ஆக, இராமனின் சிந்தனையோடு கூடிய வாதத்திறன்னது அவன் சொல்லினைச் செல்லும் சொல்லாகவும் வெல்லும் சொல்லாகவும் ஆக்கின.

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.
(திருக்குறள் 647)

இலக்குவன் சீற்றம்

இலக்குவன் உணர்ச்சிப் பிழம்பு. இராமன் என்ற நீரில் வாழும் மீன் அவன். (நீரின் நீலம் சீதை.)

நீருள எனினுள மீனும் நீலமும்
பாருள என்னுள யாவும் பார்ப்புறின்
நாருள தனுஉளாய் நானும் சீதையும்
யாருளர் எனினுளோம் அறைகுவாய் என்றான்.
(அயோத்தியா காண்டம் - நகர்நீங்குபடலம்)

நீரைப் பிரிந்தால் அடுத்த கணமே மீன் உயிர் துடித்து இறந்துபோகும். ஆம்! இராமனின்றேல் இலக்குவன் இல்லை. அத்தகைய பாசத்தாலேயே உருவான இலக்குவன், தன் தமையனுக்கு ஊறு எதுவும் ஏற்பட்டு விடாமல் ''கண்ணினைக் காக்கின்ற இமையிற்'' காத்து வருவதில் வியப்பு இல்லை. அத்தகையவன் முன்பு அயோத்தியிலும் ''இராமன் காடேகவும், பரதன் நாடாளவும் போகின்றனர்'' என்று கேட்டதும் ஊழிக்காலத்தீயாய் எழுந்து, உலகம் முழுவதையும் அழிப்பேன்'' என்று கங்கணம் கட்டியது போலவே, பரதன் சித்திர கூடத்துக்கு வருவதை மலைமேல் நின்று கண்டவுனே சீறிச் சினந்து எரிமலையாகின்றான்; பரதனையும் தனது ஓரம்பினாலேயே ஒழித்து, குருதிக்கடலைப் பெருகவிடப்போவதாகவும், இறப்போரின் பாரத்தால்துறக்கத்தை நெளிய வைக்கப் போவதாகவும் குமுறுகின்றான். ஆனால் இராமனோ அவனுடைய இயல்பை முற்ற உணர்ந்தவனாதலால், அவனைத் தனது அன்பு மொழிகளாற் குளிரச் செய்துவிடக் காண்கின்றோம். மலை உச்சியில் நின்ற போது எழுந்த அவனுடைய சீற்றம், இராமனின் மொழிகளாலும், பரதனின் கோலத்தாலும் அவன் மலையிலிருந்து இறங்கியது போலவே கீழே இறங்கித் தரைமட்டத்துக்கு வந்து விடுகின்றது. இராமன் 'சொல்லின் செல்வன்' என்பதும் எவரெவரோடு எவ்வெவ்வாறு உரையாடல் வேண்டுமென்ற உளவியல் நன்கறிந்தவன் என்பதும், மற்றைய படலங்கள் பலவற்றிலும் போலவே, திருவடிசூட்டுபடலத்திலும்' நன்கு புலனாகின்றது. புலனாக வைத்தது கம்பரின் கவித்துவப் பெருமை.

சிறந்த உவமை உருவகங்கள்

'கவியினில் வல்லோர் அணிபெறச்' செய்வதே உயர்ந்த கவிக்குரிய இலக்கணங்களில் ஒன்று என்று கம்பரே கூறியதற்கு ஏற்பச் சிறந்த உவமைகள், உருவகங்கள் இப்படலத்தில் அமைந்துள்ளன. அவற்றிற் சிலவற்றை எடுத்துக் காட்டி, அவற்றின் சிறப்புக்களை மாணாக்கரே உய்த்

துணரவைக்கலாம் என்ற கருத்திற் சில உவமைகளும், உருவகங்களும் இங்குத் தரப்படுகின்றன.

பிறந்து வேறோர் உலகுபெற்றார் என
மறந்து வைகினர் முன்னைத்தம் வாழ்வு எல்லாம்

மறுநாள் முன்னைய நிலைக்கே திரும்பிய அவர்கள்,

"தேறி முந்தைத்தம் சிந்தையர் ஆயினார்
மாறி வந்து பிறந்தது அன்ன மாட்சியார்

பல்சனர் கண்டது 'மூலம் இல்கனவு (அடிப்படை இல்லாது உடன் மறையும் ஒன்று)

அது நீங்கிப் பகல் வந்து சூரியன் உதிக்கின்றான்.

3. 'ஏலும் நல்வினை துய்ப்பவர்க்கு ஈறுசெல்
காலம் என்னக் கதிரவன் தோன்றினான்.

என, அன்ன, என்ன என்பன உவம உருபுகள், நிகழ்வின் தொடர்ச்சிக்கு ஏற்ப உவமைகளும் ஒன்றடன் ஒன்று தொடர்ந்து செல்வது நயம்மிக்கது. இவ்வாறு ஆங்காங்கு வரும் உவமைகளை நுணுக்கமாக நோக்குக.

(ஆ) கைகேயி பரதனை நோக்கி "நீ அரசை ஏற்றுக் கொள்" என்ற பொழுது அவன் முகமானது சீற்ற நெருப்பினால் பற்றி எரிகிறது. அந்த நெருப்பிலே பரதனின் உடல் கரிந்து காட்சி தருகிறதாம். இந்த அழகான உருவகம் அமைந்த பாடல் அடிகள் இவை;

1. திருகிய சீற்றத்தால் செம்மையாய் (முகம்) நிறம்
கருகிய (உடல்) அண்ணல்.

இலக்குமணன் சீற்றங்கொண்டு கூறும் வஞ்சின உரையிலே வரும் உருவகங்களும் படித்து நயத்தற்குரியவனே.

(இ) தற்குறிப்பேற்ற அணி

புலவன் தனது குறிப்பினை இயற்கைப் பொருள்களிலும், நிகழ்ச்சிகளிலும் ஏற்றிக் கூறும் அணி தற்குறிப்பேற்ற

அணியின் பாற்படும். கீழ்வரும் பாடலில் தற்குறிப்பேற்ற அணியைக் காணலாம்.

படம்செய்ந் நாகணைப் பள்ளி நீங்கினான்
இடம்செய் தொல்குலத்து இறைவன் ஆதலால்
தடம்செய் தேரினான் தானும் நீரினால்
கடன்செய் வான்எனக் கடலில் மூழ்கினான்.

சுவைகள்:

திருவடிசூட்டு படலத்தில் அவலச் சுவையே மிகுந்து நிற்றல் காணலாம். பரதனின் சோக நிலையும் கூற்றுக்களும் இராமன் தந்தையின் இழப்பால் வருந்திப் புலம்பலும் இராமனிடம் பாதுகை பெற்று வந்து நந்திக்கிராமத்தில் அவற்றை அரியணை ஏற்றிப் பரதன் துறவொழுக்கம் பூண்டு இடைவிடாது சொரியும் கண்ணீரும் அவலச் சுவையை மிகுவிப்பன. இந்த அவலத்தைச் சமன் செய்யும் வகையில் அற்புதமும் (வியப்பும்) சிருங்காரமும் (காதலும்) பரத்துவாச முனிவரின் விருந்தின்போது மேலெழல் காணலாம்.

புகழ்வது போலப் பழித்தல் என்பது 'அங்கதம்' என்னும் ஒருவகைச் சுவை. இலக்குமணன் பரதனைத் தவறாகக் கருதிச் சீற்றம் கொண்டு நிற்கிறான். இராமன் பரதனின் உண்மை நோக்கத்தைத் தெளிவு படுத்தியபின்னரும் அவன் சீற்றம் ஆறவில்லை. பரதனை நேரிற் கண்ட பின்னரே அவன் தன் தவற்றினை உணர்கின்றான். அது காலை இராமன் இலக்குமணனை நோக்கிக் கூறிய கூற்று அங்கதச்சுவைக்கு நல்ல எடுத்துக்காட்டு.

"..............இளையஐய நீ
தேர்ப்பெருந் தானையைப் பரதன் சீறிய
போர்ப்பெரும் கோலத்தைப் பொருந்த நோக்கு"
[என்றான்

கையாண்ட பாவினம்

''விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்'' என்று கம்பரை அறிஞர் போற்றுவர். தமக்கு முன்பிருந்த விருத்த மாகிய பாவினத்தைத் தமது தேவைக்குப் போதியதாகக் காணாததால், விருத்தத்தில் பல்வேறு வண்ணங்கள் (சந்தங் கள்) அமையுமாறு புதியவையாய் ஆக்கி மேற்குறித்த புகழுக்கு அவர் உரியவரானார். நிகழ்ச்சிகளின் உணர்வு நிலைகளுக்கேற்ப ஓசை மாற்றங்களை அமைப்பதில் கம் பருக்கு ஈடு இணையில்லை. ஆனால், திருவடிசூட்டுபட லத்திலே, உணர்ச்சி மாற்றங்களுக்கு அதிகவாய்ப்பில்லை. நிகழ்ச்சியை ஆற்றொழுக்காக எடுத்துரைத்தல், உரை யாடல்களைப் பண்புகெடாது அறிவுசார் நிலையில் வழங்கு தல் என்ற கட்டுப்பாடுகள் காரணமாக மூன்றுவகையான பாவினங்களே கையாளப்பட்டுள்ளன. கலிவிருத்தம் (130) (நாற்சீர் அளவடி நான்கு கொண்டது), அறுசீர்க்கழி நெடி லடி ஆசிரிய விருத்தம் (2) நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா (9) என்பனவே காணப்படுகின்றன.

நிறைவுரை

'கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்து' கம்பரா மாயண என்ற காவிய கோபுரத்தைச் சமைத்தளித்த மைக்கு ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக இவ்வறிமுகம் அமைந்தது. பொதிகை முனியாகிய அகத் தியரைக் குறிப்பிடுகையில்,

'என்றுமுள செந்தமிழ் இயம்பி இசை கொண்டான்' எனக் கம்பர் அகத்தியரைப் புகழ்ந்துரைத்தமை கவிச்சக்கர வர்த்தி கம்பருக்கும் முற்றிலும் பொருந்துவதே.

ஆம்! 'என்றுமுள செந்தமிழ் இயம்பி இசை கொண் டார் 'கம்பர்' என்பதற்கு ஐயம் இல்லை.

★

முன்கதை

கோசல நாட்டை, அயோத்திமாநகரைத் தலைநகராகக் கொண்டு பல ஆண்டுகளாகச் செங்கோல் செலுத்தி வந்த தசரதன், தன் முதல் மகனான இராமனுக்கு முடிசூட்டி வைத்துத் தான் தவஞ் செய்யச் செல்ல எண்ணிக் குலகுருவான வசிட்டர் மூலம் நல்லநாட் குறிப்பித்து முடிசூட்டு விழாவுக்கான ஆயத்தங்களைச் செய்தான். ஆனால் அவன் எண்ணம் நிறைவேறவில்லை. அவனுடைய இரண்டாவது மனைவியான கைகேயி, தன் பணிப்பெண்ணான மந்தரை என்ற கூனியின் துர்ப்போதனைக்கு ஆட்பட்டு, முன்னர் தசரதன் தனக்குத் தருவதாய் உறுதி அளித்திருந்த இருவரங்களில் ஒன்றால், இராமன் பதினான்காண்டுகள் காடாளவும் தன் மகன் பரதன் நாடாளவும் வேண்டி, தசரதன் பலவாறு மன்றாடியும் கேளாது பிடிவாதம் செய்து, இராமனைக் காட்டுக்கு அனுப்பி வைத்தாள். இராமனோடு அவன் மனைவி சீதையும், தம்பி இலக்குமணனும் (தசரதனின் மூன்றாவது மனைவி சுமித்திரையின் இரு மக்களுள் ஒருவன், மற்றவன் சத்துருக்கன்) காடு சென்று சித்திரகூட மலையிலே பரத்துவாச முனிவரின் அநுசரணையோடு வாழ்ந்து வந்தனர். தசரதன் இராமனின் பிரிவாற்றாது இறந்து போனான்.

இவையெல்லாம் அயோத்தியில் நிகழ்கையில், தன் தாய்வழிப் பாட்டனான கேகயன் நாட்டுக்குப் பரதனும் அவன் தம்பி சத்துருக்கனும் சென்றிருந்தனர். அவர்களுக்கு இவை ஒன்றும் தெரியாது.

பரதன் நாடு திரும்பியதும் மயான அமைதியும் சோகமும் கௌவியிருந்த அயோத்தியையே கண்டான். தாயின் சூழ்ச்சியால் அண்ணன், சீதையோடும் இலக்குவனோடும் காடுசென்றமை, அப்போதுதான் தெரிந்தது. அண்ணனில் ஆரா அன்பு பூண்டிருந்த பரதனுக்குத் தாயின் செயல்

கடுஞ்சீற்றத்தைக் கிளப்பியதில் வியப்பில்லை. அவனுக்கோ நாட்டாட்சியில் எள்ளளவேனும் விருப்பமும் இல்லை இவையாவிலும் மேலாகத் தன் தந்தை தசரதன், கைகேகியிலும் தன்னிலும் கொண்ட வெறுப்பால், தாயை மனைவி நிலையினின்றும் தன்னை மகன் நிலையினின்றும் துறந்ததைக் குலகுருவான வசிட்டர் மூலம் அறிந்து அவன் அவமானமும், வேதனையும் எல்லை கடக்கத் தாயைக் கண்டவாறு ஏசினான்; காடு சென்று இராமனை அழைத்து வந்து அவனுக்கு முடிசூட்டப் போவதாய் உறுதிபூண்டு தாய்மார், சுற்றத்தவர், மந்திரிமார், சேனை வீரர் யாவரோடும், துறவிக் கோலத்திற் புறப்பட்டுக் கங்கையை இராம பக்தனான குகன் மூலம் கடந்து சித்திரகூட மலையை அடைந்து பரத்துவாச முனிவரைக் கண்டான்.

உ

திருவடி சூட்டு படலம்

பரதன் இராமனின் பாதுகைகளைப் பெற்றுத் தன் தலையிலே சூடி, நாடு திரும்புவதை விரித்து உரைப்பது இப்படலம்.

பரத்துவாச முனிவனும் பரதனும் உரையாடல்.

1\. வந்த மாதவத் தோனையம் மைந்தனுந்
தந்தை யாமெனத் தாழ்ந்து வணங்கினா
னிந்து மோலியன் னானு மிரங்கினா
னந்த மின்னலத் தாசிகள் கூறினான்.

பதப்பிரிப்பு:

1\. வந்த மாதவத் தோனை அம்மைந்தனும்
தந்தையாம் எனத் தாழ்ந்து வணங்கினான்
இந்து மோலி அன்னானும் இரங்கினான்
அந்தம் இல்நலத்து ஆசிகள் கூறினான்.

பொழிப்பு:

அந்த மைந்தனாகிய பரதன் (தன்னை எதிர் கொள்ள வந்த) பெருந்தவத்தினனான பரத்துவாச முனிவனைத் தன் தந்தையாய் நினைந்து வணங்கினான். சந்திரனை முடியிற் கொண்ட சிவபெருமானை ஒத்த அம்முனிவனும் அன்பு கூர்ந்து முடிவில்லாத நன்மைகளை அளிக்கக்கூடிய வாழ்த்துக்களை, (பரதனுக்குக்) கூறினான்.

அருஞ்சொற் பொருள்:

இந்து - சந்திரன், மோலி (மௌவி) - முடி. சந்திரனை முடியிலே தரித்தவன் என்பதை இந்துமோலி என்ற சொற்றொடர் குறிக்கிறது. இது வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

2. எடுத்த மாமுடி சூடிநின் பாலியைந்
தடுத்த பேரர சாண்டிலை யையநீ
முடித்த வார்சடை யோடு முனிவர்தூ
சுடுத்து நண்ணுதற குற்றுளதி யாதென்றான்

பதப்பிரிப்பு]

''எடுத்த மாமுடி சூடி நின்பால் இயைந்து
அடுத்த பேரரசு ஆண்டிலை ஐய நீ
முடித்த வார்சடையோடு முனிவர் தூசு
உடுத்து நண்ணுதற்கு உற்று உளதுயாது?''
என்றான்

பொழிப்பு

''ஐயனே, உனக்கு வந்து பொருந்தியதான பேரரசினை நீ முடிசூடி ஆட்சி புரியவில்லை. [மாறாக] முடித்த சடைத் தொகுதியோடும் முனிவர் உடுத்தும் மரவுரியோடும் இவ்விடம் வருவதற்கான காரணம் யாது?'' என்று [பரத்துவாச முனிவன்] பரதனை வினாவினான்.

அருஞ்சொற் பொருள்:

இயைந்து பொருந்தி, தூசு – ஆடை, துணி. [ஈண்டு முனிவர் உடுத்தும் மரவுரியாடையைக் குறித்தது.]

3. சினக்கொ டுந்திறற் சீற்றவெந் தீயினான்
மனக்க டுப்பினன் மாதவத் தோங்கலை
யெனக்க டுத்தது செய்திலே னென்றசொ
லுனக்க டுப்பதன் றாலுரவோ யெனா.

பதப்பிரிப்பு:

சினக் கொடும்திறல் சீற்றவெம் தீயினான்
மனக்கடுப்பினன் மாதவத்து ஓங்கலை
''எனக்கு அடுத்தது செய்திலென் என்ற [சொல்
உனக்கு அடுப்பது அன்றால் உரவோய்'' எனா

பொழிப்பு:

சினமாகிய கொடிய வலிமைமிக்க கோபமாகிய நெருப்பினையும் மனக்கொதிப்பினையும் உடைய வனான பரதன், பெருந்தவத்து மலைபோன்ற வனான (பரத்துவாச முனிவனை) நோக்கி, 'எனக் குக் குறித்ததாகிய செயலை நான் செய்யவில்லை. நீதி நெறியுணர்ந்த, அறிவு வலிமை மிக்க உனது தகைமைக்கும் இவ்வாறு வினாவுதல் தக்கதன்று'' என்று,

அருஞ்சொற் பொருள்:

மனக்கடுப்பு—உள்ளக்கொதிப்பு ஓங்கல்—மலை (ஈண்டு பெருந்தவத்தில் மலையினை ஒத்தவன் எனப் பரத்துவாச முனிவன் குறிக்கப்படுகின்றான்) உரவோய் (அறிவாகிய) வலிமையுடையவனே! எனா — என்று.

4. மறையின் கேள்வற்கு மன்னிளந் தோன்றல்பின்
முறையி னீங்கி முதுநிலங் கொள்கிலே
னிறைவன் கொண்டில னாமெனின் யாண்டெலா
முறைவென் கானத் தொருங்குட னேயென்றான்

பதப்பிரிப்பு:

''மறையின் கேள்வற்கு மன்இளம் தோன்றல் பின்
முறையின் நீங்கி முதுநிலம் கொள்கிலேன்
இறைவன் கொள்கிலன் ஆம்எனின் யாண்டு எலாம்
உறைவென் கானத்து ஒருங்குஉடன்'' என்றான்.

பொழிப்பு:

மறையின் நாயகனான (இராமபிரானுக்குப்) பின்னர்தோன்றிய [1]பரதன், ''மூத்தவனுக்கு உரியது அரசு என்ற முறைமையை விடுத்துப்பழைமையான அரசினை நான் கொள்ள மாட்டேன். தலைவனான (இராமன்) அதனை ஏற்றுக்கொள்ள மறுப்பானாயின் நானும் அவன் காட்டில் உறையப்போகும் ஆண்டுகள் யாவிலும் ஒருங்குகூடி வாழ்வேன்'' என்றான்.

அருஞ்சொற் பொருள்:

கேள்வன் கணவன், ஈண்டுத் (தலைவனான இராமனைக்) குறித்தது இறைவன் – தலைவன். (இராமன்). யாண்டு -ஆண்டுகள், உறைவென்- வாழ்வேன் 3–4 பாடல்கள், என்றான் என்ற ஒரே பயனிலை கொண்டு முடிந்தன இவ்வாறு முடிவதைக் குளகச் செய்யுள் என்பர்

5. உரைத்த வாசகங் கேட்டலு முள்ளெழுந்
திரைத்த காத லிருந்தவத் தோர்க்கெலாங்
குரைத்த மேனியோ டுள்ளங் குளிர்ந்ததா
லரைத்த சாந்துகொ டப்பிய தென்னவே

பதப்பிரிப்பு:

5. உரைத்த வாசகம் கேட்டலும் உள்ளெழுந்து
இரைத்த காதல் இருந்தவத்தோர்க்கு எலாம்
குரைத்த மேனியொடு உள்ளம் குளிர்ந்ததால்
அரைத்த சாந்துகொண்டு அப்பியது என்னவே.

பொழிப்பு:

பரதன் கூறிய வாசகத்தினைக் கேட்டலும், இராமன்மீது தங்கள் மனத்திலே பொங்கி எழுந்த காதலானது மிகுதியானதால் பெரிய தவத்தில் உயர்ந்த முனிவர்கள் யாவர்க்கும் உள்ளங்கள் பூரித்ததோடு, அரைத்த சந்தனம் கொண்டு உடலெங்கும் அப்பிவிட்டது போன்று குளிர்ச்சியும் அடைந்தன.

அருஞ்சொற் பொருள்

இரைத்த – பொங்கிய, குரைத்த – பூரித்த:

பரதனின் கூட்டத்திற்கு விருந்தளிக்கப் பரத்துவாச முனிவன் எண்ணுதல்

6. ஆய காதலொ டையனைக் கொண்டுதன்
றூய சாலை யுறைவிடந் துன் னினான்
மேய சேனைக் கமைப்பென் விருந்தெனாத்
தீயி னாவுதி செங்கையி னீக்கினான்.

பதப்பிரிப்பு:

ஆய காதலொடு ஐயனைக் கொண்டுதன்
தூய சாலை உறைவிடம் துன்னினான்
'மேய சேனைக்கு அமைப்பென் விருந்து' எனாத்
தீயின் ஆவுதி செங்கையில் நீக்கினான்.

பொழிப்பு:

அவ்வாறு உடலும் உள்ளமும் [குளிரப்பெற்றதான] அன்புடனே பரத்துவாசமுனிவன் தனது தூய்மையான பர்ணசாலையை அடைந்து, ''பரதனோடு வந்த படையினருக்கு நான் விருந்துக்கான ஆயத்தம் செய்வேன்'' என்றவண்ணம் தனது சிவந்த கைகளினால் ஓமத்தீயிலே ஆகுதியைப் பெய்தான்.

அருஞ்சொற் பொருள்:

சாலை பர்ணசாலை. [இலை, தழைகள் கொண்டு வேய்ந்த குடில்] ஆவுதி ஆகுதி, [மொழியிடைப் போலி], நெய் [ஓமத்தியில் இடப்படுவது.]

முனிவனின் ஆற்றலால் விண்ணுலகே பறந்துவரல்

7. துறந்த செல்வ னிணையத் துறக்கந்தான்
பறந்து வந்து படிந்தது பல்சனர்
பிறந்து வேறொ ருலகுபெற் றாரென
மறந்து வைகினர் முன்னைத்தம் வாழ்வெலாம்.

பதப்பிரிப்பு:

துறந்த செல்வன் நிணையத் துறக்கம் தான்
பறந்து வந்து படிந்தது பல்சனர்
பிறந்து வேறோர் உலகு பெற்றார் என
மறந்து வைகினர் முன்னைத்தம் வாழ்வு எலாம்

பொழிப்பு:

[அகப்பற்று [அகங்காரம்] புறப்பற்று [மமகாரம்] ஆகிய இருவகைப்பற்றுக்களையும் துறந்த ஞானச் செல்வனான பரத்துவாச முனிவன், தனது ஆகுதியை முடித்தபின் விருந்திட வேண்டும் என்று நினைத்தவுடனே சுவர்க்க உலகமே அங்குப் பறந்து வந்தது. படையினராகிய பலரும் "நாம் மறு பிறப்பு எடுத்து வேறோர் உலகினை அடையப் பெற்றோம்" என்று எண்ணித் தம்முடைய வாழ்வனைத்தையும் மறந்து மகிழ்ச்சியிலே திளைத்தனர்.

அருஞ்சொற் பொருள்:

துறக்கம் — சுவர்க்கம், பல்சனர் – பலராகிய மக்கள் [படையினர்]. வைகினர் - வதிந்தனர் — [வதிவதுபோன்று மகிழ்ந்தனர்.]

தேவமாதர் ஆடவருக்குச் செய்த உபசாரம்.

8. நந்த லில்லற நந்தின ராமென
வந்த ரத்தி னரம்பைய ரன்பினர்
வந்து வந்தெதி ரேத்தினர் மைந்தரை
யிந்து விற்சுடர் கோயில் கொண்டேகினார்

பதப்பிரிப்பு:

நந்தல் இல்லறம் நந்தினர் ஆம் என
அந்தரத்து இரம்பையர் அன்பினர்
வந்து வந்து எதிர் ஏத்தினர் மைந்தரை
இந்துவின் சுடர்கோயில் கொண்டு ஏகினார்.

பொழிப்பு:

விண்ணுலகத்துத் தேவமகளிர், கெடுதல் இல்லாத இல்லறத்தின் பயனாலே செழித்தவர்கள் இவர்கள், எனக் கருத்திற் கொண்டவர்களாய், ஆடவர்களை எதிர்கொண்டு வந்து உபசரித்துக் கொண்டாடினார்கள்; சந்திரமண்டலம் போல ஒளிவிட்ட தங்களின் மாளிகைகளுக்கு அழைத்துச் சென்றார்கள்.

அருஞ்சொற் பொருள்:

நந்தல் — கெடுதல், நந்தினர் — செழித்தவர், அந்தரத்து — விண்ணுலகத்து, மைந்தர் — மக்கள் [ஈண்டுப் பரதனோடு வந்தவர்களில் ஆண்களைக் குறிக்கும்]

9. நான நன்குரைத் தார்நளிர் வானிடை
யான கங்கை யரும்புன லாட்டினார்
கான மாமணிக் கற்பகந் தாங்கிய
வூன மின்மல ராடை யுடுத்தினார்

பதப்பிரிப்பு:

நானம் நன்கு உரைத்தார் நளிர்வான் இடை
ஆன கங்கை அரும்புனல் ஆட்டினார்
கானம் மாமணிக் கற்பகம் தாங்கிய
ஊனம் இல்மலர் ஆடை உடுத்தினார்

பொழிப்பு:

தேவமங்கையர் ஆடவருடைய உடல்களிலே வாசனைப் பொடியை நன்றாகத் தேய்த்தனர்; குளிர்ச்சி பொருந்திய வானகங்கை நீரைக்கொண்டு

முழுக்காட்டினர்; நறுமணம் பொருந்தியனவும் பேரழகு பொருந்தியனவுமான கற்பகதரு ஏந்திய குற்றமற்ற மலர்போலும் மென்மையான ஆடைகளை அணிவித்தனர்.

அருஞ்சொற் பொருள்:

நானம் — வாசனைப்பொடி, நளிர் - குளிர்ச்சி, கானம் - நறுமணம், ஊனம் — குற்றம்.

10 கொம்பி னின்று நுடங்குறு கொள்கையார்
செம்பொ னின்கல ராசி திருத்தினா
ரம்ப ரத்தி னரம்பைய ரன்பொடு
மும்பர் கோனுக ரின்னமிழ் தூட்டினார்.

பதப்பிரிப்பு:

கொம்பின் நின்று நுடங்குறு கொள்கையார்
செம்பொன் இன்கலன் ராசி திருத்தினார்
அம்பரத்தின் அரம்பையர் அன்பொடும்
உம்பர் கோன்நுகர் இன்அமிழ்து ஊட்டினார்

பொழிப்பு:

பூங்கொம்புபோல ஒல்கி ஒசிகின்ற அழகிய உருவமுடைய விண்ணுலகத் தேவமாதர்கள், ஆடவருக்குச் சிவந்த பொன்னாலாகிய இனிய அணிகலத் தொகுதியைத் திருத்தமாய் அணிவித்தார்கள். தேவர்களின் அரசனான இந்திரனே உண்ணுவனவாகிய அமிழ்தம் போன்ற சுவையான உணவுகளை அவர்களுக்கு ஊட்டினார்கள்.

அருஞ்சொற் பொருள்:

நுடங்குறு ஒல்கி ஒசிகின்ற [அசைகின்ற], ராசி–தொகுதி, கூட்டம்; உம்பர்–தேவர், கோன்–அரசன். கலன் – ஆபரணம், அம்பரம் – விண்ணுலகம்.

11. அஞ்ச டுத்த வமளி யலத்தகப்
பஞ்ச டுத்த பரிபுரப் பல்லவ
நஞ்ச டுத்த நயனியர் நவ்வியிற்
றுஞ்ச வத்தனை மைந்தருந் துஞ்சினார்.

பதப்பிரிப்பு'

அஞ்சு அடுத்த அமளி அலத்தகப்
பஞ்சு அடுத்த பரிபுரப் பல்லவம்
நஞ்சு அடுத்த நயனியர் நவ்வியில்
துஞ்ச அத்தனை மைந்தரும் துஞ்சினார்

பொழிப்பு:

செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பெற்ற கால்களிலே சிலம்பு அணிந்தவர்களும், நஞ்சுபோன்ற விழிகள் உள்ளவர்களுமான தேவமாதர், (அன்னத்தூவி, இலவம்பஞ்சு, செம்பஞ்சு, மயிற்றூவி, பெண்பஞ்சு என்ற) ஐந்துபொருள்களும் பொதிந்த (மெத்தைப்) படுக்கையில் பெண்மான்களைப் போன்று துயில் கொள்ள, ஆடவர்களும் அவர்களோடு துயின்றார்கள்.

அருஞ்சொற் பொருள்!

அஞ்சு - பொழிப்பிலே காட்டிய ஐந்து வகைப் பொருள்களைக் குறித்தது, அமளி – படுக்கை

(மெத்தை என்பது வருவிக்கப்பட்டது) நயனியர் கண்களையுடைய பெண்கள் (நயனம் கண்), துஞ்ச – துயில் கொள்ள – நவ்வி பெண்மான், பரி புரப் பல்லவம் – சிலம்பு.

12. ஏந்து செல்வத் திமையவ ராமெனக்
கூந்த றெய்வ மகளிர்கொண் டாடினார்
வேந்த ராதி சிவிகையின் வீங்குதோண்
மாந்தர் காறும் வரிசை வழாமலே

பதப்பிரிப்பு:

ஏந்து செல்வத்து இமையவர் ஆம் எனக்
கூந்தல் தெய்வ மகளிர் கொண்டாடினார்
வேந்தர் ஆதி சிவிகையின் வீங்குதோள்
மாந்தர் காறும் வரிசை வழாமலே.

பொழிப்பு:

அரசர் முதல், சிவிகை சுமத்தலால் வீங்கிய தோள்கள் உள்ள மக்கள்வரை, அனைவரும் கூந்தல் *ழகுடன் கூடிய தேவமாதரினால் மிகுந்த செல்வத்தைக் கொண்ட தேவர்கள்போல உபசரிக்கப்பட்டார்கள்.

அருஞ்சொற் பொருள்

இமையவர்– தேவர், வீங்குதோள் – [சிவிகை சுமத்தலால்] வீங்கிப்போன வலியதோள், ஆதி – முதல், காறும் – வரை.

13. மாதர் யாவரும் வானவர் தேவியர்
கோதில் செல்வத்து வைகினர் கொங்கவவாய்த்
தீதில் செல்வ மடந்தையர் சேடியர்
தாதி மாரெனத் தம்பணி கேட்பவே.

பதப்பிரிப்பு:

மாதர் யாவரும் வானவர் தேவியர்
கோதுஇல் செல்வத்து வைகினர்
[கொவ்வை வாய்த்
தீதுஇல் செல்வ மடந்தையர் சேடியர்
தாதிமார் எனத் தம்பணி கேட்பவே.

பொழிப்பு:

பரதனுடன் வந்த கொவ்வைக்கனி போலும் வாயையுடைய பெண்கள் யாவரும், குற்றமில்லாத செல்வம் பொருந்திய தேவமாதர் தமக்குத் தோழி மாரும் பணிப்பெண்களும் போலத் தம்முடைய கட்டளைகளைக் கேட்டு நடக்க, அத்தேவமாதர் போலவே குற்றமில்லாத இன்ப நுகர்ச்சியிலே ஈடுபட்டார்கள்.

அருஞ்சொற் பொருள்:

கொவ்வை — கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயையுடைய பெண்களை குறித்தது. சேடியர் - தோழியர், கோது குற்றம்.

வாடைக்காற்றின் வருகை

14. நந்த நந்த வனங்களி னாண்மலர்க்
கந்த முந்திய கற்பகக் காவினின்
றந்தர் வந்தென வந்திதன் கைதர
மந்த மந்த மணந்தது வாடையே.

பதப்பிரிப்பு:

ந்நத நந்த வளங்களின் நாள்மலர்க்
கந்தம் முந்திய கற்பகக் காவின்நின்று
அந்தர் வந்துஎன அந்திதன் கைதர
மந்த மந்த மணந்தது வாடையே.

பொழிப்பு:

பூஞ்சோலைகளிலே கனிவோடு மலர்கின்ற புதுமலர்களின் நறுமணம் பெருகிச் செழித்துள்ள கற்பகச் சோலையிலிருந்து குருடர் தள்ளாடியபடி வருவதுபோல, அந்திமாலை தனக்குக் கை கொடுத்து உதவ, வாடைக்காற்று மெல்லமெல்ல மணம் வீசி வந்தது

அருஞ்சொற் பொருள்:

நந்த பெருகிச் செழித்த. அந்தர் – (அந்தகர்) குருடர், மந்த மந்த – மெலல மெல்ல, கைதர (தள்ளாடி நடப்பவருக்குக்) கைகொடுத்து உதவ.

யானைகளுக்குக் கற்பகம் வழங்கும் கவளம்

15. மான்ற ளிக்குல னன்மதம் வந்துணத்
தேன்ற ளிர்த்த கவளமுஞ் செங்கதிர்
கான்ற நெற்றழைக் கற்றையும் கறபக
மீன்ற ளிகக நுகர்ந்தன யானையே.

பதப்பிரிப்பு:

மான்று அளிக்குலம் நல்மதம் வந்துஉணத்
தேன் தளிர்த்த கவளமும் செங்கதிர்
கான்ற நெல்தழைக் கற்றையும் கற்பகம்
ஈன்று அளிக்க நுகர்ந்தன யானையே.

பொழிப்பு:

தேனை மிகுதியும் கலந்தனவும் கற்பகதருக்கள் ஈன்றனவுமான சிவந்த நெற் கதிர்களைக்

கொண்ட செந்நெற் பயிர்த்தலைகளைக் கவள மாக்கி வழங்க, யானைகள் அவற்றை உண்டன. அதுகாலை அந்த யானைகளிலிருந்து பெருகிய மதநீரை அருந்திய வண்டுக்கூட்டம் வெறியால் மயங்கின.

அருஞ்சொற் பொருள்:

மான்று - மயங்கி, அளிக்குலம்—வண்டுக் கூட்டம், தளிர்த்த — [மிகுதியும்] கலக்கப்பெற்ற, கான்ற — ஈன்ற, நுகர்ந்தன - உண்டன.

யானைகள் நீர் அருந்தல், குதிரைகள் புல் மேய்தல்

16. நரக தர்க்கற நல்கு நலத்தநீர்
கரக தக்கரி காலிமிர்த் துண்டன
மரக தத்தின் கொழுந்தென வார்ந்தபுல்
குரக தததன் குழாங்களுங் கொண்டவே.

பதப்பிரிப்பு:

நரகம் தர்க்குஅற நய்கும் நலத்தநீர்
கரம்கதம்கரி கால்நிமிர்ந்து உண்டன
மரகதத்தின் கொழுந்துஎன வார்ந்தபுல்
குரகதத்தின் குழாங்களும் கொண்டவே

நரகத்தின் கொடுமை அற்றுப் போக உதவும் நன்மையை உடைய தேவகங்கையின் நீரினைத் துதிக்கையும் கோபமும் உடைய யானைகள் கால் நிமிர்த்தி நின்று அருந்தின. மரகத மணியின் இளம் ஒளிஎன வளர்ந்த புற்களைக் குதிரைக் கூட்டம் மேய்ந்தன.

அருஞ்சொற் பொருள்

தர்க்கு—கொடுமை, அற அற்றுப்போக, கதம்—கோபம், கரி – யானை, கொழுந்து – இளம் ஒளி. வார்ந்த வளர்ந்த, குரகதம் – குதிரை, குழாம் கூட்டம்.

பரதனின் உணவு

17. இன்ன ரின்னணம் யாவரு மிந் திரன்
றுன்னு போகங்கடுய்த்தனர் தோன்றல்தா
னன்ன காயுங் கிழங்குமுண் டப்பகல்
பொன்னின் மேனி பொடியுறப் போக்கினான்.

பதப்பிரிப்பு:

இன்னர் இன்னணம் யாவரும் இந்திரன்
துன்னும் போகங்கள் துய்த்தனர்
[தோன்றல் தான்
அன்ன காயும் கிழங்கும் உண்டு அப்பகல்
பொன்னின் மேனி பொடி உறப்
[போக்கினான்

பொழிப்பு

எல்லாரும் இத்தன்மையராய் இவ்வாறு இந்திரனுக்குப் பொருந்தியன போன்ற இன்பங்களை நுகர்ந்தனர். தோன்றலாகிய பரதனோ அத்தன்மையனவான காய்களையும் கிழங்குகளையும் தனது பொன்னிறம் பொருந்திய உடலானது புழுதியிலே புரளும் வண்ணம் கிடந்து உண்டு, அந்த நாளைக் கழித்தான்.

அருஞ்சொற் பொருள்:

இன்னர் இத்தன்மையர், இன்னணம் – இவ் வாறு, துன்னும் – பொருந்தும், துய்த்தனர் – நுகர்ந்தனர், அன்ன – அத்தன்மையான, பொடி புழுதி.

கதிரவன் தோற்றம்

18. நீல வல்லிரு ணிங்கலு நீங்குமம்
மூல மில்கன விற்றிருண் முற்றுற
வேலு நல்வினை துய்ப்பவர்க் கீறுசெல்
கால மென்னக் கதிரவன் தோன்றினான்.

பதப்பிரிப்பு:

நீல வல்இருள் நீங்கலும் நீங்கும்அல்
மூலம்இல் கனவு இற்று இருள் முற்றுஉற
ஏலும் நல்வினை துய்ப்பவர்க்கு ஈறுசொல்
காலம் என்னக் கதிரவன் தோன்றினான்.

பொழிப்பு:

நீல நிறமுடைய வலிய இருளானது நீங்குதலும், நீங்கிவிடுகின்ற ஆதாரம் இல்லாத கனவு போல, முதல்நாள் பரதனுடைய பரிவாரம் அநுபவித்த இன்பங்கள் முடிவுற்றன. தமக்கு ஏற்பன வாகிய புண்ணியப் பயனை அநுபவிப்பவருக்கு வருகின்ற இறுதிக்காலம் போலச் சூரியன் உதித்தான்.

அருஞ்சொற் பொருள்

மூலம் – ஆதாரம், முற்றுற – முடிவடைய ஏலும் – ஏற்பன. ஈறு – முடிவு.

கனவாய் மறைந்த இன்பங்கள்

19. ஆறி நின்றற மாற்றலர் வாழ்வெனப்
பாறி வீழ்ந்தது செல்வம் பரிந்திலர்
தேறி முந்தைத்தஞ் சிந்தைய ராயினார்
மாறி வந்து பிறந்தனை மாட்சியார்.

பதப்பிரிப்பு:

ஆறி நின்று அறம் ஆற்றலர் வாழ்வுஎனப்
பாறி வீந்தது செல்வம் பரிந்து இலர்
தேறி முந்தைத்தம் சிந்தையர் ஆயினார்
மாறி வந்து பிறந்து அனை மாட்சியார்.

பொழிப்பு:

(மனம், மொழி, மெய், உடல்) ஆகியன, அடங்கி நின்று தருமத்தைச் செய்யாதவர்களின் வாழ்வு போல முதல்நாள் பரிவாரத்தினர் அனுபவித்த செல்வம் பாறி வீழ்ந்தது, ஆனால் அதற்காக அவர்கள் வருந்தவில்லை மாறாக மறு பிறப்பு எடுத்து வந்தவர் போல மனம் தேறியவர்களாய், அவர்கள், முன்பு தமக்குள்ள எண்ணத்தை (தசரதன் இறப்பாலும், பரதனின் சோகத்தாலும், இராமனின் பிரிவாலும் வருந்துவதாகிய எண்ணத்தை) மீண்டும் உடையவர்களானார்கள்.

பரதனின் சேனை பாலைவனத்தை அடைதல்

20. காலையன் றெழுந்தது கண்டு வானவர்
வேலையன் றனிகமே யென்று விம்மறச்
சோலையும் கிரிகளுஞ் சுண்ண மாயெழப்
பாலைசென் றடைந்தது பரதன் சேனையே.

பதப்பிரிப்பு:

காலை அன்று எழுந்தது கண்டு வானவர்
வேலை அன்று அனிகமே என்று விம் அறச்
சோலையும் கிரிகளும் சுண்ணமாய் எழப்
பாலைசென்று அடைந்தது பரதன் சேனையே.

பொழிப்பு:

அன்று காலை உதயத்தில் துயிலெழுந்த பரதனின் சேனை சோலைகளையும் மலைகளையும் கடந்து எங்கும் புழுதி எழும்படி சென்று பாலை நிலத்தை அடைந்தது. அதன் பெருக்கத்தை முதலிலே கடல் என்று மயங்கிய தேவர்கள், பின்னர் அது சேனைதான் என்று தமது ஐயம் நீங்கினார்.

அருஞ்சொற்பொருள்:

வேலை — கடல் – அனிகம் – சேனை.
விம்-ஐயம், கிரிகள்—மலைகள், சுண்ணம்—புழுதி.

பாலையும் சோலையாயிற்று

21. எழுந்தது துகளதி னெரியும் வெய்யவ
னழுந்தின னவிப்பரும் வெம்மை யாறினான்
பொழிந்தன கரிமதம் பொடிவெங் கானக
மிழிந்தன வழிநடந் தேறொ ணாமையே.

பதப்பிரிப்பு:

எழுந்தது துகள் அதின் எரியும் வெய்யவன்
அழுந்தினன் அவிப்புஅரும் வெம்மை [ஆறினான்
பொழிந்தன கரிமதம் பொடிவெம் கானகம்
இழிந்தன வழிநடந்து ஏறு ஒணாமையே.

பொழிப்பு:

புழுதி எழுந்தது. அந்தப் புழுதியில் அழுந்திய கதிரவன் கொதிக்கும் இயல்பு பொருந்தியவனாயிருந்தும் தணிக்க முடியாத தனது வெப்பம் தணிந்தான். யானைகள் மதம் பொழிந்தன. வழி நடந்து செல்ல முடியாதவாறு, பரவியிருந்த புழுதியை அந்த மதம் நனைத்ததால், வழுக்கல் உண்டாயிற்று.

அருஞ்சொற் பொருள்:

அழுந்தினன் ஆழ்ந்து போனான், பொடி- புழுதி, இழிந்தன - (வீழ்ந்து) பெருகின.

22 வடியுடை பயிற்படை மன்னர் வெண்குடை
செடியுடை நெடுநிழல் செய்த தீப்பொதி
படியுடைப் பாலுறைப் பாலை மேலுயர்
கொடியுடைப் பந்தரிற் குளிர்ந்த தெங்குமே.

பதப்பிரிப்பு:

வடிஉடை அயிற்படை மன்னர் வெண்குடை
செடியுடை நெடுநிழல் செய்த தீப்பொதி
படிஉடைப் பரல்உறை பாலை மேல்உயர்
கொடிஉடைப் பந்தரில் குளிர்ந்தது எங்குமே,

பொழிப்பு:

கூரிய வேற்படையுடைய அரசர்களின் வெண் கொற்றக் குடைகள் நீண்ட நிழலினை ஆக்கின. இதனால் நெருப்புப் பொதிந்தாற் போன்ற தரையிலே பரற்கற்கள் உறுத்துகின்ற பாலையின்மீது உயர்ந்து படர்ந்த கொடிப்பந்தல் போல எங்கும் குளிர்ச்சி உண்டாயிற்று.

அருஞ்சொற்பொருள்:

வடி - (வடித்த) கூரிய, அயில் - வேல், படி— தரை.

23. பெருகிய செல்வநீ பிடிஎன் றாள்வயிற்
றிருகிய சீற்றத்தாற் செம்மை யாய்நிறங்
கருகிய வண்ணலைக் கண்டு காதலி
னுருகிய தளிர்த்தன வுலவை யீட்டமே.

பதப்பிரிப்பு:

பெருகிய செல்வம் நீ பிடிஎன் றாள் வயின்
திருகிய சீற்றத்தால் செம்மையாய் நிறம்
கருகிய அண்ணலைக் கண்டு காதலின்
உருகிய தளிர்த்தன உலவை ஈட்டமே.

பொழிப்பு:

''மிகுதியான நாட்டாட்சிச் செல்வத்தை நீ ஏற்றுக்கொள்'' என்ற கைகேயிமீது மாறுபட்டுத் தான் கொண்ட கோபத்தால், முகம் சிவந்து உடல் கறுத்த உயர்ந்தவனாம் பரதனின் மீது பரிவு கொண்டதால், உருகிப் போய்ப் பட்டமரங்கள் தளிர்த்தன.

அருஞ்சொற் பொருள்:

திருகிய — மாறுபட்ட, உலவை பட்ட மரக் கூட்டம், அண்ணல் - உயர்ந்தோன், மேலோன்.

பரதனின் முகமானது தீயாக, அத்தீயிலே அவனது உடல் கருகியது, என்ற உருவகம் மிக்க நயம் உடையது. வயின் இடப்பொருளில் வந்த ஏழாம் வேற்றுமையுருபு.

பரதனின் படை சித்திரகூடமலை நோக்கிப் பாலைவனத்தினூடாகச் செல்லல்.

24. வன்றெறு பாலையை மருத மாமெனச்
சென்றது சித்திர கூடஞ் சேர்ந்ததா
லொன்றுரைத் துயிரினு மொழுக்க நன்றெனப்
பொன்றிய புரவலன் பொருவில் சேனையே.

பதப்பிரிப்பு:

வன் தெறு பாலையை மருதம் ஆம் எனச்
சென்றது சித்திர கூடம் சேர்ந்ததால்
பொன்று உரைத் துயிரினும் ஒழுக்கம் (நன்று எனப்
பொன்றிய புரவலன் பொரு இல் சேனையே.

பொழிப்பு:

உயிரினும் ஒழுக்கமே சிறந்தது என்று ஒன்றாகிய சத்தியத்தை உரைத்து உயிர்விட்ட காவலனாகிய தசரதனின் ஒப்பில்லாத சேவையானது தனது வலிமையாலே வருத்துவதாகிய பாலை. மருதநிலம் போலக் குளிர்மை செய்யச் சென்று சித்திரகூட மலையினை அடைந்தது.

அருஞ்சொற் பொருள்:

தெறுதல் — வருத்தல், ஒன்று – (ஒப்பில்லாத) சத்தியம் (எண்ணளவையாகு பெயர். புரவலன் - காவலன், பொன்றிய — இறந்த.

25. தூளியின் படலையுந் துரகந் தேரோடு
மூளிருஞ் சினக்கரி முழங்கு மோதையு
மாளிருங் குழுவின ரார வாரமும்
கோளிரும் படையிதென் றுணரக் கூறவே.

பதப்பிரிப்பு:

தூளியின் படலையும் துரகம் தேரோடும்
மூள் இரும் சினக்கரி முழங்கும் ஓதையும்
ஆள் இரும் குழுவினர் ஆரவாரமும்
கோள் இரும் படை இது என்று உணரக் கூறமே

பொழிப்பு:

புழுதித் திரளோடு குதிரைகளும், தேர்களும், மூண்டு எழும் சினம் பொருந்திய யானைகளும் முழங்குவதால் உண்டாகும் பேரோசை, பெரிய காலாட்படையினரின் ஆரவாரம் ஆகியன, 'இது மிகப்பெரிய படைதான் என்று அறிந்து கூறும் வண்ணமாய்க் காட்சியளித்தன.

அருஞ்சொற் பொருள்:

தூளி புழுதி, படலை - திரள். இரும் பெரிய. ஓதை—ஓசை, ஆள்-காலாட்படை, கோள் இரும் — வலிய பெரிய, துரகம் — குதிரை.

இலக்குமணன் பரதனின் சேனையைக் காணல்

26. எழுந்தன னிளையவ னேறி னானிலங்
கொழுந்துயர்ந் தனையதோர் நெடிய குன்றின்மேற்
செழுந்திரைப் பரவையைச் சிறுமை பேசிய
கழுந்துடை வரிசிலைக் கடலை நோக்கினான்.

பதப்பிரிப்பு:

எழுந்தனன் இளையவன் ஏறினான் நிலம்
கொழுந்து உயர்ந்து அனையது ஓர் நெடிய [குன்றின் மேல்
செழும்திரைப் பரவையைச் சிறுமை பேசிய
கழுந்து உடை வரிசிலைக் கடலை நோக்கினான்

பொழிப்பு:

சேனையின் வருகையால் உண்டான ஆரவார ஓசையினைக் கேட்ட இளையவனான இலக்குமணன் எழுந்தான்; நிலவுலகமே கொழுந்து விட்டு உயர்ந்து எழுந்தது போன்ற உயர்ந்த பெரிய குன்றின்மேல் ஏறினான்; செழிப்பான அலைகளையுடைய கடலையும் சிறுமை செய்யத்தக்க வலிமையான கட்டமைந்த வில்லேந்திய சேனாசமுத்திரத்தைக் கண்டான்.

அருஞ்சொற் பொருள்

கொழுந்து – சுடர், அனையது – போன்றது.
பரவை - கடல், கழுந்து — வலிமை.
வரிசிலை — வரிந்து கட்டப்பட்டவில்.

இலக்குமணன் சீற்றம்

27. பரதனிப் படைகொடு பார்கொண்டான் மறங்
கருதியுட் கிடந்ததோர் கறுவு காதலால்
விரதமுற் றிருந்தவன் மேல்வந் தானிது
சரதமற் றிலதெனத் தழங்கு சீற்றத்தான்.

பதப்பிரிப்பு:

பரதன் இப்படையொடு பார்கொண்டான் [மறம்
கருதிஉள் கிடந்ததோர் கறுவும் காதலால்
விரதம்முற்று இருந்தவன் மேல்வந்தான் இது
சரதம்மற்று இலதுஎனத் தழங்கும் சீற்றத்தான்

பொழிப்பு:

"இந்த நிலவுலகம் முழுவதையும் தன்னுடைய தாக்கி, அரசாள வேண்டும் என்ற கொடிய செய

வினைத் தன் மனத்திலே எண்ணியவனாய், மனத்திலே வரித்த ஆசையால் படைகொண்டு, முழுமையான (தந்தை சொல் காத்தலாகிய) விரதத்தினைப் பூண்ட இராமனோடு போருக்கு எழுந்து வந்தான் இவன். இது உண்மை. வேறு ஒன்றும் இல்லை'' என்று மிகுதியான கோபம் உடையவனான இலக்குமணன்,.....

அருஞ்சொற் பொருள்:

மறம் (அறத்துக்கு மாறான) கொடுஞ் செயல் கறு மனவைராக்கியம், மேல்வந்தான் — (இராமனோடு) போருக்கு வந்தான், சரதம் — உண்மை, தழங்கு ஒலி ஈண்டு மிகுதியைக் குறித்தது)

28. குகித்தனன் பாரிடைக் குவடு நீறெழ
மிதித்தன னிராமனை விரைவி னெய்தினான்
''மதித்திலன் பரதனின் மேல்வந்தான் மதிற்
பதிப்பெருஞ்சேனையின் பரப்பினா னென்றான்''

பதப்பிரிப்பு:

குகித்தனன் பார்இடைக் குவடு நீறுஎழ
மிதித்தனன் இராமனை விரைவின் எய்தினான்
''மதித்துஇலன் பரதன்நின் மேல்வந்தான் [மதில்
பதிப்பெரும் சேனையின் பரப்பினான்'' [என்றான்.

பொழிப்பு:

மலைச் சிகரம் பொடிப் பொடியாகும் வண்ணம் குறித்தான்; விரைவில் இராமனைச் சென்றடைந்தான்; ''பரதன் உனது பெருமையை

மதித்திலன். மதில் சூழ்ந்த நகரமாகிய அயோத்தியின் பெரும் படையுடன் உன்னோடு போர் நிகழ்த்த வந்துள்ளான்'' என்றான்.

அருஞ்சொற் பொருள்

குவடு – மலைச்சிகரம், நீறு – பொடி, பதி – (அயோத்தி) நகரம்

[27, 28 ஆம் பாடல்கள் குளகமாய் அமைந்துள்ளன]

இலக்குமணனின் போர் ஆயத்தம்.

29. கட்டினன் சுரிகையுங் கழலும் பல்கணைப்
புட்டிலும் பொறுத்தனன் கவசம் பூட்டமைத்
திட்டன னெடுத்தனன் வரிவி லேந்தலைத்
தொட்டடி வணங்கிநின் றினைய சொல்லினான்

பதப்பிரிப்பு:

கட்டினன், சுரிகையும் கழலும் பல்கணைப்
புட்டிலும் பொறுத்தனன், கவசம் பூட்டு [அமைத்து
இட்டனன், எடுத்தனன் வரிவில் ஏந்தலைத்
தொட்டு அடி வணங்கிநின்று இனைய [சொல்லினான்

பொழிப்பு:

(இலக்குமணன்) உடைவாளை இடையிற் கட்டினான்; வீரக்கழலைக் காலில் அணிந்தான்; பல கணைகள் நிறைந்த அம்பறாத் தூணியைத்

தோளிலே இட்டான்; வீரகவசத்தை (மார்பிலே) தரித்தான்; வரிந்து கட்டிய வில்லை எடுத்தான்; இராமனின் கால்களைத் தொட்டு வணங்கி இவ் வாறு சொன்னான்.

அருஞ்சொற் பொருள்:

சுரிகை – உடைவாள், கணைப் புட்டில் – அம் பறாத்தூணி, இனைய – (இவற்றை) இவ்வாறு.

இலக்குமணனின் சூளுரை

30. இருமையு மிழந்தவப் பரத னேந்துதோட்
பருமையு மன்னவன் படைத்த சேனையின்
பெருமையு நின்னொரு பின்பு வந்தவென்
னொருமையும் கண்டினி யுவத்தி யுள்ளநீ.

பதப்பிரிப்பு:

"இருமையும் இழந்த அப் பரதன் ஏந்துதோள்
பருமையும் அன்னவன் படைத்த சேனையின்
பெருமையும் நின்ஒரு பின்பு வந்தஎன்
ஒருமையும் கண்டு இனி உவத்தி உள்ளம் நீ."

பொழிப்பு:

"இம்மை மறுமையாகிய இரண்டினதும் இன் பங்களை இழந்துவிட்ட பரதனது தோள் களின் பருப்பத்தினையும் அவனுக்கு உண்டாகிய படையின் பெருமையையும் உனக்குப் பின் பிறந்த தனியனான என்னுடைய ஒப்பற்ற ஆற்றலையும் இனி நீ கண்டு உள்ளம் மகிழ்வாயாக."

அருஞ்சொற் பொருள்:

இருமை — இம்மை மறுமையாகிய இரண்டு, ஒரு — ஒருவன், தனித்தவன் ('பரதன், சத்துருக்கன் உன்னோடு கூடிப் பிறந்தாலும் அவர்கள் உடன் பிறப்புக்கள் என்ற தகுதியை இழந்தமையால், நான் ஒருவனே உன்தம்பி எனத்தக்கவன்'' என்பது கருத்து)

ஒருமை — ஒப்பு இல்லாமை, ஏந்து தோள் பருமை - வீணிற் பருத்துச் சுமையாகத் தாங்கிய தோள்கள், அவற்றால் ஆவன இல்லை என்பது பொருள்.

31. படரெலாம் படப்படும் பரும யானையின்
றிடரெலா முருட்டின தேரு மீர்த்தன
குடரெலாந் திரைத்தன குருதி யாறுகள்
கடரெலா மடுப்பன பலவுங் காண்டியால்.

பதப்பிரிப்பு;

''படர்எலாம் படப்படும் பரும யானையின்
திடர்எலாம் உருட்டின தேரும் ஈர்த்தன
குடர்எலாந் திரைத்தன குருதி ஆறுகள்
கடர்எலாம் அடுப்பன பலவும் காண்டியால்''

பொழிப்பு:

."துன்பங்கள் எல்லாம் உண்டாகும் வண்ணம் பருத்த யானைகளாகிய மேடுகளை உருட்டுவன வாயும், தேர்களை இழுத்துச் செல்வனவாயும் கடல்கள் முழுவதும் பாய்ந்து சங்கமிக்கப்போகும் இரத்த ஆறுகளைக் காண்பாயாக''

அருஞ்சொற் பொருள்:

படர் – துன்பம், பருமம் – பருப்பம், திடர் – மேடு, ஈர்த்தன – இழுத்தன, கடர் – கடல் (மொழியிறுதிப் போலி), அடுப்பன – கூடுவன (சங்கமிப்பன) இவை யாவும் தனது வில்லாற்றற் லால் நிகழப்போவன என்று இலக்குமணன் குளுரைக்கின்றான்.

32. கருவியுங் கைகளுங் கவச மார்பமு
முருவின உயிரினோ டுதிரந் தோய்வில
திரிவன சுடர்க்கணை திசைக்கை யானைகள்
வெருவரச் செய்வன காண்டி வீரநீ

பதப்பிரிப்பு:

"கருவியும் கைகளும் கவச மார்பமும்
உருவின உயிரினோடு உதிரம் தோய்வில
திரிவன சுடர்க்கணை திசைக்கை யானைகள்
வெருவரச் செய்வன காண்டி வீர! நீ"

பொழிப்பு:

"எனது ஒளிபொருந்திய கணைகள் பகைவரின் ஆயுதங்களையும் கைகளையும் கவசம் தரித்த மார்புகளையும் அவர்களின் உயிரோடு உருவிச் செல்லும். ஆனால் அவை செல்லும் வேகத்தால் அவற்றிலே இரத்தம் தோயாது துதிக்கைகளோடு கூடிய திக்குயானைகளும் அஞ்சும் வண்ணம் அவை நிகழ்த்தப்போகும் வீரச சாதனைகளை வீரனே! நீ காண்பாயாக"

அருஞ்சொற் பொருள்:

திசைக்கையானை - கைகளோடு கூடிய திக்கு யானைகள், உதிரம் – இரத்தம், வெருவர – அஞ்சும் வண்ணம். மார்பம் – மார்பு.

33. கோடகந் தேர்படு குதிரை தாவிய
வாடகத் தட்டிடை யலகை யற்றுகுங்
கேடகத் தடக்கைகள் கவ்விக் கீதத்தி
னாடக நடிப்பன காண்டி நாதநீ!

பதப்பிரிப்பு:

"கோடகம் தேர்படு குதிரை தாவிய
ஆடகத் தட்டிடை அலகை அற்று உகும்
கேடகத் தடக்கைகள் கவ்விக் கீதத்தின்
நாடகம் நடிப்பன காண்டி நாத! நீ."

பொழிப்பு:

"தலைவனே, தாவிச் செல்வனவாகிய குதிரைகள் அழிந்துபோகப் பெற்ற புதுமையான தேர்களின் பொன்னாலாகிய தேர்த்தட்டுக்களில், கேடகத்தோடு கூடிய (பகைவரின்) வலிய கைகள் விழ, அவற்றைப் பேய்கள் தம் கைகளிலே பற்றித் தாளமிட்டு இசையோடு நடனமாடப் போவதைக் காண்பாயாக"

அருஞ்சொற் பொருள்:

கோடகம் – புதுமை, ஆடகம் பொன், தட்டு தேர்த்தட்டு தடக்கை – வலிய கை (கள்) அலகை பேய் (கள்)

34. பண்முதிர் களிற்றொடு பரதன் சேனையி
னெண்முத லறுத்துநா னிமைப்பி னீக்கலால்
விண்முது குளுக்கவும் வேலை யாடையின்
மண்முது காற்றவுங் காண்டி வள்ளனீ.

பதப்பிரிப்பு:

"பண்முதிர் களிற்றொடு பரதன் சேனையின்
எண்முதல் அறுத்துநான் இமைப்பின் நீக்கலால்
விண்முதுகு உளுக்கவும் வேலை ஆடையின்
மண் முதுகு ஆறறவும் காண்டி வள்ளல்! நீ"

பொழிப்பு:

"அலங்காரம் மிக்க யானைகளோடு கூடிய பரதனின் சேனைத் தொகுதியை வேர் அறுத்து ஓர் இமைப்பொழுதில் ஒழிக்கப்போவதால், விண்ணுலகம் (வீரசுவர்க்கம்) முழுவதும் இறந்தவரின் பாரம் தாங்காது முதுகு நெளியப்போகின்றது. கடலை ஆடையாகத் தரித்த பூமி, முதுகை நிமிர்த்தி இளைப்பாறப் போகின்றது. வள்ளலே, இந்தக்கட்சியைக் காண்பாயாக"

அருஞ்சொற் பொருள்:

பண் – அலங்காரம், எண் – எண்ணிக்கை (தொகுதி), இமைப்பின் – இமைப்பொழுதில், (நொடிப் பொழுதில்) உழுக்க – நெளிய, ஆற்ற இளைப்பாற.

35. நிவந்தவான் குருதியி னீத்த னீந்திமெய்
சிவந்தசா தகரொடு சிறுகட் கூளியுங்
கவந்தமு முலகநின் கைய தாயதென்
றுவந்தன குனிப்பன காண்டி யும்பர்போல்.

பதப்பிரிப்பு:

"நிவந்த வான்குருதியின் நீத்தம் நீந்திமெய்
சிவந்த சாதகரொடு சிறுகண் கூளியும்
கவந்தமும் உலகநின் கையது ஆயதுஎன்று
உவந்தன குனிப்பன காண்டி உம்பர்போல்"

பொழிப்பு:

''வழிந்தொழுகப் போகின்ற, பெரிய இரத்த மாகிய வெள்ளத்திலே நீந்துவதால் சிவந்த நிறம் அடையும் பூதகணங்களுடனே, சிறிய கண்கள் உள்ள பேய்களும், தலைகளற்ற முண்டங்களும் ''உலகமே உன் உடைமையாகிவிட்டது, என்று தேவர்களைப் போல மகிழ்ச்சியடைந்து கூத்தாடு வதை நீ காண்க.''

அருஞ்சொற்பொருள்:

நிவந்த - வழிந்தொழுகிய, நீத்தம் — வெள் ளம், சாதகர் - பூதகணங்கள், கூளி — பேய்கள், கவந்தம் — (தலையற்ற) முண்டங்கள், குனிப்பன கூத்தாடுவன, உம்பர் - தேவர்.

36. சூழவெங் கடகரி துரக ராசிகள்
பாழிவன் புயத்திகல் வயவர் பட்டற
வாழிவெங் குருதியா லலைந்து வேலைக
ளேழுமொன் றாகிநின் றிரைப்பக் காண்டியால்.

பதப்பிரிப்பு:

''சூழிவெம் கடகரி துரக ராசிகள்
பாழிவல் புயத்துஇகல் வயவர் பட்டு அற
ஆழிவெம் குருதியால் அலைந்து வேலைகள்
ஏழும் ஒன்று ஆகிநின்று இரைப்பக்
[காண்டியால்''

பொழிப்பு:

''முகபடாம் அணிந்த கொடிய மத யானை கள், குதிரைக் கூட்டம், பெருமை பொருந்திய வலிய புயங்களையுடைய போர் வீரர்கள் யாவரும் இறந்து ஒழியக் கடல் போன்ற இரத்த வெள்ளத்

தில் கலக்கம்பட்டு ஏழு சமுத்திரங்களும் ஒன்று கூடி ஒலிப்பது போல ஒலிக்கக் காண்பாயாக''

அருஞ்சொற் பொருள்:

சூழி - யானைகளின் முகங்களை அலங்கரிக்கும் முகபடாம், பாழி — பெருமை, இகல் போர், வயவர் — வீரர். வேலைகள் சமுத்திரங்கள், இரைப்ப - ஒலிப்ப.

37. ஆளற வலங்குதே ரழிய வாடவர்
வாளற வரிசிலை துணிய மாக்கரி
தாளறத் தலையறப் புரவி தாளொடுந்
தோளற வடிக்கணை தொடுப்பக் காண்டியால்.

பதப்பிரிப்பு:

''ஆள்அற அலங்கும்தேர் அழிய ஆடவர்
வாள் அற வரிசிலை துணிய மாகரி
தாள் அறத் தலைஅறம் புரவி தாளொடும்
தோள் அற வடிக்கணை தொடுப்பக்
[காண்டியால்''

பொழிப்பு:

''காலாட் படை வீரர்கள் அறுபட்டு வீழவும் அசைகின்ற தேர்கள் அழிந்துபோகவும், வீரர்களின் வாள் துண்டாகவும் வரிந்து கட்டிய வில் முறியவும் பெரிய யானைகள் குதிரைகளின் கால்கள் அறுபடவும் அவற்றில் அமர்ந்த வீரரின் தோள்கள் அறுந்து விழவும் கூரிய அம்புகளை நான் தொடுப்பதைக் காண்பாயாக''

அருஞ்சொற் பொருள்:

ஆள் - காலாட்படையினர், அலங்கும் அசையும், துணிய — துண்டாக, புரவி - குதிரை.

38 தழைத்தவான் சிறையன தசையுங் கவ்வின
வழைத்தவான் பறவைக ளலங்கு பொன்வடிம்
பிழைத்தவான் பகழிபுக் கிருவர் மார்பிடைப்
புழைத்தவான் பெருவழி போகக் காண்டியால்.

பதப்பிரிப்பு:

"தழைத்தவான் சிறைஅன தசையும் கவ்வின
அழைத்தவான் பறவைகள் அலங்கும் [பொன்வடிம்
பிழைத்தவான் பகழிபுக்கு இருவர் மார்புஇடைப்
புழைத்தவான் பெருவழி போகக் காண்டியால்"

பொழிப்பு:

"செழிப்பான பெரிய சிறகுகளை உடையனவும் அசைந்து ஒளிவிடும் பொன்னினால் விளிம்பு அமைக்கப் பெற்றனவுமான, சிறந்த (எனது) அம்புகள் பரதன், சத்துருக்கனாகிய இருவரது மார்புகளிலும் புகுந்து தசையையும் கவ்விக்கொண்டு ஆகாயத்திற் செல்லும் கழுகு முதலிய பறவைகளையும் விருந்துண்ண அழைத்த வண்ணம், தாம் துளைத்து உண்டாக்கிய பெருவழியை ஊடுருவிச் செல்லக் காண்பாயாக"

அருஞ்சொற் பொருள்:

சிறை — சிறகு, பகழி — அம்பு, புழைத்த - துளைத்த, (இலக்குமணனின் அம்புகள் சிறகுடைய பறவைகளாகித் தம் இனத்தனவாகிய கழுகு முதலிய பறவைகளை விருந்துண்ண அழைப்பதாக உருவகிக்கப்படுகிறது)

39. ஒருமகள் காதலி னுலகை நோய்செய்த
பெருமக னேவலிற் பரதன் றான்பெறு
மிருநில மாள்கைவிட் டின்றென் னேவலா
லருநர காள்வது காண்டி யாழியாய்

பகப்பிரிப்பு:

"ஒருமகள் காதலினால் உலகை நோய்செய்த
பெருமகன் ஏவலில் பரதன் தான்பெறும்
இருநிலம் ஆள்கைவிட்டு இன்றுஎன் ஏவலால்
அருநரகு ஆள்வது காண்டி ஆழியாய்"

பொழிப்பு:

"ஆணைச் சக்கரம் உடையவனே! தன் மனைவிகளுள் ஒருத்தியாகிய கைகேயிமீது கொண்ட ஆசை காரணமாக (உன்னைக் காடு அனுப்பிப் பாதனை நாடாளவைத்து) உலகம் முழுவதற்கும் துன்பத்தை ஆக்கிய பெருமகனாகிய தசரதனின் கட்டளையை ஏற்றுத் தான் பெற்ற பேரரசை அள்வதை விடுத்து வந்த பரதன், இன்று என் கட்டளையை ஏற்று அரிய நரகத்தினை ஆளப் போவதைக் காண்பாயாக"

அருஞ்சொற் பொருள்:

ஒருமகள் - ஒருமனைவி (கைகேயி), பெருமகன் - பேரரசன், தசரதன், இருநிலம் - பேரரசு, ஆழி (ஆணைச்) சக்கரம்.

40. வையகந் துறந்துவந் தடவி வைகுத
லெய்திய துனக்கென நின்னை யீன்றவ
ணைதல்கண் டுவந்தவ ணவையி னோங்கிய
கைகயன் மகள்விழுந் தரற்றக் காண்டியால்.

பதப்பிரிப்பு:

வையகம் துறந்து வந்து அடவி வைகுதல்
எய்தியது உனக்குஎன நின்னை ஈன்றவள்
நைதல்கண்டு உவந்தவள் நவையின் ஓங்கிய
கைகயன் மகள் விழுந்து அரற்றக் காணடியால்

பொழிப்பு.

"நாட்டை ஆள்வதை விடுத்துக் காட்டிலே வந்து த தல் உனக்கு நேரிட்டதே என்று உன்னைப் பெற்ற கோசலை வருந்தக்கண்டு மகிழ்ந்தவளான, பழியில் மிக்கவளாகிய (கேகயன் மகளான) கைகேயி, பரதனை இழந்த சோகத்தால் தரையில் விழுந்து கதறப்போவதை நீ காண்பாயாக."

அருஞ்சொற் பொருள்;

அடவி — காடு, வைகுதல் — வாழ்தல், ஈன்றவள் — தாய் (கோசலை), நவை — குற்றம், பழி — வசை, அரற்ற — கதற, அழ.

41 அரஞ்சுட வழனிமி ரலங்கல் வேலினாய்
விரஞ்சொரு நொடியிலிவ் வனிக வேலையைச்
யுரஞ்சுடு வடிகணை யொன்றில் வென்றுமுப்
புரஞ்சுடு மொருவனிற் பொலிவென் யானென்றான்.

பதப்பிரிப்பு:

"அரம் சுட அழல்நிமிர் அலங்கல் வேலினாய்
விரைஞ்சு ஒரு நொடியில்இவ் அனிகம் [வேலையை
உரம்சுடு வடிகணை ஒன்றில் வென்றுமுப்
புரம் சுடும் ஒருவனில் பொலிவென்யான்" [என்றான்

பொழிப்பு:

''ஆயுதங்களைக் கூர்மைப்படுத்தும் அரம் என்ற கருவியால் அராவ, நெருப்பின் வெம்மையை மிகுதியாய்ப் பெறும், மாலைசூடிய வேற்படையைத் தரித்தவனே! விரைந்து ஒரு நொடிப்பொழுதில் இந்தச் சேனையாகிய சமுத்திரத்தின், (பகைவரின்) வலிமையை அழிப்பதாகிய கூரியதோர் அம்பினால் வெற்றிகொண்டு, முப்புரங்களையும் சுட்டெரித்த ஒப்பில்லாத சிவபெருமான் போல யான் பொலிந்து விளங்குவேன்'' என்றான்.

அருஞ்சொற் பொருள்:

அலங்கல் – (வெற்றி) மாலை, விரஞ்சு – விரைந்து (மொழியிடைப்போலி), அனிகம் – சேனை, ஒருவன் – ஒப்பில்லாதவன்(சிவன்), உரம்– வலிமை.

இராமபிரானின் அறிவுரை

42. இலக்குவ வுலகமோ ரேழு மேழுநீ
கலக்குவ னென்பது கருதி னாலது
விலக்குவ தரிதது விளம்பல் வேண்டுமோ
புலக்குரித் தொருபொருள் புகலக் கேட்டியால்

பதப்பிரிப்பு:

''இலக்குவ! உலகம் ஓர் ஏழும் ஏழும் நீ
கலக்குவன் என்பது கருதினால் அது
விலக்குவது அரிது அது விளம்பல் வேண்டுமோ?
புலக்கு உரித்து ஒருபொருள் புகலக் கேட்டி''

பொழிப்பு:

(இலக்குவனின் சீற்ற உரைகளைக் கேட்ட இராமன் சொல்வான்)

''இலக்குவனே, ''உலகம் பதினான்கையும் யான் கலங்கச் செய்வேன்'' என்பதை நீ எண்ணு வாயானால், அந்தச் செயலை யாராலும் தடுத்து நிறுத்துவது அரிதே. இதை நீ சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமோ? உனது அறிவுக்கு ஏற்றதொரு செய்தியை இப்பொழுது நான் சொல்லக் கேள்''

அருஞ்சொற் பொருள்:

விளம்பல் — கூறுதல். புலக்கு (புலத்துக்கு) அறிவுக்கு, புகல — சொல்ல, ஆல் — அசை

43. நல்குலத் துதித்தனர் நவையு ணீங்கின
ரெங்குலப் புறுவர்க ளெண்ணின் யாவரே
தங்குலத் தொருவருந் தரும நீங்கினார்
பொங்குலத் திரளொடும் பொருத தோளினாய்.

பதப்பிரிப்பு:

''நம் குலத்து உதித்தவர் நவையுள் நீங்கினர்
எங்கு உலப்பு உறுவர்கள் எண்ணின்யாவரே
தம்குலத்து ஒருவரும் தருமம் நீங்கினார்
பொங்கு உலத் திரளொடும்பொருத தோளினாய்;''

பொழிப்பு:

திரண்ட கற்றூணை ஒத்த வலிய தோளுடையாய், நமது குலத்திலே பிறந்து, குற்றம் நீங்கிய அரசர்கள் எண்ணி அளவிட முடியாத தொகையினராவர், சிந்தித்துப் பார்க்குமிடத்து,

அவர்களுள் தமது குலத்திற்கு நீங்காது அமைந்துள்ள தரும நெறியினின்றும் நீங்கியவர் எவர்?,, (ஒருவரும் இலர்)

அருஞ்சொற் பொருள்;

உலத்தொடும் — உலம் — கற்றூண் (கற்றூணோடு) நவை குற்றம், உலப்பு — அளவு.

44. எனைத்துள மறையவை பியம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே
யனைத்திற மல்லன வல்ல வன்னது
நினைத்திலை யென்வயி னேய நெஞ்சினால்.

பதப்பிரிப்பு;

"எனைத்துஉள மறைஅவை இயம்பல் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே
அனைத்திறம் அல்லன அல்ல அன்னது
நினைத்து இலை என்வயின் நேய நெஞ்சினால்"

பொழிப்பு;

"பனைபோன்ற திரண்ட துதிக்கையையுடைய யானைப் படையைக் கொண்ட பரதனது செயல்களே எவ்வளவு வேதங்கள் உள்ளனவோ அவையெல்லாம் சொல்லத்தக்க (உயர்ந்த) தன்மையுள்ளவையாகும். அவ்வுண்மையினை என்மீது கொண்ட அன்பின் மிகுதியையுடைய உன் மனத்தால் நீ நினைத்துப் பார்க்கவில்லை."

அருஞ்சொற் பொருள்:

எனைத்து — எவ்வளவு, கரக்கரி — துதிக்கையோடு கூடிய யானை. அனைத்திறன் — அவ்வளவு

வேதங்களும் (கூறுகின்ற) தன்மை (கள்), என் வயின் — என்னிடத்தில், நேயநெஞ்சு அன்பு நிறைந்த உள்ளம்.

45. பெருமக னென்வயிற் பிறந்த காதலின்
வருமென நினைக்கையு மண்ணை யென்வயிற்
றருமென நினைக்கையுந் தவிரத் தானையாற்
பொருமென நினைக்கையும் புலமைப் பாலதோ.

பதப்பிரிப்பு:

"பெருமகன் என்வயின் பிறந்த காதலின்
வரும்என நினைக்கையும் மண்ணை என்வயின்
தரும்என நினைக்கையும் தவிரத் தானையால்
பொரும்என நினைக்கையும் புலமைப்பாலதோ?"

பொழிப்பு:

"தலைமையனான என்னிடத்தில் உண்டான அன்பினாலே பரதன் வருவான் என்று நினைத்தலும் நாட்டை என்னிடம் தருவான் என்று நினைத்தலுமல்லாது அவன் என்னுடன் படைகொண்டு போர் செய்வான் என்று நினைத்தலும் நல்லறிவின் பாற்பட்டதோ?"

அருஞ்சொற் பொருள்:

பெருமகன் — தலைமையன், காதல் - அன்பு, மண்ணை - பூமியை (நாட்டை), தானை - சேனை.

46. பொன்னொடும் பொருகழற் பரதன் போந்தன
னன்னெடும் பெரும்படை நல்க வன்றியே
யென்னொடும் பொருமென வியம்பற் பாலதோ
மின்னொடும் பொருவுற விளங்கும் வேலினாய்

பதப்பிரிப்பு:

''பொன்னொடும் பொருகழல் பரதன் போந்தனன்
நல்நெடும் பெரும்படை நல்க அன்றியே
என்னொடும் பொரும்என இயம்பல் பாலதோ?
மின்னொடும் பொருவுற விளங்கும் வேலினாய்!''

பொழிப்பு:

''மின்னலோடு ஒத்து ஒளிவிட்டு விளங்கும் வேலுடையாய், போர்க்கழல் அணிந்து பரதன் இங்கு வந்துள்ளமை, பெரிய படையையும் அரசுச் செல்வத்தையும் ஒருசேர எனக்கு வழங்குவதற்கே அதுவன்றி என்னோடு போர் செய்ய வந்தான் என்று கூறலாமோ? அது தக்கதோ?''

அருஞ்சொற் பொருள்:

பொரு – போர், பொரும் – போர் செய்வான், நல்க – வழங்க. இயம்பற்பாலதோ – சொல்லத்தக்கதோ. பொருவுற–ஒத்து விளங்குகின்ற; (பொருவு + உற – பொருவ உவமவுருபு)

47. சேணுயர் தருமத்தின் றேவைச் செம்மையி
னாணியை யன்னது நினைக்க லாகுமே
பூணியன் மொய்ம்பினாய் போந்த தீண்டெனைக்
காணிய நீயிது பின்னுங் காண்டியால்.

பதப்பிரிப்பு:

''சேண் உயர் தருமத்தின் தேவைச் செம்மையின்
ஆணியை அன்னது நினைக்கல் ஆகுமே?
பூண் இயல், மொய்ம்பினாய் போந்த ஈண்டு
எனைக் காணிய நீ இது பின்னும் காண்டியால்''.

பொழிப்பு:

'(கடிகை என்னும்) "தோளணி பூண்டவனே, மிகவும் உயர்வான தருமத்தின் தெய்வமான பரதனை, நேர்மைக் குணமாகிய தேருக்கு அச்சாணி யானவனை, அவ்வாறு (போர்செய்ய வந்தவனென்று) நினைக்கலாமோ? வலியோய், ஈண்டு அவன் வந்தது என்னைக் காண்பதற்கே. இதனை நீ பின்னும் பார்ப்பாய்.'

அருஞ்சொற் பொருள்:

சேண் – மிகுதி, பூண் ஆபரணம் (தோளணி, அது கடிகை எனப்படும்), காணிய – காண்பதற்கு, மொய்ம்பு – வலிமை, ஆணி – அச்சாணி.

இலக்குமணன் சினம் ஆறல், பரதன் சத்துருக்கனுடன் இராம பிரானிடம் வரல்.

48. என்றன னிளவலை நோக்கி யேந்தலு
நின்றனன் பரதனு நிமிர்ந்த சேனையைப்
பின்றரு கென்றுதன் பிரிவில் காதலிற்
றன்றுணைத் தம்பியுந் தானு முந்தினான்

பதப்பிரிப்பு:

என்றனன் இளவலை நோக்கி ஏந்தலும்
நின்றனன் பரதனும் நிமிர்ந்த சேனையைப்
பின்தருக என்றுதன் பிரிவில் காதலின்
தன்துணைத் தம்பியும் தானும் முந்தினான்.

பொழிப்பு:

'உயர்ந்தோனாகிய இராமனும் தன் தம்பியை நோக்கி மேற்கண்டவாறு சொல்லியபின், பரத

னின் வருகையை எதிர்பார்த்து நின்றான். பரத னும் தனது மிகுந்த சேனையைப் பின்னால் வரும் படி கட்டளையிட்டுத் தன் துணைவனான தம்பி சத்துருக்கனோடு, இராமபிரான் மீது என்றும் பிரியாத அன்புமிக்கவனாய் முற்பட்டு வந்தான்''

அருஞ்சொற் பொருள்:

இளவல் – இளையவன் (தம்பி), ஏந்தல் – உயர்ந்தோன் (இராமன்), நிமிர்ந்த – மிகுதியான

49. தொழுதுயர் கையினன் றுவண்ட மேனிய
னழுதழி கண்ணின னவல மீதென
வெழுதிய படிவமொத் தெய்து வான்றனை
முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினான்.

பதப்பிரிப்பு:

தொழுது உயர் கையினன் துவண்ட மேனியன்
அழுது அழி கண்ணினன் அவலம் ஈது என
எழுதிய படிவம் ஒத்து எய்துவான் தனை
முழுது உணர் சிந்தையான் முடிய நோக்கினான்

பொழிப்பு:

கைகளை உயரத் தூக்கி வணங்கியவனாயும், தளர்ந்த உடலினனாயும், அழுவதாலே பொலிவை இழந்த கண்ணினனாயும் சோகம் என்பது இது தான் என்று வரைந்து காட்டிய உருவத்தினை ஒத்து வரும் பாதனை எல்லாம் அறிந்தவனான இராமன் முழுவதும் நன்றாக உற்று நோக்கினான்.

அருஞ்சொற் பொருள்:

துவண்ட –தளர்ந்த, அழி - (பொலிவு) அழிந்த, அவலம் - சோகம், படிவம் - உருவச் சித்திரம்.

இராமன் பரதனின் கோலத்தை இலக்குவனுக்குக் காட்டல்.

50. கார்ப்பொரு மேனியக் கண்ணன் காட்டினா
னார்ப்புற வரிசிலை யிளைய வையநீ
தேர்ப்பெருந் தானையப் பரதன் சிறிய
போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கெனா

பதப்பிரிப்பு:

கார்ப்பொரு மேனிஅக் கண்ணன் காட்டினான்
''ஆர்ப்புஉறு வரிசிலை இளைய ஐய! நீ
தேர்ப்பெரும் தானையப் பரதன் சீறிய
போர்ப்பெரும்கோலத்தைப் பொருந்த நோக்கு'' எனா
↳ நன்கு பார்.

பொழிப்பு:

முகிலை ஒத்த கரிய மேனியையுடைய இராம பிரான், ''ஆரவாரிக்கின்றகட்டமைந்த வில்லேந்திய என் இளையவனே, ஐய, பெரும் தேர்ப்படை யோடு கூடியவனாய், என்னைக் கோபித்துவந்த பரதனின் கோலத்தை நன்றாகப் பார்'' என்று இலக்குவனை நோக்கிக் கூறினான்.

அருஞ்சொற் பொருள்:

கார் — முகில், கண்ணன் — கரியநிறமுடைய இராமபிரான், (கிருஷ்ண என்ற வடசொல் கண்ணன் என்று பாகதமொழிச் சொல்லாய்த் திரிந்து தமிழில் கண்ணன் என்று வழங்குகின்றது.)

இலட்சுமணனின் மனமாற்றம்

51. எல்லொடுங் கியமுகத் திளவ னின்றனன்
மல்லொடுங் கியபுயத் தவனை வைதெழுஞ்
சொல்லொடுஞ் சினத்தொடு முணர்வு சோர்தர
வில்லொடுங் கண்ணினீர் நிலத்து வீழவே

பதப்பிரிப்பு:

இலக்குமணன்

எல்ஒடுங்கிய முகத்து இளவல் நின்றனன்
மல்ஒடுங்கிய புயத்து அவனை வைது எழும்
சொல்லொடும் சினத்தொடும் உணர்வு சோர்தர
வில்லொடும் கண்ணின்நீர் நிலத்து வீழவே.

பொழிப்பு:

(இராமன் பரதனின் கோலத்தினைக் காட்டத்) தம்பியாகிய இலக்குமணன், வலிமை குன்றிய தோளினனான பரதனை ஏசி எழும் சொற்களோடும் சீற்றத்தோடும் தன் உணர்வும் சோர்வடைய, ஒளி மழுங்கிய முகத்தோடு தனது வில்லும் கண்ணீரும் நிலத்தில் விழ நின்றான்.

அருஞ்சொற் பொருள்

எல் — ஒளி, மல் — போர்.

பரதனின் சோகநிலை

52. கோதறத் தவஞ்செய்து குறிப்பி னெய்திய
நாதனைப் பிரிந்தன னலத்து நீங்கினாள்
வேதனைத் திருமகன் மெலிகின் றான்விடு
தூதெனப் பரதனுந் தொழுது தோன்றினான்.

பதப்பிரிப்பு:

கோது அறத் தவம் செய்து குறிப்பின் எய்திய
நாதனைப் பிரிந்தனள் நலத்து நீங்கினாள்
வேதனைத் திருமகள் மெலிகின் றாள்விடு
தூதுஎனப் பரதனும் தொழுது தோன்றினான்

பொழிப்பு:

குற்றமில்லாத தவத்தினைப் புரிந்து தனது கருத்தினை முடித்துக்கொள்ள விருந்த இராச்சிய இலக்குமி (தனது தவம் நிறைவேறாத குறையினால்), தன் நலங்களிலிருந்து நீங்கி வேதனையால் மெலிந்தவளாய், (தன் குறையை எடுத்துச் சொல்ல) அனுப்பிய தூதுவன் என்னும் படியாகப் பரதன் தொழுத வண்ணம் (இராமன முன்பு) தோன்றினான்.

அருஞ்சொற் பொருள்:

கோது — குற்றம், திருமகள் — இலக்குமி (ஈண்டு இராச்சியமாகிய இலக்குமியைக் குறித்தது), அவள் இராமனின் பிரிவால் வருந்திப் பரதனை (இராமனை அழைத்துவர)த் தூது அனுப்பியுள்ளாள் என்பது தற்குறிப்பேற்ற அணி.

அரசைத் துறந்துவந்த இராமனை வெறுத்த பரதன் அவனது திருவடிகளில் வீழ்தல்.

53. அறந்தனை நினைந்திலை யருளை நீத்தனை
துறந்தனை முறைமையை யென்னுஞ் சொல்லினான்
மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தன
னிறந்தனன் றாதையை யெதிர்கண் டென்னவே.

பதப்பிரிப்பு:

"அறம் தனை நினைந்து இலை அருளை நீத்தனை
துறந்தனை முறைமையை" என்னும் சொல்லினான்
மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தனன்
இறந்ததன் தாதையை எதிர்கண்டு என்னவே.

பொழிப்பு:

இறந்துபோன தன்தந்தையையே எதிரிற் கண்டவன் போன்று (இராமனைக் கண்ட) பரதன். "உனது தருமத்தினை நீ நினைக்கவில்லை. எம்மீது கருணையையும் நீக்கினாய்; நீதியையும் விடுத்தாய்" என்று கூறியவண்ணம், (தன்னை) மறந்தவனாய் இராமனின் மலர் போலும் அடிகளிலே வீழ்ந்தான்.

அருஞ்சொற் பொருள்

முறைமை — நீதி (அரசநீதி), தாதை — தந்தை

இராமன் பரதனின் கோலங் கண்டு கண்ணீர் பெருக்குதல்.

54. உண்டு கொலுயிரென வொடுங்கி னானுருக்
கண்டன னின்றனன் கண்ணன் கண்ணெனும்
புண்டரீ கம்பொழி புனல வன்சடா
மண்டல நிறைந்துபோய் வழிந்து சோரவே.

பதப்பிரிப்பு:

உண்டுகொல் உயிர் என ஒடுங்கினான் உருக்
கண்டனன் நின்றனன் கண்ணன் கண் எனும்
புண்டரீ கம்பொழி புனல் அவன்சடா
மண்டலம் நிறைந்துபோய் வழிந்து சோரவே.

பொழிப்பு:

உயிர் உள்ளதோ என்று ஐயம் கொள்ளுமாறு ஒடுங்கி நின்ற பரதனின் உருவத்தினை (இராமன்) கண்டான்; தன் கண்களாகிய தாமரை மலர்கள் சொரிந்த நீர், (பரதனது) சடைக்கற்றையின் மீது நிரம்பி வழியுமாறு நின்றான்.

அருஞ்சொற் பொருள்

சடாமண்டலம் — சடைக்கற்றை (தொகுதி) புண்டரீகம் தாமரை, புனல் — நீர்

இராமன் பரதனைத் தழுவுதல்

55. அயாவுயிர்த் தழுகணீ ரருவி மார்பிடை
யுயாவறத் திருவுள முருகப் பல்லினா
னியாயமத் தனைக்குமோர் நிலைய மாயினான்
றயாமுத லறத்தினைத் தழுவி யென்னவே.

பதப்பிரிப்பு:

அயாஉயிர்த்து அழுகண் நீர் அருவி மார்புஇடை
உயாஉறத் திருவுளம் உருகப் புல்லினான்
நியாயம் அத்தனைக்கும் ஓர் நிலையம் ஆயினான்
தயாமுதல் அறத்தினைத் தழுவி என்னவே

பொழிப்பு:

அருளையுடைய முழுமுதற்கடவுள் தரும தேவதையைத் தழுவியது போன்று, பெருமூச்சினை விட்டு, அழும் கண்ணீரருவியானது மார்பினில் வழிந்தோட, மனம் கரைந்துருக, நீதியனைத்திற்கும் ஓர் இருப்பிடமான இராமன் (பரதனைத்) தழுவினான்.

அருஞ்சொற் பொருள்:

அயா — பெருமூச்சு, உயாஉற — பெருகிவழிய, நிலையம் — இருப்பிடம். முழுமுதற் கடவுள் என இராமனும் தருமதேவதை எனப் பரதனும் உவமிக்கப்படுகின்றனர்.

பரதனின் சோக நிலைகண்டு ஐயுற்ற இராமன் தந்தையின் நலம் கேட்டல்

56. புல்லின னின்றவன் புனைந்த வேடத்தைப்
பன்முறை நோக்கினான் பலவு முன்னினா
னல்லலி னழுங்கினை யைய வாளுடை
மல்லுயர் தோளினான் வலிய னோவென்றான்.

பதப்பிரிப்பு:

புல்லினன் நின்றவன் புனைந்த வேடத்தைப்
பல்முறை நோக்கினான் பலவும் உன்னினான்
"அல்லலில் அழுங்கினை ஐய! ஆள்உடை
மல்உயர் தோளினான் வலியனோ?'' என்றான்

பொழிப்பு:

தலைவனான இராமன் பரதனைத் தழுவிய வண்ணம், அவன் புனைந்து வந்த தவக்கோலத்தைப் பலமுறை நோக்கினான்; பலவாறு சிந்தித்தான்; 'ஐய! துன்பக்கடலில் மூழ்கியுள்ளாய். ஆளுதலையுடையவனும் மற்போரிலே சிறந்த தோள்களையுடையவனுமான (எம் தந்தை) வலியவனாய் (உடல் நலத்தினனாய்) உள்ளானோ?'' என்றுவினாவினான்.

அருஞ்சொற் பொருள்:

புல்லினன் - தழுவிக் கொண்டவனாய், (புல்லுதல் - தழுவுதல்), உன்னினான் - சிந்தித்தான், அழுங்கினை - ஆழ்ந்துள்ளாய், மல் - மற்போர்.

தசரதனின் இறப்பினைப் பரதன் கூறல்

57. அரியவ னுரைசெயப் பரத னையநிற்
பிரிவெனும் பிணியினா லென்னைப் பெற்றவக்
கரியவள் வரமெனுங் கால னாற்றனக்
குரியமெய்ந் நிறுவிப்போ யும்ப ரானென்றான்.

பதப்பிரிப்பு:

அரியவன் உரைசெயப் பரதன் "ஐயநின்
பிரிவுஎனும் பிணியினால் என்னைப்பெற்றஅக்
கரியவள் வரம்எனும் காலனால் தனக்கு
உரியமெய்ந் நிறுவிப்போய் உம்பரான்" என்றான்

பொழிப்பு:

அரியவனான இராமன் (இவ்வாறு) வினாவப் பரதன், "ஐய, உமது பிரிவு என்னும் நோயினாலும் என்னைப் பெற்ற கொடியவளாகிய (கைகேயியின்) வரம் என்னும் கூற்றுவனாலும் தனது உண்மையை இவ்வுலகிலே நிலை நிறுத்தி மேலுலகத்தை அடைந்தனன்" என்றான்.

அருஞ்சொற் பொருள்

கரியவள் - (உள்ளம் கறுத்தவள்) கொடியவள், மெய் - உண்மை (கொடுத்த வாக்குறுதி) புகழுடம்பு எனவும் கொள்ளலாம். அரியவன் என்ப

தற்கு அருமையானவன் என்பதோடு, அரி (திரு மால்) ஆகிய அவன் என்றும் பொருள் கொள் ளலாம்.

தந்தையின் மரணச் செய்தியால் அதிர்ச்சி யுற்ற இராமன் தரையில் விழல்.

58. விண்ணிடை யடைந்தன னென்ற வெய்யசொற்
புண்ணிடை யயிலெனச் செவிபு காமுனங்
கண்ணொடு மனஞ்சுழல் கறங்கு போலவாய்
மண்ணிடை விழுந்தனன் வானி னும்பரான்.

பதப்பிரிப்பு:

விண் இடை அடைந்தனன் என்ற வெய்ய சொல்
புண் இடை அயில் எனச் செவிபுகா முன்னம்
கண்ணொடு மனம்சுழல் கறங்கு போலஆய்
மண்ணிடை விழுந்தனன் வானின் உம்பரான்

பொழிப்பு:

(தசரதன்) விண்ணுலகடைந்தான் என்ற கொடிய சொல்லானது புண்ணிலே பாய்ந்தவேல் என்னுமாறு தன் செவிகளிலே விழ முன்னமே, விண்ணுலகத்துத் தேவர்களுக்கு உரியவனான இரா மன், காற்றாடி போல (சுழன்று) பூமியில் விழுந்தான்.

அருஞ்சொற் பொருள்:

அயில் — வேல், கறங்கு - காற்றாடி, வானின்— விண்ணுலகத்தின், உம்பரான் - தேவர்களுக்கு உரியவன். இதற்கு முன்னைய பாட்டில் உம்பர்,

என்பதற்கு விண்ணுலகம் எனப்பொருள் தரப் பட்டது. அச்சொல் தேவர் என்ற பொருளும் தரும்.

இராமனின் புலம்பல்

59. இருநிலஞ் சேர்ந்தன னிறையு யிர்த்தில
னுருமினை யரவென வுணர்வு நீங்கினா
னருமையி னுயிர்வர வயர்வு யிர்த்தகம்
பொருமினன் பன்முறைப் புலம்பி னானரோ.

பதப்பிரிப்பு:

இரு நிலம் சேர்ந்தனன் இறை உயிர்த்து இலன்
உரும் இனை அரவு என உணர்வு நீங்கினான்
அருமையின் உயிர்வர அயர்வு உயிர்த்து அகம்
பொருமினன் பல்முறைப் புலம்பினான் அரோ

பொழிப்பு:

தலைவனாகிய இராமன் பெரிய பூமியிலே வீழ்ந்து, மூச்சடங்கி, இடியினால் வருந்தும் பாம்பு போல அறிவு மயங்கி, அருமையாக உயிர் மீளப்பெற்றவனாய்ப் பெருமூச்சுவிட்டவண்ணம் மனங்கலங்கிப் பலவாறு புலம்பினான்,

அருஞ்சொற் பொருள்:

இரு – பெரிய, இறை – தலைவன் (இராமன்) உரும்—இடி. இனை – வருத்தம், அயர்வுயிர்த்து, பெருமூச்சுவிட்டு, பொருமினன் – (மனம்) கலங்கினான். அரோ – அசைநிலை.

60. நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் தாயே தயாநிலையே
யெந்தா யிகல்வேந்த ரேறே யிறந்தனையே
யந்தோ வினிவாய்மைக் காருளரோ மெய்யுற்றார்

பதப்பிரிப்பு:

"நந்தா விளக்கு அனைய நாயகனே
[நால் நிலத்தோர்
தந்தாய் தனி அறத்தின் தாயே தயாநிலையே
எந்தாய் இகல்வேந்தர் ஏறே இறந்தனையே
அந்தோ இனிவாய்மைக்கு ஆர்உளரோ
மெய்உற்றார்?"

பொழிப்பு:

"அணையாத ஒளி விளக்குப் போன்ற தலைவனே, பூமியிலுள்ளவர்களுக்குத் தந்தை போன்றவனே, அருளுக்கு இருப்பிடமானவனே, எமது தந்தையே, பகைவருக்குச் சிங்கம் போன்றவனே, நீ இறந்து போயினையே! இனி, சத்தியத்தக்கு உறுதுணையாக எவர் உள்ளனர்?"

அருஞ்சொற் பொருள்:

நந்தா விளக்கு – அணையா விளக்கு, நந்தாத– அணையாத, நானிலம் - நால் + நிலம் – தூங்கும் (கோளாகிய) பூமி, நான்கு + நிலம் – குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதமாகிய நால்வகை நிலங்களையும் உள்ளடக்கிய பூமி, இகல்—பகை, ஏறு— சிங்கம்.

61. சொற்பெற்ற நோன்பின் றுறையோ னருள்வேண்டி
நற்பெற்ற வேள்வி நவை நீங்க நீயியற்றி
யெற்பெற்று நீ பெற்ற தின்னுயிர்போய் நீங்கலோ
கொற்பெற்ற வெற்றிக் கொலைபெற்ற கூர்வேலோய்

பதப்பிரிப்பு:

சொல்பெற்ற நோன்பின் துறையோன் அருள்
[வேண்டி
நல்பெற்ற வேள்வி நவைநீங்க நீ இயற்றி
என்பெற்று நீபெற்றது இன் உயிர் நீங்கலோ
கொன்பெற்ற வெற்றிக் கொலைபெற்ற
கூர்வேலோய்

பொழிப்பு

[பகைவருக்கு] அச்சம் தருவதைப்பெற்றதும் வெல்லுதல், கொல்லுதல் ஆகிய இரு தொழில் களையும் பெற்றதுமான கூர்மையான வேற்படை தாங்கியவனே, புகழ்பொருந்திய தவமாகிய துறையிலே தேர்ந்தவனாகிய (கலைக்கோட்டு) முனிவனின் கருணையை விரும்பிப் பெற்ற (அம் முனிவனைக்கொண்டு) நன்மையான யாகத்தை நீ குற்றமின்றிச் செய்து என்னை மகனாய்ப் பெற் றது, உனது இனிய உயிர் நீங்குவதற்காகவோ?''

அருஞ்சொற் பொருள்

சொல் - புகழ், நவை—குற்றம் கொன்—அச்சம்

62. மன்னுயிர்க்கு நல்குரிமை மண்பார நான்சுமக்கப்
பொன்னுயிர்க்குந் தாரோய் பொறையுயிர்த்த
வாறிதுவோ
உன்னுயிர்க்குக் கூற்றாய் உலகாள வுற்றேனோ
மின்னுயிர்க்குத் தீவாய் வெயிலுயிர்க்கும்
வெள்வேலோய்

பதப்பிரிப்பு

மன் உயிர்க்கு நல்கும்உரிமை மண்பாரம் நான்
[சுமக்கப்
பொன் உயிர்க்குந் தாரோய் பொறைஉயிர்த்த
ஆறு இதுவோ

உன்உயிர்க்கும் கூற்றாய் உலகுஆள
[உற்றேனோ?
மின்உயிர்க்கும் தீவாய் வெயில் உயிர்க்கும்
[வெள்வேலோய்.

பொழிப்பு:

"பொன்போலும் மகரந்தப் பொடிகளை உதிர்க்கின்ற மாலை அணிந்தவனே, ஒளிவீசுவதும் வெப்பம் அமைந்ததும் சூரிய கதிர் போன்று கனல் கக்குவதுமான வலிமையான வேற்படை தாங்கியவனே, நிலையான உயிர்கள் யாவுக்கும் அருள்செய்வதற்கான உரிமையுடைய பூமிபாரத்தை நான் சுமக்க, நீ அப் பாரம் நீங்கி இளைப்பாறியவகை இதுதானோ? உனது உயிருக்குக் காலனாகி இந்த உலகினை ஆளப் பொருந்தினேனோ!

அருஞ்சொற்பொருள்:

பொன்–(பொன்னிறம் பொருந்திய) மகரந்தப் பொடி (உவமையாகு பெயர்), பொறை உயிர்த்தல் – இளைப்பாறுதல்.

63. எம்பரத்த தாக்கி யாசுரிமை யிந்தியங்க
டம்பரத்த தாக்கித் தவமிழைத்த வாறிதுவோ
சம்பரப்போர்த் தானவனைத்" தள்ளிச் சதமகன்ற
னம்பரத்தி னீங்கா வரசளித்த வாழியாய்

பதப்பிரிப்பு:

எம்பரத்தது ஆக்கி அரசுஉரிமை இந்தியங்கள்
தம்பரத்தது ஆக்கித் தவம் இழைத்த
[அறுஇதுவோ

சம்பரப் பேர்த் தானவனைத் தள்ளிச்
[சதமகன்தன்
அம்பரத்தின் நீங்கா அரசு அளித்த ஆழியாய்!

பொழிப்பு:

"சம்பரன் என்னும் பெயர்கொண்ட அரக்கனை அழித்து (நூறு வேள்வி இயற்றியவனான இந்திரனுக்கு (அவனுடைய விண்ணுலக ஆட்சியை) நீங்காத வண்ணம் அரசினை வழங்கிய அணைச் சக்கரம் உடையவனே! அரசாளும் உரிமையை எமக்குரியதாக்கி, ஐம்பொறிகளையும் வசமாக்கி நீ தவம்செய்த வகை இதுதானோ?"

அருஞ்சொற்பொருள்:

எம்பரத்தது — எமக்கு உரித்தாக்கியது. அம்பரம்—அகாயம் (விண்ணுலகம்) இந்தியங்கள்— இந்திரியங்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய இவ்வைந்தும் பஞ்சேந்திரியங்கள் என்று வடமொழியிலும், ஐம்பொறிகள் என்று தமிழ் மொழியிலும் வழங்கும். — ஆறு`வழி, வகை. சதமகன் (சதம்) நூறு, மகம் — (யாகம்) நூறு யாகங்கள் (இராசசூய யாகங்கள்) செய்து இந்திரப் பதவியை அமைத்தவன்.

64. வேண்டுந் திறத்தாரும் வேண்ட வரசாட்சி
பூண்டிவ் வுலகுக் கிடர்கொடுத்த புல்லனேன்
மாண்டு முடிவதல்லான் மாயா வுடம்பிதுகொண்
டாண்டு வருவதினி யார்முகத்தை நோக்கவோ.

பதப்பிரிப்பு:

வேண்டும் திறத்துஆரும் வேண்ட அரசாட்சி
பூண்டுஇவ் உலகுக்கு இடர்கொடுத்த
[புல்லனேன்
மாண்டு முடிவது அல்லால் மாயா உடம்பு
[இதுகொண்டு
ஆண்டுவருவது இனியார்முகத்தை
[நோக்கவோ?''

பொழிப்பு:

''விரும்பப்படும் தன்மையை யாவரும் கொள்ள வைப்பதான அரசாட்சியினை, (நீயும் மற்றைப் பெரியோரும்) ஏற்குமாறு என்னை வேண்டியபொழுது, அவ் வேண்டுகோளை ஏற்றதால் உலகம் முழுவதற்கும் (உன்னை இழப்பதாகிய) துன்பம் அளித்த அற்பனான நான், இறந்தொழிந்து போவதல்லாமல், அழியாத இந்த உடம்பு கொண்டு இனி எவருடைய முகத்தினை நோக்கி அரசாட்சியை நடத்துவேன்?''

அருஞ்சொற் பொருள்-

வேண்டும் திறம் விரும்பப்படும் தன்மை, புல்லனேன் — அற்பனாகிய நான்.

65. தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்தே னென்னத் தரியாது காவலநீ
வானடைந்தா யின்ன மருந்தேனான் வாழ்வுகந்தே
யூனடைந்த தெவ்வ ருயிரடைந்த வொள்வேலோய்

பதப்பிரிப்பு

(2) தேன் அடைந்த சோலைத் திருநாடுகைவிட்டுக்
(3) கான் அடைந்தேன் என்னத் தரியாதுகாவலநீ!

வான் அடைந்தாய் இன்னம் இருந்தேன்
[நான் வாழ்வு உகந்தே
ஊன் அடைந்த தெவ்வர் உயிர் அடைந்த
[ஒள்வேலாய்

பதப்பிரிப்பு:

''உடற் கொழுப்பை அடைந்தவரான பகைவரின் உயிர்களைக் கவர்ந்த ஒளிபடைத்த வேற்படையாய், தேன் பொருந்திய சோலைகள் சூழ்ந்த அழகிய (கோசல) நாட்டினை நீங்கி நான் காட்டினை அடைந்தேன் என்று (என்பிரிவுத் துயரினைத் தாங்கமுடியாது) விண்ணுலகம் நீ சென்றாய் (ஆனால் நானோ நீ இறந்ததறிந்தும் உயிர்தரித்து) இவ்வுலக வாழ்வை விரும்பி இன்னமும் பிழைத்திருந்தேன்.

அருஞ்சொற்பொருள்:

ஊன் - தசை (உடற்கொழுப்பு), கான்—காடு, தெவ்வர் – பகைவர்.

66. வண்மைஇயு மானமுமேல் வானவர்க்கும் பேர்க்ககிலாத்
திண்மைஇயுஞ் செங்கோ னெறியுந் திற்பாத
வுண்மைஇயு மெல்லா முடனே கொண்டே கினையே
தண்மைஇ தகைமதிக்கு மீந்த தனிக்குடையோய்

பதப்பிரிப்பு:

'வண்மைஇயும் மானமும்மேல் வானவர்க்குப்
பேர்க்ககிலாத்
திண்மைஇயும் செங்கோல் நெறியும் 'திறம்பாத
உண்மைஇயும் எல்லாம் உடனே கொண்டு
[ஏகினையே
தண்மைஇ தகைமதிக்கும் ஈந்த தனிக்
[குடையோய்

பொழிப்பு:

"பெருமையை உடைய சந்திரனுக்கும் குளிர்ச்சியை வழங்கிய ஒப்பற்ற வெண்கொற்றக் குடையினை உடையவனே, ஈகைப் பண்பையும் மான உணர்வையும் விண்ணுலகத் தேவர்களா லும் அழிக்கவியலாத வலிமையையும் நீதி தவ றாத செங்கோன்மையையும் உரை திறம்பாத சத்தியத்தையும் உன்கூடவே கொண்டு சென் றாயே.

அருஞ்சொற் பொருள் .

வண்மை — கொடை, பேர்க்ககிலா — அழிக்க வியலாத, திறம்பாத — மாறாத, தகை—பெருமை வண்மைஇயும், திண்மைஇயும், உண்மைஇயும், தண்மைஇயும் என்பனவற்றில் ஐகாரம் அளபெடுத் தன. [உயிரளபெடை]

வசிட்டன் தேற்றுதல்

67. என்றெடுத்துப் பற்பலவும் பன்னி யிடருழக்குங்
குன்றெடுத்த போலுங் குவவுத்தோட் கோளரியை
வன்றடக்கைத் தம்பியரும் வந்தடைந்த மன்னவருஞ்
சென்றெடுத்துத் தாங்கினார் மாவதிட்டன் தேற்றினான்

பதப்பிரிப்பு:

என்று எடுத்துப் பல்பலவும் பன்னி இடர்உழக்கும்
குன்றெடுத்த போலுங் குவவுத்தோட் கோளரியை
வன்றடக்கைத் தம்பியரும் வந்தடைந்த மன்னவரும்
சென்றெடுத்துத் தாங்கினார் மாவதிட்டன் தேற்றி
[னான்

பொழிப்பு:

என்று இவ்வாறு குரலெடுத்துப் பலவாறு பல சொற்களையும் விடாது கூறித் துன்பத்தில் மூழ்

கும், மலைகள் திரண்டு வடிவுகொண்டாற் போன்ற திரண்ட தோள்களினையுடைய வலிய சிங்கம் போன்ற இராமனை வலிய பெரிய கைகளை யுடைய தம்பிமாரும் (பரதனுடன்) கூடிவந்த அரசர்களும் அருகிற் சென்று தூக்கி அணைத்தார் கள்; பெரிய வசிட்டன் தேறுதல் கூறலானான்.

அருஞ்சொற் பொருள்:

பன்னி - விடாது கூறி, உழக்கும் – மூழ்கும், குவவு – திரண்டு, கோளரி – வலிய சிங்கம், வன் தடக்கை – வலிய திரண்ட கைகள்.

பரத்துவாசன் முதலாம் முனிவரும், மன்னர், மந்திரிகள் சேனைத் தலைவர் யாவரும் வருதல்.

68. பன்னரிய நோன்பிற் பரத்துவனே யாதியாம்
பின்னு சடையோரும் பேருலக மோரேழின்
மன்னவரு மந்திரிய ரெல்லாரும் வந்தடைந்தார்
தன்னுரிமைச் சேனைத் தலைவோருந் தாமடைந்தார்.

பதப்பிரிப்பு:

பண் அரிய நோன்பின் பரத்துவனே ஆதியாம்
பின்னு சடையோரும் பேருலகம் ஓர் ஏழின்
மன்னவரும் மந்திரியர் எல்லோரும் வந்து [அடைந்தார்
தன் உரிமைச் சேனைத் தலைவோரும் தாம் அடைந்தார்

பொழிப்பு:

சொல்லுதற்கு அரிய தவத்தினையுடைய பரத் துவாசன் முதலான திரித்த சடையையுடைய முனி

வர்களும் ஏழு தீவுகளாய் அமைந்த பெரிய உல கத்தின் மன்னர்களும் மந்திரிகள் யாவரும் வந்த டைந்தார்கள். சக்கரவர்த்திக்கு உரியதான சேனை யின் தலைவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

அருஞ்சொற் பொருள்:

பன்(ன) அரிய — சொல்லுதற்கு அரிய, பின் னு(ம்) சடை — திரித்தசடை

வசிட்டன் இராமனுக்குக் கூறியவை

69. மற்றும் வரற்பால ரெல்லாரும் வந்தடைந்து
சுற்று மிருந்த வமைதியினிற் றுன்புழக்குங்
கொற்றக் குரிசின் முகநோக்கிக் கோமலரோன்
பெற்ற பெருமைத் தவமுனிவன் பேசுவான்.

பதப்பிரிப்பு:

மற்றும் வரல்பாலர் எல்லாரும் வந்து அடைந்து
சுற்றும் இருந்த அமைதியினில் துன்புஉழக்கும்
கொற்றக் குரிசில் முகம்நோக்கிக் கோமலரோன்
பெற்ற பெருமைத் தவமுனிவன் பேசுவான்.

பொழிப்பு:

இன்னும் வரத்தக்க (அந்தணர்முதலாம்) பல ரும் வந்து சுற்றிலும் இருந்த சமயத்தில், துன் பத்தில் மூழ்கிய வெற்றியையுடைய பெரியோனான இராமனின் முகத்தினை நோக்கிச் சிறந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் நான் முகன் (பிரமன் பெற்ற வசிட்ட முனிவன் பேசலானான்.

அருஞ்சொற் பொருள்:

அமைதியில் சமயத்தில் (பொழுதில்). கொற்றம் — வெற்றி, குரிசில் — பெரியோன், கோமலர் — (மலர்களுக்கெல்லாம் அரசான) சிறந்த தாமரை மலர்.

70. துறத்தலு நல்லறத் துறையு மல்லது
புறத்தொரு துணையிலை பொருந்து மன்னுயிர்க்
கிறத்தலும் பிறத்தலு மியற்கை யென்பதை
மறத்தியோ மறைகளின் வரம்பு கண்டநீ.

பதப்பிரிப்பு:

'துறத்தலும் நல்அறத் துறையும் அல்லது
புறத்துஒரு துணை இலை பொருந்தும் மன்உயிர்க்கு
இறத்தலும் பிறத்தலும் இயற்கை என்பதை
மறத்தியோ மறைகளின் வரம்பு கண்டநீ'

பொழிப்பு:

'(இல்லறத்தைத்) துறந்து செல்லுதலும் (இல்லறத்தில் இருந்த காலத்திலும்) நல்ல தரும வழியிற் செல்லுதலும் அல்லாது, பொருந்தி நிலையாயுள்ள மனித உயிர்களுக்கு வேறு துணை எதுவும் இல்லை அவற்றிற்கு இறத்தலும் பிறத்தலும் இயல்பானவை என்னும் உண்மையை வேதங்களின் எல்லையை அளவிட்டநீ மறந்தாயோ?'

அருஞ்சொற் பொருள்

மன்னுயிர் மன் — (மன்னிய) நிலையான உயிர்கள், வரம்பு. எல்லை.

71. உண்மையில் பிறவிக ளுலப்பில் கோடிக
டண்மையில் வெம்மையிற் றழுவி லவ்வெனும்
வண்மையை நோக்கியவ் வறிய கூற்றின்பாற்
கண்மையு முளதெனக் கருத லாகுமோ.

பதப்பிரிப்பு:

உண்மைஇல் பிறவிகள் உலப்புஇல் கோடிகள்
தண்மையில் வெம்மையில் தழுவின எனும்
வண்மையை நோக்கி அவ் வறியகூற்றின் பால்
கண்மையும் உளதுஎனக் கருதல் ஆகுமோ?

பொழிப்பு

நிலையில்லாதனவாகிய பிறவிகள் அளவில்லாத கோடிக்கணக்கானவை. அவை இன்பங்கள், துன்பங்களாலே தழுவப்பெற்றவை என்று மிகுதியான நூல்களிலே கூறப்பட்ட கூற்றுக்களை (அறிந்தபின்பும்) அந்தக் கொடிய காலனிடத்திலே கண்ணோட்டம் உள்ளது என்றும் கருதலாமோ?

அருஞ்சொற் பொருள்:

உண்மைஇல்— நிலையில்லாத, உலப்பு—அளவு, தண்மை — குளிர்ச்சி, (இன்பத்துக்கு ஆகிக் குணவாகுபெயராகக் கொள்ளப்பட்டது. வெம்மை கொடுமை) துன்பத்துக்காகி வந்த குணவாகுபெயர்) வண்மை இயல்பு, தன்மை, கண்மை – கண்ணோட்டம் (இரக்கம்)

72. பெறுவதன் முன்னுயிர் பிரிதல் காண்டியால்
மறுவறு கற்பினில் வையம் யாவையு
மறுபதி னாயிர மாண்டு மாண்டவ
னிறுவது கண்டவற் றிரங்கல் வேண்டுமோ?

பதப்பிரிப்பு:

பெறுவதன் முன்உயிர் பிரிதல் காண்டியால்
மறுஅறு கற்பினில் வையம் யாவையும்
அறுபதினாயிரம் ஆண்டு ஆண்டவன்
இறுவது கண்டு அவற்கு இரங்கல்
[வேண்டுமோ?

பொழிப்பு:

" தாய்) பெறுவதன் முன்பே (சில பிராணி களின்) உயிர் பிரிவதை உலகிலே நீ கண்டிருக் கிறாய், குற்றமில்லாத கல்வியறிவு கொண்டு உலகம் அனைத்தையும் அறுபதினாயிரம் ஆண்டு கள் ஆண்டவன் தசரதன். அவன் இறப்பதைக் கண்டு வருந்துதல் வேண்டுமோ?"

அருஞ்சொற் பொருள்:

கற்பு — கல்வி (அறிவு), இறுவது இறப்பது இரங்கல் வருந்துதல்.

73. சிலமுந் தருமமுஞ் சிதைவில் செய்கையுஞ்
சூலமுந் திகிரியுஞ் சொல்லுந் தாங்கிய
மூலம்வந் துதவிய மூவர்க் காயினும்
காலமென் றொருவலை கடக்க லாகுமோ

பதப்பிரிப்பு:

சீலமும் தருமமும் சிதைவுஇல் செய்கையும்
சூலமும் திகிரியும் சொல்லும் தாங்கிய
மூலம்வந்து உதவிய மூவர்க்கு ஆயினும்
காலம்என்று ஒருவலை கடக்கல் ஆகுமோ?

பொழிப்பு:

நல்லொழுக்கமும், தருமமும் அழிவு இல்லாத படைத்தலாகிய தொழிலும் சூலமும் சக்கராயுத மும் சரசுவதியுமாகிய இவற்றைத் தரித்த, (எல் லாப் பொருள்களுக்கும்) மூலப் பொருளாய் அமைந்து அருளும் சிவன், விட்டுணு, பிரமன் மூவ ராயினும் காலம் என்ற ஒரு வலையினை (அவர் களாலே) கடத்தல் கூடுமோ?

அருஞ்சொற்பொருள்:

சீலம் — நல்லொழுக்கம்.

சூலம் ஏந்தியவன் சிவன், சக்கராயுதம் தரித்தவன் விட்டுனு, சரஸ்வதியை நாவில் இருத்தியவன் பிரமன். சொல் — சரசுவதி.

74. கண்முதற் காட்சிய கரையி னீளத்த
வுண்முதற் பொருட்கெலா மூற்ற மாவன
மண்முதற் பூதங்கண் மாயு மென்றபோ
தெண்முத லுயிர்க்குநீ யிரங்கல் வேண்டுமோ?

பதப்பிரிப்பு:

கண்முதல் காட்சிய கரைஇல் நீளத்த
உண்முதல் பொருட்குஎலாம் ஊற்றம்ஆவன
மண்முதல் பூதங்கள் மாயும் என்றபோது
எண்முதல் உயிர்க்குநீ இரங்கல் வேண்டுமோ

பொழிப்பு:

கண்முதலான பொறிகளின் காட்சி முதலான புலன்களுக்குக் காரணமானவையும் எல்லை இல்லாத நீட்சி உடையனவும் பிரபஞ்சம் முதலாம் பொருள்களுக்குப் பிறப்பிடமானவையுமாயுள்ள நிலம் முதலான ஐம்பூதங்களே அழியும் தன்மையன என்றால், இந்த உயிருக்காக நீ மனத்தில் வருந்துதல் தகுமோ?

அருஞ்சொற் பொருள்:

உண் — பிரபஞ்சம், பூதங்கள் — நிலம், தீ. நீர், காற்று, ஆகாயம் என்பன, எண்முதல் — மனம் (எண்ணுவதற்கு மூதற் காரணம்)

75. புண்ணிய நறுநெய்யிற் பொருவில் காலமாந்
திண்ணிய திரியினில் விதியென் றீயினி
லெண்ணிய விளக்கவை யிரண்டு மெஞ்சினா
லண்ணலே யவிவதற கையம் யாவதோ?

பதப்பிரிப்பு:

'புண்ணிய நறுநெய்யிற் பொருவில் காலமாம்
திண்ணிய திரியினில் விதிஎன் தீயினில்
எண்ணிய விளக்கு அவை இரண்டும் எஞ்சினால்
அண்ணலே அவிவதற்கு ஐயம் யாவதோ?'

பொழிப்பு:

பெரியோனே, நல்வினையாகிய நறுமணம் பொருந்திய நெய்யிலே, ஒப்பில்லாத விதி என்னும் வலிமையான திரியிலே கவனமாக ஏற்றப் பட்ட (உயிர்வாழ்க்கை என்னும்) விளக்கு, அந்த இருதிரிகளும் ஒழிந்து போனால் அணைந்து போவதில் ஐயப்பட என்ன உள்ளது?'

அருஞ்சொற் பொருள்:

பொருவு இல் – ஒப்பற்ற, காலம்–விதி, (ஊழ்)

76. இவ்வுல கத்தினு மிடரி லேகிடந்
தவ்வுல கத்தினு நரகி னாழ்ந்துபின்
வெவ்வினை துய்ப்பன விரிந்த யோனிக
ளெவ்வள விற்செல வெண்ண லாகுமே.

பதப்பிரிப்பு:

'(இவ் உலகத்தினும்) இடரிலேகிடந்து
அவ்வுலகத்தினும் நரகின் ஆழ்ந்துபின்
வெவ்வினை துயப்பன விரிந்த யோனிகள்
எவ்வளவில் செலவு எண்ணல் ஆகுமே?'

பொழிப்பு:

'இவ்வுலக வாழ்விலும் துன்பத்திற்கிடந்து வருந்தி மறவுலகத்திலும் நரகத் துன்பத்தில் ஆழ்ந்து அதன் பின்னரும் வினைப்பயன்களை அநுபவித்தற்கு இடமான பலவாகிய பிறப்புவகைகள் எந்த அளவுக்குள் அடங்க எண்ணல் கூடும்?'

அருஞ்சொற் பொருள்:

வெவ்வினை – கொடிய வினைகள், யோனிகள் – பிறப்பு வகைகள்,

77. உண்டுகொ லிதுவல துதவி நீசெய்வ
தெண்டகு குணத்தினாய் தாதை யென்றலாற்
புண்டரீ கத்தனி முதற்கும் போக்கரு
விண்டுவி னு லகிடை விளங்கி னா னரோ

பதப்பிரிப்பு:

"உண்டுகொல் இதுஅலது உதவிநீ செய்வது
எண்தகு குணத்தினாய் தாதை என்றலால்
புண்டரீ கத்தனி முதற்கும் போக்குஅரு
விண்டுவின் உலகிடை விளங்கினா னரோ"

பொழிப்பு:

"(யாவரும்) நன்கு மதிக்கத்தக்க பண்புகளை உடையவனே, (தசரதன்) உனக்குத் தந்தையாதலால், தாமரையிலே தோன்றிய ஒப்பற்ற முதல்வனான பிரமனுக்கும் செல்லுவதற்கு அரியதான விட்டுணுவின் (வைகுந்த) உலகிலே (அவன்) விளங்குகின்றான். இவ்வுதவி தவிர்ந்த வேறு உதவி எதுவும் நீ (அவனுக்குச்) செய்வதற்கு உள்ளதோ?

அருஞ்சொற் பொருள்:

எண்தகு குணத்தினாய் — யாவராலும் மதிக்கத்தக்க பண்புகள் உள்ளவனே, தனிமுதல் — ஒப்பற்ற முதல்வன் (பிரமன்) விண்டு — விட்டுணு, அரோ அசைநிலை.

78. ஐயநீ யாதொன்று மவலிப் பாயலை
யுய்திற மவற்கினி யிதனி னூங்குண்டோ
செய்வன வரன்முறை திருத்திச் சேந்தநின்
கையினா லொழுக்குதி கடனெ லாமென்றான்.

பதப்பிரிப்பு:

'ஐயநீ யாதுஒன்றும் அவலிப்பாய் அலை
உய்திறம் அவற்குஇனி இதனின் ஊங்கு உண்டோ
செய்வன வரன்முறை திருத்திச் சேந்தநின்
கையினால் ஒழுக்குதி கடன்எலாம்' என்றான்

பொழிப்பு:

'ஐயனே! நீ எதற்கும் துன்பம் அடையாதே! அவனுக்கு (தசரதனுக்கு) இதனிலும் மிக்கதான ஈடேற்றம் வேறு உள்ளதோ? நீ (தந்தைக்குச்) செய்யவேண்டிய இறுதிக்கடன்களை (வேதநூல்களிலே கூறப்பட்டவகையிலே) எல்லாம் வந்த முறைப்படி, செவ்வையாக உனது சிவந்த கையினாலே செலுத்துவாய்' என்றான் வசிட்டன்.

அருஞ்சொற் பொருள்:

அவலிப்பாய் — துன்பப்படுவாய், வரன்முறை (வேதங்களில்) வந்தமுறை, சேந்த — சிவந்த. ஒழுக்குதி - செலுத்துவாய்.

79. 'விண்ணுநீர் மொக்குளின் விளியும் யாக்கையை
யெண்ணிநீ யழுங்குத லிழுதைப் பாலதாற்
கண்ணினீ ருகுத்தலிற் கண்ட தில்லைபோய்
மண்ணுநீ ருகுத்திதா மரைக்கையா லென்றான்.

பதப்பிரிப்பு:

''விண்ணு நீர் மொக்குளின் விளியும் யாக்கையை
எண்ணி நீ அழுங்குதல் இழுதைப் பாலது
கண்ணில் நீர் உகுத்தலில் கண்டது இல்லைபோய்
மண்ணும்நீர் உகுத்திதா மரைகையால்''
[என்றான்

பொழிப்பு

மேகத்தினின்றும் விழும் மழைநீரிலே (தோன்றும்) குமிழிபோல அழியும் உடலினை நினைத்து நீ துன்பத்தில் ஆழ்தல் பேதைமையாகும், கண்ணிலிருந்தும் நீர் சொரிதலால் கண்டது ஒன்றும் இல்லை. சென்று உனது தாமரைக் கையினால நீர்க்கடன் செலுத்து' என்றான.

அருஞ்சொற் பொருள்:

விண்ணு — (விண் + உ) விண்ணில் அமையும் மேகம், மொக்குள் — குமிழி, இழுதை — பேதைமை உகுத்தல் - சொரிதல், மண்ணும நீர் — நீர்க்கடன் (தர்ப்பண நீர்.)

வசிட்டன் தேற்ற இராமன் தேறி நீர்க்கடன் செய்யச் செல்லுதல்

80. என்றபின் னேந்தலு மெழுந்து நான்மறைப்
பொன்றிணிந் தனசடைப் புனித னோடும்போய்ச்
சென்றனன் செறிதிரைப் புனலிற் செய்கென
நின்றன னிராமனு நெறியை நோக்கினான்.

பதப்பிரிப்பு:

என்றபின் ஏந்தலும் எழுந்து நால்மறைப்
பொன்திணிந் தனசடைப் புனிதனோடும்போய்ச்
சென்றனன் செறிதிசைப் புனலில் செய்கென
நின்றனன் இராமனும் நெறியை நோக்கினான்

பொழிப்பு:

என்று (வசிட்டன் சொன்ன) பின் உயர்ந்தோனான இராமன், நான்மறைகளிலும் வல்லவனும் பொன் திணிந்தது போன்ற இறுகிய சடையை உடையவனுமான தூயவனுடன் (வசிட்டனுடன்) சென்று, 'நெருங்கிய அலைகளையுடைய (கங்கை) நீரிலே செய்வாய்' என்று (வசிட்டன்) சொல்ல, (செய்யும்) இராமனும் முறைமையை எண்ணினான்.

அருஞ்சொற் பொருள்:

திணிந்தன — இறுகியனவான, புனிதன் — தூயவன் (வசிட்டன்)

இராமபிரான் இறந்த மன்னனுக்கு நீர்க்கடன் செய்தல்.

81. புக்கனன் புனலிடை முழுகிப் போந்தனன்
தக்கநன் மறையவன் சடங்கு காட்டத்தன்
முக்கையி னீர்விதி முறையி னீந்தன
னொக்கநின் றுயிர்தொறு முணர்வு நல்குவான்.

பதப்பிரிப்பு

புக்கனன் புனல்இடை முழுகிப் போந்தனன்
தக்கநன் மறையவன் சடங்கு காட்டத்தன்
முக்கையின் நீர்விதி முறையின் ஈந்தனன்
(ஒக்கநின்று உயிர்தொறும் உணர்வு நல்குவான்)

பொழிப்பு

உயிர்கள்தோறும் ஒரே தன்மையாக நின்று ஞானத்தை அருள்பவனாகிய இராமபிரான் நீரில் இறங்கி முழுகி வெளிவந்தான்; தகுதி வாய்ந்தவனும் நானமறையில் வல்லவனுமான வசிட்டன் (செய்ய வேண்டிய) சடங்கை அறிவிக்க, (கங்கை) நீரினை மூன்று முறைகள் எடுத்து விட்டான்.

அருஞ்சொற் பொருள்:

நீர் — தர்ப்பணநீர், முக்கை மூன்றுமுறை தக்க — தகுதியான, ஒக்க ஒரேதன்மையாக.

தர்ப்பணஞ் செய்தபின் இராமன் பர்ணசாலைக்கு மீளுதல்

82. ஆனவன் பிறவுள யாவு மாற்றிப்பின்
மானமந் திரத்தவர் மன்னன் மாதவ
ரேனையர் பிறர்களுஞ் சுற்ற வேகினன்
சானகி யிருந்த வச்சாலை யெய்தினான்.

பதப்பிரிப்பு

ஆனவன் பிறஉள யாவும் ஆற்றிப்பின்
மானம்மந் திரத்தவர் மன்னர் மாதவர்
ஏனையர் பிறர்களும் சுற்ற ஏகினன்
சானகி இருந்த அச் சாலை எய்தினான்.

பொழிப்பு:

(இவ்வாறு நீர்க்கடனை) ஆற்றியவன், உள்ளனவான கிரியைகளையும் செய்த பின்பு பெருமையையுடைய மந்திரிகளும், அரசர்களும் பெருந்தவத்தரான முனிவர்களும் ஏனைய பிறரும் சூழ்ந்துதுவரச் சீதை இருந்த பர்ண சாலையை அடைந்தான்.

அருஞ்சொற் பொருள்:

மானம் - பெருமை, மந்திரத்தவர் — மந்திரிகள். சாலை — பர்ணசாலை, (இலைதழைகளால் வேயப்பட்ட குடிசை)

பரதன் சீதையின் பாதங்களில் வீழ்ந்து அழுதல்

83. எய்திய வேலையிற் றமிய ளெய்திய
தையலை நோக்கினன் சாலை நோக்கினான்
கைகளிற் கண்மலர் புடைத்துக் கான்மிசை
யையனப் பரதன்வீழ்ந் தரற்றி னானரோ.

பதப்பிரிப்பு:

எய்திய வேலையில் தமியள் எய்திய
தையலை நோக்கினன் சாலை நோக்கினான்
கைகளில் கண்மலர் புடைத்துக் கால்மிசை
ஐயன் அப் பரதன் வீழ்ந்து அரற்றினானரோ.

பொழிப்பு

(பர்ணசாலையை அடைந்த வேளையில் சிறப்புப் பொருந்திய பரதன், தனித்தவளாய் இருந்த சீதையைப் பார்த்தான்; பர்ணசாலையையும் பார்த்தான்; (தனது) தாமரை போன்ற கண்களைக் கைகளாலே மூடியவண்ணம் (சீதையின்) அடிகளில் விழுந்து அழுதான்.

அருஞ்சொற் பொருள்:

வேலை - வேளை, தமியன் - தனித்திருந்த வள், தையல்- பெண் (சீதை புடைத்து-பொத்தி, (மூடி) ஐயன் - சிறந்தவன், பெரியோன்.

பரதனது துயரம்

84. வெந்துயர் தொடர்தர விம்மி விம்மி நீ
ருந்திய நிரந்தர மூற்று மாறில
சிந்திய குரிசிலச் செம்மல் சேந்தகண்
ணிந்தியங் களிலெறி கட்லுண் டென்னவே

பதப்பிரிப்பு

வெம்துயர் தொடர்தர விம்மிவிம்மி நீர்
உந்திய நிரந்தரம் ஊற்று மாறுஇல
சிந்திய குரிசில் அச் செம்மல் சேந்தகண்
இந்தியங்களில் எறி கடல் உண்டு என்னவே

பொழிப்பு

இந்திரியங்களிலே அலை எறிகின்ற கடல் உண்டு என்று சொல்லும்படி பெருமை சிறந்த மேலோனாகிய பரதனது சிவந்த கண்கள், கொடிய துயரம் தொடர்வதால் விம்மிவிம்மிப் புலம்பி, நீரை வெளிச் செலுத்தி நிலையான (நீர்) சுரத் தல் மாறாதனவாயின.

அருஞ் சொற் பொருள்:

நிரந்தரம் - நிலையாக, உந்திய - செலுத்திய

பரதனைத் தாங்கியவண்ணம் இராமன் தசரதனின் இறப்பைக் கூறல்

85. அந்நெடுந் துயருறு மரிய வீரனைத்
தன்னெடுங் கரத்தினா லிராமன் றாங்கின
னன்னெடும் கூந்தலை நோக்கி நாயக
னென்னெடும் பிரிவினிற் றுஞ்சினா னென்றான்

பதப்பிரிப்பு:

அந்நெடும் துயர்உறும் அரிய வீரனைத்
தன்நெடும் கரத்தினால் இராமன் தாங்கினான்
நல்நெடும் கூந்தலை நோக்கி நாயகன்
என்னெடும் பிரிவினில் துஞ்சினான் என்றான்.

பொழிப்பு

அத்தகைய பெருந்துன்பம் அடைந்த அரிய வீரம் பொருந்திய (பரதனைத்) தலைவனாகிய இராமன், தனது நெடிய கைகளினால் எடுத்து அணைத்த வண்ணம், ''நன்மையான நீண்ட கூந்தல் பொருந்திய சீதையை நோக்கி தலைவனான என் தந்தை எனது நீண்ட காலப் பிரிவினைத் தாங்காது இறந்தான் என்றான்.

அருஞ்சொற்பொருள்:

நன்னெடுங்கூந்தல் – அழகிய நெடுங் கூந்தல் சீதையைக் குறித்தது. பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, துஞ்சினான்– இறந்தான்.

சீதையின் துயரம்

86. துண்ணெனு நெஞ்சினா டுளங்கி னாணெடுங்
கண்ணெனு நெடுங்கடல் கலுழி கான்றிட
மண்ணெனுஞ் செவிலிமேல் வைத்த கையினாள்
பண்ணெனுங் கிளவியாற் பன்னி யேங்கினாள்.

பதப்பிரிப்பு:

துண் எனும் நெஞ்சினாள் துளங்கினாள் நெடும்
கண் எனும் நெடுங்கடல் கலுழி கான்ற இட
மண் எனும் செவிலிமேல் வைத்த கையினாள்
பண் எனும் கிளவியால் பன்னி யேங்கினாள்.

பொழிப்பு:

துணுக்குற்ற நெஞ்சினளாகிச் சீதை நடுங்கி, இரு கண்கள் என்னும் பெருங் கடலானது கலங்கி நீரைச் சொரிய, பூமி என்னும் செவிலித்தாய் மீது பதித்த கைகளோடு, இசைப்பாட்டு என்று கூறத் தக்க சொற்களைப் பலவாறு சொல்லிப் புலம்பினாள்.

அருஞ்சொற் பொருள்:

துளங்கினாள் — நடுங்கினாள், (துளங்கல் — நடுங்கல்,) கலுழி — கலங்கி, செவிலி — வளர்ப்புத் தாய், பண் - இசைப்பாட்டு (இராகத்தையும் குறிக்கும்)

87. கன்னகு திரள்புயக் கணவன் பின்செல
நன்னக ரொத்தது நடந்த கானமு
மன்னவன் றுஞ்சின னென்ற மாற்றத்தா
லன்னமுந் துயர்க்கட லடிவைத் தாளரோ

பதப்பிரிப்பு:

கல்நகும் திரள்புயக் கணவன் பின்செல
நல்நகர் ஒத்தது நடந்த கானமும்
மன்னவன் துஞ்சினன் என்ற மாற்றத்தால்
அன்னமும் துயர்க்கடல் அடிவைத்தாள் அரோ

பொழிப்பு:

மலையையும் பரிகசிப்பதான திரண்ட வலிய புயங்களையுடைய கணவன் இராமன் பின்பு நடந்து வந்த காடும் (சீதைக்கு) நல்ல (அயோத்தி) நகரம் ஆயிற்று. அரசனான தசரதன் இறந்தான் என்ற கூற்றினால் அன்னம் போன்ற சீதை துன்பமாகிய கடலிலே கால் வைத்தாள்.

அருஞ்சொற் பொருள்:

நகும் சிரிக்கும் (பரிகசிக்கும்), மாற்றம் — கூற்று, அன்னம் — அன்னம்போலும் அழகிய சீதை (உவமவாகுபெயர்), அரோ — அசைநிலை

முனிவர்களின் மனைவிமார் சீதையைத் தாங்கி நீராட்டி இராமனிடம் சேர்த்தல்.

88. ஆயவ டன்னைநேர்ந் தங்கை யேந்தினர்
தாயரின் முனிவர்தந் தருமப் பன்னியர்
தூயநீ ராட்டினர் துயர நீக்கினர்
நாயகற் சேர்த்தினர் நவையு னீங்கினார்

பதப்பிரிப்பு:

ஆயவள் தன்னைநேர்ந்து அங்கை ஏந்தினர்
தாயரின் முனிவர்தம் தருமப் பன்னியர்

தூயநீர் ஆட்டினர் துயரம் நீக்கினர்
நாயகன் சேர்த்தினர் நவையுள் நீங்கினார்

பொழிப்பு;

அவ்வேளை, குற்றத்தில் நீங்கிய முனிவர்களின் தருமபத்தினியர், தாய்மார் போலச் சீதையைத் தம் அழகிய கைகளாலே தாங்கிச் சென்று, தூய்மையான நீரிலே நீராட்டி அவளின் துயரத்தினைப் போக்கிக் கணவனான இராமனிடம் சேர்த்தனர்.

அருஞ்சொற்பொருள்:

ஆயவள் — அவ்வாறு துன்பமுற்ற சீதை, தாயரின் — தாய்மாரைப் போன்று, அங்கை-(அம்+கை) அழகியகைகள். அகங்கைகள் என்றும் கொள்ளலாம். பன்னியர் மனைவியர்.

சுமந்திரன், தாய்மாரோடும் பெரியோரோடும் இராமனிடம் வருதல்,

89. தேன்றருந் தெரியலச் செம்ம னால்வரை
யீன்றவர் மூவரோ டிருமை நோக்குறுஞ்
சான்றவர் குழாத்தொடுந் தரும நோக்கிய
தோன்றல்பாற் சுமந்திரன் தொழுது தோன்றினான்.

பதப்பிரிப்பு:

தேன்தரும் தெரியல்அச் செம்மல் நால்வரை
ஈன்றவர் மூவரோடு இருமை நோக்கு உறும்
சான்றவர் குழாத்தொடும் தருமப் நோக்கிய
தோன்றல்பால் சுமந்திரன் தொழுது
[தோன்றினான்.

பொழிப்பு:

தேன் சொரிகின்ற மாலையையுடைய அந்த மக்கள் நால்வரையும் பெற்ற தாய்மார் மூவரோடும் இம்மை, மறுமை என்னும் இரண்டினதும் இயல்பினை ஆராய்ந்தறிய வல்ல சான்றோர்கள் கூட்டத்தோடும் தருமத்தையே (எப்பொழுதும்) சிந்திக்கின்ற மேலோனாம் இராமனை வணங்கிய வண்ணம் சுமந்திரன் அங்குத் தோன்றினான்.

அருஞ்சொற்பொருள்:

தெரியல் — மாலை, ஈன்றவர் மூவர் கோசலை (இராமன்) கைகேயி (பரதன்), சுமித்திரை — (இலக்குவன்) சத்துருக்கன், இருமை — இம்மை மறுமை, சுமந்திரன் — தசரனது மந்திரியாயும் தேர்ப்பாகனாயும் விளங்கியவன்.

தாய்மாரின் பாதங்களில் இராமன் கண்ணீர் சிந்தி நிற்றல்.

90. எந்தை யாண்டையா னியம்பு வீரெனா
வந்த தாயர்தம் வயங்கு சேவடிச்
சிந்தி நின்றனன் சேந்த கண்ணநீர்
முந்தை நான்முகத் தவற்கு முந்தையான்.

பதப்பிரிப்பு:

''எந்தை யாண்டையான் இயம்புவீர்'' எனா
வந்த தாயர்தம் வயங்கும் சேவடி,
சிந்தி நின்றனன் சேந்த கண்ண நீர்
முந்தை நான்முகத்து அவற்கு முந்தையான்.

பொழிப்பு:

''எம் தந்தை(போன்றவன்) எங்கு உள்ளான், சொல்லுங்கள்?'' என்று வினாவி (அவன் இருந்த இடத்திற்கு) வந்த தாய்மாரின் விளங்குகின்ற சிவந்த கால்களிலே, (எல்லாப் பிராணிகளுக்கும்) முற்பட்ட பிரமனுக்கும் முன்னோனான இராமன் தனது சிவந்த கண்களிலிருந்து நீரைச் சொரிந்து நின்றான்.

அருஞ்சொற் பொருள்:

முந்தை – முற்பட்ட, முந்தையான் - முன்னோன், இராமன் திருமாலின் அவதாரம். பிரமன் திருமாலின் உந்திக் கமலத்திலே தோன்றியவன். உந்திக்கமலம் – கொப்பூழில் மலர்ந்த தாமரை, வயங்கும்-விளங்கும். தாய்மார் அன்புகாரணமாக இராமனை 'எந்தை' என்று விளித்தனர்.

91. தாய ருந்தலைப் பெய்து தாந்தழீஇ
யோய்வி லன்பினா லுரற லோங்கினா
ராய சேனையு மணங்க னார்களுந்
தியில் வீழ்ந்துதி மெழுகிற் றேம்பினார்.

பதப்பிரிப்பு:

தாயரும் தலைப் பெய்து தாம் தழீஇ
ஓய்வு இல் அன்பினால் உரறல் ஓங்கினார்
ஆய சேனையும் அணங்கு அனார்களும்
தீயில் வீழ்ந்துதீ மெழுகில் தேம்பினார்.

பொழிப்பு:

அத்தாய்மார்களும் ஒருங்குகூடித் தாங்கள் (தனித்தனியாக இராமனைத்) தழுவிய வண்ணம்

நீங்காத அன்பினாலே கதறுதலில் மிக்கனர். அந்தப் படையினரும் தெய்வப் பெண்களை ஒத்த மற்றையமாதர்களும் நெருப்பில் விழுந்து உருகுகின்ற மெழுகைப் போன்று மனம் உருகி அழுதார்கள்.

அருஞ்சொற் பொருள்

உரறல் கதறல், ஆயசேனை – அத்தகையனவாகிய (அந்தச் சேனை. அணங்கு – தெய்வப் பெண். அனார் –(அன்னார்) போன்றவர், அன்ன – உவமவுருபு. தீ மெழுகு–தீயும் (உருகும்) மெழுகு

92. பின்னவ் வீரரைப் பெற்ற பெற்றியப்
பொன்ன னார்களுஞ் சனகன் பூவையைத்
துன்னி மார்புறத் தொடர்ந்து புல்லினா
ரின்னல் வேலைபுக் கிழிந்த ழுந்துவார்.

பதப்பிரிப்பு:

பின் அவ் வீரரைப் பெற்ற பெற்றிஅப்
பொன் அனார்களும் சனகன் பூவையைத்
துன்னி மார்புஉறத் தொடர்ந்து புல்லினார்
இன்னல் வேலைபுக்கு இழிந்து அழுந்துவார்.

பொழிப்பு:

பின்பு (இராமன்முதலிய வீரர் நால்வரைப் பெற்ற சிறப்புடைய இலக்குமியை ஒத்த தாய்மார்கள், சனகமகாராசன் பெற்ற நாகணவாயை ஒத்த அழகிய சீதையை அடைந்து, தங்கள் மார்பாரத் தழுவிக் கொண்டு துன்பக் கடலினுள்ளே இறங்கி அமிழ்வாராயினர்.

அருஞ்சொற் பொருள்:

பொன் — இலக்குமி, பூவை நாகணவாய். (இனிய ஓசையை எழுப்பும் பறவைகளுள் ஒரு வகை) துன்னி — நெருங்கி (அடைந்து)

93. சேனை வீரருந் திருநன் மாநகர்
மானை மாந்தரு மற்று ளோர்களு
மேனை வேந்தரும் பிறரும் யாவருங்
கோனை யெய்தினார் குறையுஞ் சிந்தையார்.

பதப்பிரிப்பு:

சேனை வீரரும் திருநல் மாநகர்
மால்நை மாந்தரும் மற்று உளோர்களும்
ஏனை வேந்தரும் பிறரும் யாவரும்
கோனை எய்தினார் குறையும் சிந்தையார்

பொழிப்பு:

படை வீரர்களும் அழகிற் பொலியும் நல்ல பெரிய அயோத்தி நகரத்திலிருந்து வந்த, திருமாலாகிய இராமனுக்காய் வருந்தும் மக்களும் மற்றுள்ளவர்களும் ஏனைய அரசர்களும் பிறருமாகிய அனைவரும் அழியும் மனத்தை உடையவராய்த் (தம்) அரசன் இராமனை வந்தடைந்தார்கள்.

அருஞ்சொற் பொருள்:

திரு - அழகிய, மாநகர் — பெரியநகர் (தலைநகர், கோசல நாட்டுக்குத் தலைநகர் அயோத்தி. யுத்தமே இடம்பெறாத (அ+யுத்தி) நகர் என்பது அயோத்திக்குப் பொருள்) மால்—திருமால், ஈண்டு இராமனைக் குறித்தது நை (யும்) - வருந்தும்.

கதிரவன் மறைவு.

94. படஞ்செய்ந் நாகணைப் பள்ளி நீக்கினா
னிடஞ்செய் தொல்குலத் திறைவ னாதலால்
றடஞ்செய் தேரினான் றானு நீரினாற்
கடஞ்செய் வானெனக் கடலின் மூழ்கினான்.

பதப்பிரிப்பு:

படம் செய்ந் நாகஅணைப் பள்ளி நீங்கினான்
இடம்செய் தொல்குலத்து இறைவன் ஆதலால்
தடம்செய் தேரினான் தானும் நீரினால்
கடன்செய் வான்எனக் கடலில் மூழ்கினான்.

பொழிப்பு:

(தனது) படத்தினை விரிப்பதாகிய (ஆதி சேடன் என்னும்) நாகத்தை அணையாகக் கொண்டு துயில்வதை நீக்கி (அவதாரம் எடுத்து வந்த), இராமனுடைய தொன்மையான குலத்தின் தலைவன் (சூரியன்) ஆதலால், வலிய தேரினை யுடைய கதிரவன், தானும் தசரதனுக்கு நீர்க் கடன் செய்வான் போல மேற்குக் கடலிலே மூழ்கினான்.

அருஞ்சொற்பொருள்:

அணை – படுக்கை, தொல்குலம் – பழைமை யான குலம், இறைவன் – தலைவன் (இராமன்) (சூரிய குலத் தோன்றல்) தடம் – வலிமை.

பரிவாரம் சூழ்ந்திருக்க இராமன் பரதனின் தவவேடத்துக்கான காரணம் வினாவல்.

95. அன்று தீர்ந்தபின் னரச வேலையுந்
துன்று செஞ்சடைத் தவருஞ் சுற்றமுந்
தன்று ணைத்திருத் தம்பி மார்களுஞ்
சென்று சூழவாண் டிருந்த செம்மறான்

பதப்பிரிப்பு:

அன்று தீர்ந்தபின் அரச வேலையும்
துன்று செம்சடைத் தவரும் சுற்றமும்
தன் துணைத் திருத் தம்பி மார்களும்
சென்று சூழ ஆண்டு இருந்த செம்மல்தான்

பொழிப்பு:

அந்தநாள் (இவ்வாறு) கழிந்தபின்பு, அரசர் கூட்டமும் நெருங்கிச் செறிந்த சிவந்த சடைகளையுடைய தவமுனிவர்களும் சுற்றத்தவரும் தனக்குத் துணைவரான சிறந்த தம்பிமாரும் சென்று தன்னைச் சூழ்ந்திருக்க அவ்விடத்திலிருந்த தலைவனான இராமன்,

அருஞ்சொற் பொருள்:

வேலை – சமுத்திரம் (ஈண்டுக் கூட்டத்தைக் குறித்தது.) துன்று–நெருங்கி, தவர்–தவத்தரான முனிவர்கள். திரு – சிறப்பு. ஆண்டு–அந்த இடம்.

இராமன் கூற்று.

96. வரதன் றுஞ்சினான் வைய மாணையாற்
சரத நின்னதே மகுடந் தாங்கலாய்
விரத வேடநீ யென்கொல் வேண்டுவான்
பரத கூறெனாப் பரிந்து கூறினான்.

பதப்பிரிப்பு:

'வரதன் துஞ்சினான் வையம் ஆணையால்
சரதம் நின்னதே மகுடம் தாங்கலாய்
விரத வேடம்நீ என்கொல் வேண்டுவான்
பரத, கூறு' எனப் பரிந்து கூறினான்'

பொழிப்பு:

"பரதனே, (யாவரும் விரும்புவனவற்றை வழங்கும்) வள்ளலான தசரதனும் இறந்தான். (அவனது) கட்டளையால் நிலவுலகம் உனக்கே உண்மையாய் உரியது. நீ முடிசூடிக் கொள்ள வில்லை. தவக்கோலம் நீ விரும்பிப் பூண்டது எதற்கு? சொல்" என்று (இராமன்) பரிவோடு கேட்டான்.

அருஞ்சொற் பொருள்:

வரதன் — வள்ளல் (வரம் அருள்பவன்,), துஞ்சினான் - இறந்தான், சரதம் - உண்மை, விரதம்— — தவம்.

பரதனின் பதைபதைப்புடன் கூடிய கூற்று

97. என்ற லும்பதைத் தெழுந்து கைதொழா
நின்று தோன்றலை நெடிது நோக்கி நீ
யன்றி யாவரே யறத்து ளோரதர்
பின்று வாய்கொலா மென்னப் பேசுவான்.

பதப்பிரிப்பு:

என்றலும் பதைத்து எழுந்து கைதொழா
நின்று தோன்றலை நெடிது நோக்கி "நீ
அன்றி யாவரே அறத்து உளோர் அதர்
பின்றுவாய் கொலாம்" என்னப் பேசுவான்.

பொழிப்பு:

(இராமன்) இவ்வாறு கூறுதலும் துடிதுடித்து எழுந்து கைதொழுது நின்று மேலோனாம் இராமனை நீளநோக்கி, 'உன்னையல்லாது தருமநெறியில் நிற்பவர் வேறு யார்? அவ்வாறிருக்கவும் அந்த அறமுறைமையினின்றும் நீ பின்வாங்குவாயோ?'' என்று பரதன் பேசுவானாய்,

அருஞ்சொற் பொருள்:

அதர் — முறைமை, பின்றுவாய் பின்வாங்குவாய்,

98. மனக்கொன் றாதன வரத்தி னின்னையு
நினக்கொன் றாநிலை நிறுவி நேமியான்
றனைக்கொன் றாடருந் தனய னாதலா
லெனக்கொன் றாதவ மடுப்ப தெண்ணினால்

பதப்பிரிப்பு:

'மனக்கு ஒன்றாதன வரத்தில் நின்னையும்
நினக்கு ஒன்றாநிலை நிறுவி நேமியான்
தனைக் கொன்றாள் தரும் தனயன் ஆதலால்
எனக்கு ஒன்றா தவம் அடுப்பது எண்ணினால்'

பொழிப்பு:

''மனத்துக்குப் பொருந்தாதனவாகிய வரங்களால் உன்னையும் உனக்குப் பொருந்தாத நிலைமையிலே (தவமுயற்சியிலே) நிறுத்தி, ஆணைச் சக்கரம் கொண்டவனையும் (தசரதனை) கொன்றவளான (கைகேயியின்) மகனாதலால் அரா யுமிடத்து, நான் தவக்கோலம் மேற்கொள்வது எனக்குத் தக்கதொன்றன்று (என்று கருதினாய் போலும்).''

அருஞ்சொற் பொருள்:

மனக்கு — மனத்துக்கு, ஒன்றாதன — பொருந்தாதன, நேமி — சக்கரம். (ஆணைச் சக்கரம்), தனயன் — மகன், அடுப்பது - மேற்கொள்வது.

99. நோவ தாகவிவ் வுலகை நோய் செய்த
பாவ காரியிற் பிறந்த பாவியேன்
சாவ தோர்கிலேன் றவஞ்செய் வேனலேன்
யாவ னாகியிப் பழியின் றேறுவேன்.

பதப்பிரிப்பு :

"நோவது ஆகஇவ் உலகை நோய் செய்த
பாவ காரியில் பிறந்த பாவியேன்
சாவது ஓர்கிலேன் தவம் செய்வேன் அலேன்
யாவன் ஆகிஇப் பழிநின்று ஏறுவேன்."

பொழிப்பு:

"இந்த உலகத்தினை வருத்தத்திற்கு உள்ளாக்கி நோவச் செய்த பாவகாரியான கைகேயியின் வயிற்றிலே பிறந்த பாவியாகிய நான் சாவதற்கு எண்ணவில்லை; தவமும் மேற்கொள்ளவில்லை. எத்தன்மையனாய் இந்தப் பழியினின்றும் கரையேறுவேன்?"

அருஞ்சொற்பொருள்

ஓர்கிலேன் — எண்ணிற்றிலேன் (எண்ணவில்லை), யாவன் எத்தன்மையன், - எத்தகையவன், ஏறுவேன் — (கரை) ஏறுவேன்.

100. நிறையி னீங்கிய மகளிர் நீர்மையும்
பொறையி னீங்கிய தவமும் பொங்கருட்
டுறையி னீங்கிய வறமுந் தொல்லையோர்
முறையி னீங்கிய வரசின் முந்துமோ

பதப்பிரிப்பு:

நிறையின் நீங்கிய மகளிர் நீர்மையும்
பொறையின் நீங்கிய தவமும் பொங்கு அருள்
துறையின் நீங்கிய அறமும் தொல்லையோர்
முறையின் நீங்கிய அரசின் மூந்துமோ?

மொழிப்பு:

"கற்புக்குரிய நிறைஎன்னும் பண்பினின்றும் விலகிய பெண்களின் இயல்பும், பொறுமையின்றும் நீங்கிய தவநெறியும் முன்னோராது முறைமையி னின்றும்" (மூத்தோனுக்கு அரசு) என்ற முறைமை யினின்றும் நீங்கிய அரசாட்சியிலும் முற்படுமோ!"

அருஞ்சொற் பொருள்

முன்சொன்ன தீமைகளினும், முறையின்றிக் கைக்கொள்ளும் அரசாட்சி இழிவானது எ - று. நிறை 'நெஞ்சைக் கற்பின்-நெறியில் நிறுத்தல்' — பரிமேலழகர்.

'சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை, - திருக்குறள் 5

தொல்லையோர் பழையோர், முன்னோர். தொல்லை - பழைமை.

101 பிறந்து நீயுடைப் பிரிவி னொல்பதந்
துறந்து மாதவந் தொடங்கு வாயென்றான்
மறந்து நீதியிற் றிறம்பி வாளிற்கொண்
டறந்தின் றாலென வரச தாள்வெனோ.

பதப்பிரிப்பு:

'பிறந்து நீ உடைப் பிரிவுஇல் தொல்பதம்
துறந்து மாதவம் தொடங்குவாய் என்றால்
மறந்து நீதியில் திறம்பி வாளில் கொன்று
அறம்தின் றால்என அரசு அது ஆள்வெனோ?'

பொழிப்பு:

''(தசரதனின் மூத்த மகனாய்ப்) பிறந்தும் நீ உடைமையாய்க் (கொள்வதற்குரிய) நீங்கத்தகாத, தொன்றுதொட்டு வருவதாகிய (அரசாளும்) பதவியைத் துறந்து பெரிய தவத்தினைச் செய்யத் தொடங்குவாய் என்றால், மறந்தாயினும் நீதியினின்றும் விலகித் தருமத்தை வாளினாலே கொன்று தின்றாற் போல நான் அரசிதை ஆள்வேனோ?''

அருஞ்சொற் பொருள்:

தொல்பதம் - (தொன்மைப் பதம்)—தொன்றுதொட்டு வரும் அரசபதவி(பதம்—பதவி), திறம்பி—விலகி

102. தொகையி லன்பினா லிறைவன் றுஞ்சநீ
புகையும் வெஞ்சுரம் புகுதப் புந்தியால்
வகையில் வஞ்சனா யரசு வவ்வயான்
பகைவ னேகொலா மிறவு பார்க்கின்றேன்.

பதப்பிரிப்பு:

'தொகைஇல் அன்பினால் இறைவன் துஞ்சநீ
புகையும் வெஞ்சுரம் புகுதப் புந்தியால்
வகையில் வஞ்சனாய் அரசு வவ்வயான்
பகைவனே கொலாம் இறவு பார்க்கின்றேன்'

பொழிப்பு:

''உன்மீது அளவில்லாத அன்பினாலே அரசனான (தசரதன்) இறந்துபோக, நீ புகைந்து எரிவதான வெப்மை பொருந்திய காட்டிலே புக, மனத்தினால் வகுத்துக்கூற அரிதாகிய வஞ்சகனாய்ச் சோர்வு பார்த்து (உனது) அரசினைக்

கவர (நான்) உன் பகைவனோ?''

அருஞ்சொற் பொருள்:

தொகைஇல் - அளவில்லாத, சுரம் காடு, புந்தி மனம். வகைஇல் வகுத்தற்கு அரிய. வவ்வ— — கவர, இறவு - சோர்வு.

103. உந்தை தீமையு முலகு நாதநோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையு
மெந்தை நீங்கமீண் டரசு செய்கெனாச்
சிந்தை யாவதுந் தெரியக் கூறினான்

மாறாத நோய்.

பதப்பிரிப்பு:

''உம்தை தீமையும் உலகு நாதநோய்
தந்த தீவினைத்· தாய்செய் தீமையும்
எம்தை நீங்கமீண்டு அரசு செய்க'' எனாச்
சிந்தை ஆவதும் தெரியக் கூறினான்.

பொழிப்பு:

''உலகின் தலைவ உன் தந்தையான தசரதன் செய்ததீமையும் உலகுக்கு ஏற்படக் கூடாத பெருந்துன்பத்தினைத் தந்த என் தாய் செய்த தீமையும் நீங்குமாறு நீ மீண்டும் அரசு செய்க' என்று (தனது) மனக்கருத்து முழுவதையும் (இராமன்) விளங்கிக்கொள்ளும் வகையிற் கூறினான்.

அருஞ்சொற் பொருள்:

தசரதனைப் பரதன் உந்தை (உன்தந்தை) என்று கூறியதற்குக் காரணம். ''இராமனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டா'' என்ற தசரதனின் மன்றாடலை ஏற்காத கைகேயியை அவன்

வெறுத்து 'நீயும் என் தாரம் அல்லை, நின்மகன் பரதனும் என் மகன் அல்லன்' என்று துறந்தமையே. பரதன் தசரதனுக்கு இறுதிக்கடன் செய்யமுன்வந்த பொழுது, வசிட்டன் தசரதனின் துறத்தலைக் கூறிப் பரதனைத் தடுத்ததும் ஈண்டு நினைவு கூரற்குரியது.

இராமன் பரதனுக்குக் கூறிய அறிவுரை

104. சொற்ற வாசகத் துணிவு ணர்ந்தபி
னிற்ற தோவிவன் மனமென் றெண்ணுவான்
வெற்றி வீரயான் விளம்பக் கேளெனா
முற்று நோக்கினான் மொழிதன் மேயினான்.

பதப்பிரிப்பு:

சொற்ற வாசகத் துணிவு உணர்ந்த பின்
'இற்றதோ இவன் மனம்' என்று எண்ணுவான்
'வெற்றிவீர! யான் விளம்பக்கேள்' என்பான்
முற்றும் நோக்கினான் மொழிதல் மேயினான்

பொழிப்பு

பரதன் கூறிய சொற்களின் உறுதிப் பாட்டினை உணர்ந்து கொண்டபின், 'இவன் கருத்து இந்தத் தன்மையதோ' என்று எண்ணியவனாய் முழுமையாக ஆலோசித்து 'வெற்றி வீரனே, நான் கூறுவதைக் கேள்' என்று (இராமன்) கூறத் தொடங்கினான்.

அருஞ்சொற் பொருள்:

சொற்ற - கூறிய, துணிவு - உறுதிப்பாடு, இற்றதோ - இன்ன தன்மையதோ, முற்றும் - முழு

மையும், நோக்கினான் — ஆலோசித்தான், மேயி னான் தொடங்கினான்.

105. முறையும் வாய்மையு முயலு நீதியு
மறையு மேன்மையோ டறனு மாதியாந்
துறையுள் யாவையுஞ் சுருதி நூல்விடா
விறைவ ரேவலா லியைவ காணையா

பதப்பிரிப்பு:

'முறையும் வாய்மையும் முயலும் நீதியும்
அறையும் மேன்மையோடு அறனும் ஆதியாம்
துறையுள் யாவையும் சுருதி நூல்விடா
இறைவர் ஏவலால் இயைவ காண்ஐயா'

பொழிப்பு:

''ஐயனே, ஒழுக்கமும் உண்மையும் முயலத் தக்க நீதியும், சொல்லத்தக்க மேன்மையோடு கூடிய தருமமும் ஆகிய நல்ல வழிகளிலெல்லாம், வேதங்களின் பொருளை விடாமற் கொண்டவை யாகிய சாத்திரங்களின் நெறிகளை விடாது கடைப் பிடிக்கும் முறைமைகள் அரசர்களின் கட்டளை களாலே உலகிலே பொருந்துவனவாகும்.

அருஞ்சொற்பொருள்:

முறை - நீதி, அறையும் — கூறும், சுருதி — சாத்திரம் (மநுதருமசாத்திரம் முதலியன.) இறை வர் — அரசர்.

106. பரவு கேள்வியும் பழுகின் ஞானமும்
விரவு சீலமும் வினையின் மேன்மையு
முரவி லோய்தொழற் குரிய தேவருங்
குரவ ரேயெனப் பெரிது கோடியால்.

பதப்பிரிப்பு:

இபரவும் கேள்வியும் பழுதுஇல் ஞானமும்
விரவும் சீலமும் வினையின் மேன்மையும்
உரம் விலோய்! தொழிற்கு உரிய தேவரும்
குரவரே எனப் பெரிது கோடியால்.'

பொழிப்பு:

"வலிமை பொருந்திய வில்லைத் தரித்தவனே! சிறப்பித்துப் பேசப்படும் நூற்கேள்வியும், குற்றமில்லாத மெய்ஞ்ஞானமும், பொருந்தும் நல்லொழுக்கமும், மேன்மையான தொழிலும், வணங்குதற்குரிய தேவர்களும் பெரியோர்களே என்று மிகவும் மனத்திற் கொள்வாய்"

அருஞ்சொற் பொருள்:

உரம் — வலிமை. விலோய் — (வில்லோய்) — வில்லைத் தரித்தவனே. நூற்கேள்வி, மெய்ஞ்ஞானம், நல்லொழுக்கம், மேன்மையான தொழில் என்ற அஃறிணைப் பொருள்களோடு உயர்திணைக்குரிய தேவர்களையும் உள்ளடக்கி உயர்திணைப் பலர்பாற் பயனிலை கொடுத்தது அவற்றின் உயர்வு நோக்கியாகும். இதனைத் (வழுக்காத்தல்) 'திணைவழுவமைதி' என்பர்.

107. அந்த நற்பெருங் குரவ ராரெனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினாற்
றந்தை தாயரென் றிவர்க டாமலா
லெந்தை கூறவே றெவரு மில்லையால்.

பதப்பிரிப்பு:

அந்த நல்பெரும் குரவர் ஆர்எனச்
சிந்தை தேர்வு உறத் தெரிய நோக்கினால்

தந்தை தாயர்என்ற இவர்கள் தாம் அலால்
எந்தை கூறவேறு எவரும் இல்லை.

பொழிப்பு

'என் ஐயனே! அந்த நல்ல பெருங்குரவர்கள் எவர் என மனத்தெளிவுடன் ஆராய்ந்தால் தந்தை தாய் என்ற இவர்களேயல்லாது கூறுவதற்கு வேறு யாருமே இல்லை''

அருஞ்சொற் பொருள்:

குரவர் – குரு என்ற பெயரின் பன்மையே குரவர். (வணங்குதற்கு உரிய பெரியோர் என்பது பொருள்) தந்தை, தாயரோடு, குரு, அரசன் தமையன் ஆகியோரும் குரவர்களுள் அடங்குவர். இவர்களை 'ஐம்பெருங் குரவர்' என்பது வழக்கு. எந்தை — (என் தந்தையே) என்று இராமன் பரதனை அழைப்பது அன்பு காரணமாய் என்று கொள்ள வேண்டும்.

108. தாய்வ ரங்கொளத் தந்தை யேவலான்
மேய நங்குலத் தரும மேவினே
னீவ ரங்கொளத் தவிர்த நீர்மையோ
வாய்வ ரும்புலத் தறிவு மேவினாய்

பதப்பிரிப்பு:

தாய்வரங் கொளத் தந்தை ஏவலால்
மேய நம்குலத் தருமம் மேவினேன்
நீவரம் கொளத் தவிர்தல் நீர்மையோ?
ஆய்வரும் புலத்து அறிவு மேவினாய்'

பொழிப்பு:

'ஆராய்ந்து வருவதாகிய நூல்களின் அறிவினை அடைந்தவனே, தாயாகிய (கைகேயி) வரம்

பெற்றுக் கொள்ளத் தந்தையாகிய (தசரதனின்) கட்டளையால் எமது பரம்பரைக்குரிய தருமத்தினை ஏற்றேன். நீ என்னிடம் (வரம்) வேண்டிக் கொள்வதால் (அந்த வரத்தையும் கட்டளையையும்) நான் தவிர்வது நல்ல பண்போ?'

அருஞ்சொற் பொருள்:

ஆய் – ஆராய்ந்து, புலத்து – நூல்கள் (புலம் என்பது அறிவைக் குறிப்பினும் இங்கு அந்த அறிவைத் தரும் நூல்களைக் குறித்தது. (குணவாகு பெயர்;) நீர்மை – இயல்பு (பண்பு)

109. தனய ராயினார் தந்தை தாயரை
வினையி னல்லதோ ரிசையை வேய்தலோ
நினைய லோவிடா நெடிய வன்பழி
புனைத லோவைய புதல்வ ராதறான்.

பதப்பிரிப்பு:

தனயர் ஆயினார் தந்தை தாயரை
வினையின் அல்லதுஓர் இசையை வேய்தலோ
நிலையல் ஓவிடா நெடிய வன்பழி
புனைதலோ ஐய புதல்வர் ஆதல்தான்.'

பொழிப்பு'

'ஐயனே, பிள்ளைகளாய்ப் பிறந்தோர் (தம்) தந்தைக்கும் தாய்க்கும் (தமது) நற்செயல்களால் ஒப்பற்ற புகழினை அடைவித்தலோ, நினைவினின்றும் என்றும் நீங்காத நீண்ட கொடிய பழியினைச் சூட்டுதலோ (அவர்களின் பிள்ளைகளாய்ப் பிறந்ததால் அவர்கள் அடையும்) பயன்?

அருஞ்சொற் பொருள்:

தனயர் — பிள்ளைகள், இசை — புகழ், வேய் தலோ - அடைவித்தலோ புனைதல் - சூட்டுதல் (அணிதல்), ஒவிடா — நீங்காத, தான் — அசை

110. இம்மை பொய்யுரைத் திவறி யெந்தையா
ரம்மை வெம்மைசேர் நரக மாளயான்
கொம்மை நன்னிதிக் குவையின் வைகிவாழ்
செம்மை சேர்நிலத் தரசு செய்வெனோ.

பதப்பிரிப்பு:

'இம்மை பொய்யுரைத்து இவறி எந்தையார்
அம்மை வெம்மைசேர் நரகம் ஆளயான்
கொம்மை நல்நிதிக் குவையின் வைகிவாழ்
செம்மை சேர்நிலத்து அரசு செய்வெனோ.'

பொழிப்பு:

"(கைகேயிக்குத் தந்தை கொடுத்த வரத்தினை நிறைவேற்றி) உலோபம் செய்து என் தந்தையார் இப்பிறப்பிலே பொய்யுரைத்து மேலுலகிலே நரகத்திலே கிடந்து அழுந்த, நான் திரண்ட நல்லநிதிக் குவியலிடையே அமர்ந்து இன்பத்தோடு கூடிய சிறந்த நாட்டாட்சியை நடத்துவேனோ?"

அருஞ்சொற் பொருள்:

அம்மை - மேலுலகம். இம்மை, மறுமை, அம்மை என்ற மூன்று சொற்களும், இப்பிறப்பு, மறுபிறப்பு, மேலுலகம் (வாழ்வு) என்ற மூன்றையும் குறிப்பன. ('அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே'' சுந்தரமூர்த்தி

தாயனார்,) குவை — குவியல், செம்மை சிறப்பு. இவறி—உலோபம் செய்து (உலோபம் - கொடாமை)

111. 'வரனி லுந்தைசொன் மரபி னாலுடைத்
தரணி நின்னதென் றியைந்த தன்மையா
லுரனி னீபிறந் துரிமை யாதலா
லரசு நின்னதே யாள்க' வென்னவே

பதப்பிரிப்பு:

'வரன் நில் உந்தைசொல் மரபினால்உடைத்
தரணி நின்னது என்று இயந்த தன்மையால்
உரனின் நீபிறந்து உரிமை ஆதலால்
அரசு நின்னதே ஆள்க என்னவே'

பொழிப்பு:

"(கைகேயிக்குக் கொடுத்த) வரத்தில் (தவறாது) நின்ற உன் தந்தையுடைய சொற்களின் முறைமைப்படி அவருக்கு உடைமையான உலகினைப் பொருந்திய தன்மையாலும், வலிமையோடு நீ பிறந்து உரிமை பெற்றதாலும் அரசாட்சி உன்னதேயாம். நீ அதனை ஆள்வாயாக" என்று (இராமன்) சொல்ல.

அருஞ்சொற் பொருள்:

வரன் — வரம் ('ன்'—எழுத்துப்போலி) நில் — நின்ற. மரபு — முறைமை, உரன் - (உரம்) வலிமை ('ன்' எழுத்துப்போலி)

கைகேயியை மணஞ்செய்த காலத்திலேயே அவள் வயிற்றிற் பிறக்கும் மகனுக்கு அரசாட்சியை வழங்குவதாகத் தசரதன் வாக்குறுதியளித்

தான் என்பார், இப்பாடலையும் தமக்கு ஆதார மாகக் காட்டுவர், (உரனின் நீ பிறந் உரிமை ஆதலால்)

பரதனின் வேண்டுகோள்

112. ''முன்னர் வந்துதித் துலக மூன்றினு
நின்னை யொப்பிலா நீபி றந்தபா
ரென்ன தாகில்யா னின்று தந்தனென்
மன்ன போந்துநீ மகுடஞ் சூடெ''னா.

பதப்பிரிப்பு:

''முன்னர் வந்து உதித்து உலகம் மூன்றினும்
நின்னை ஒப்புஇலா நீ பிறந்த பார்
என்னது ஆகில்யான் இன்று தந்தனென்
மன்ன! போந்துநீ மகுடம் சூடு'' எனா,

பொழிப்பு:

''நீ (எனக்கு) முன்னே வந்து பிறந்தவன் உலகம் மூன்றிலும் ஈடுஇணை இல்லாத நீ பிறந்த (அரசு) என்னுடையதானால் அதனை இன்று (உனக்கு) நான் தந்தேன்... மன்னனே, நீ நாடு திரும்பி முடிசூடு'' என்று (பரதன்) கூற.

அருஞ்சொற் பொருள்:

பார் - உலகம் (அரசு) மகுடம் — முடி.

113. மலங்கி வையகம் வருந்தி வைகநீ
யுலங்கொ டோளுனக் குறுவ செய்தியோ
கலங்கு றாவணங் காத்தி போந்தெனாப்
பொலங்கு லாவுதாள் பூண்டு வேண்டினான்.

பதப்பிரிப்பு:

"மலங்கி வையகம் வருந்தி வைக நீ
உலங்கொள் தோள்உனக்கு உறுவசெய்தியோ
கலங்கு றாவணம் காத்தி போந்து" எனாப்
பொலம் குலாவுதாள் பூண்டு வேண்டினான்.

பொழிப்பு:

"உலகம் முழுவதும் கலங்கி வருந்தியிருக்கத் திரண்டகற்றூணைப்போன்ற தோள்களையுடைய உன் மனத்திற்கு இசைவானவற்றைச் செய்வாயோ?, உலகம் கலக்கமடையா வண்ணம் மீண்டும் வந்து காப்பாற்றுவாய்" என்று சொல்லி, (இராமனது) அழகிய அடிகளைப் பிடித்துக் கொண்டு (பரதன்) வேண்டினான்.

அருஞ்சொற் பொருள்:

மலங்கி - கலங்கி, வைக — இருக்க, உலம் திரட்சி, உறுவ — இசைவான (பொருத்தமான) கலங்கு—கலக்கம், பொலம் — பொன், ஈண்டு அழகைக் குறித்தது.

இராமனின் மறுப்புரை

114. பசைந்த சிந்தைநீ பரிவின் வையமென்
வசஞ்செய் தாவது முறைமை யோவசைக்
கசைந்த வெந்தையா ரருள வன்றுநா
னிசைந்த வாண்டெலா மின்றோ டேறுமோ

பதப்பிரிப்பு:

பசைந்த சிந்தைநீ பரிவின் வையம் என்
வசம் செய்து ஆவது முறைமையோ வசைக்கு

அசைந்த எந்தையார் அருள அன்றுநான்
இசைந்த ஆண்டுஎலாம் இன்றோடு
ஏறுமோ''

பொழிப்பு:

''அன்பு நிறைந்த உள்ளத்தினனான நீ உன் விருப்பத்தின்படி உலகத்தை என் வசமாய்ச் செய்தால், அது முறைமையாகுமோ? பழிக்கு அஞ்சிய என் தந்தையார், (கைகேயிக்கு) அளிக்க நான் (அதனை) ஏற்றால் அன்று வந்த (பதினான்கு) ஆண்டுகளும் இன்றோடு முடிந்து விடுமோ?''

அருஞ்சொற் பொருள்:

பசைந்த – அன்புநிறைந்த, பரிவு விருப்பம் (அன்பு) வசை – பழி.

115 வாய்மை யென்னுமீ தன்றி வையகந்
தூய்மை யென்னுமொன் றுண்மை சொல்லுமோ
தீமை தானதிற் றீர்த லன்றியே
யாய்மெய் யாகவே றறைய லாவதே.

பதப்பிரிப்பு:

வாய்மை என்னும் ஈது அன்றி வையகம்
தூய்மை என்னும் ஒன்று உண்மைசொல்லுமோ
தீமைதான் அதில் தீர்தல் அன்றியே
ஆய்மெய் ஆகவேறு அறையல் ஆவதே

பொழிப்பு:

''உண்மை என்ற இப்பண்பல்லாமல் உலகம் தூய்மையானது என்று (வேறு) நற்குணம் எதையும் உள்ளதாகக் கூறுமோ? தீய குணம் என்பது உண்மையினின்றும் தவறுவதல்லாது வேறு (எதுவும்) கூறத்தக்கதோ? உண்மையாக ஆராய்ந்து பார்'.

அருஞ்சொற் பொருள்:

ஈது—இது. (நீட்டல் விகாரம்) தீர்தல் - தவறுதல். ஆய் — ஆராய்ந்துபார். மெய் — உண்மை (யாக), அறையல் - கூறுதல். உண்மை — உள்ளது.

116. எந்தை யேவவாண் டேழொ டேழெனா
வந்த காலநான் வனத்துள் வைகநீ
தந்த பாரகந் தன்னை மெய்ம்மையா
லந்த நாளெலா மாளென் னாணையால்

பதப்பிரிப்பு:

"எந்தை ஏவ ஆண்டு ஏழொடு ஏழுஎனா
வந்த காலம்நான் வனத்துள் வைகநீ
தந்த பார்அகம் தன்னை மெய்ம்மையால்
அந்த நாள்எலாம் ஆள் என் ஆணையால்.

பொழிப்பு:

"எம் தந்தையின் ஏவலின்படி பதினான்கு ஆண்டுக்காலம் நான் காட்டினிலே வசிக்க, நீ (தந்தை) தந்த அரசினை உண்மை தவறாது அந்தப் பதினான்காண்டு வரை (என்) கட்டளைப் படி அரசாள்வாய்."

அருஞ்சொற்பொருள்:

வைக — வசிக்க, பார்அகம் — உலகம் (அரசு)

117. மன்னவ னிருக்க வேயு மணியணி மகுடஞ்சூடு
கென்ன யானியைந்த தன்னா னேயது மறுக்க வஞ்சி
யன்னது நினைந்து நீயென் னாணையை மறுக்கலாமோ
சொன்னது செய்தி யைய துயருழந் தயரலென்றான்

பதப்பிரிப்பு:

'மன்னவன் இருக்க வேயும் மணிஅணி மகுடம்
[சூடு க
என்ன யான்இயைந்தது அன்னான் ஏயது
மறுக்க அஞ்சி
அன்னது நினைந்து நீஎன் ஆணையை
[மறுக்கலாமோ
சொன்னது செய்திஐய துயர்உழந்து அயரல்'
[என்றான்

பொழிப்பு:

''பேரரசனான தந்தை வாழ்ந்திருக்கவும் இரத்தினங்கள் பதித்த முடியைச் சூடுவாய்' என்று (அவர்) சொல்ல நான் (அதற்கு) உடன்பட்டமை அவரது கட்டளையை மறுக்க அஞ்சியே. அவ்வாறு (நான் உடன்பட்டதை) நினைந்து (நீயும்) என்கட்டளையை மறுக்கலாமோ? (நான், சொன்னதைச் செய்வாய். ஐயனே, துன்பத்தை அநுபவித்துத் தளராதே.''

அருஞ்சொற் பொருள்.

இருக்கவேயும் – (வாழ்ந்து) இருக்கவும். மணி – இரத்தினக்கல், மகுடம் – முடி, ஆணை – கட்டளை, அயரல் – தளராதே

வசிட்டன் கூற்று

118. ஒள்ளியோ னினைய வெல்லா முரைத்தலு முரைக்கலுற்ற
பள்ளநீர் வெள்ள மன்ன பரதனை விலக்கிப் பண்டு
தெள்ளிய குலத்தோர் செய்கை சிக்கறச் சிந்தைநோக்கி
வள்ளியோய் கேட்டி யென்னா வசிட்டமா முனிவன்
[சொன்னான்

பதப்பிரிப்பு:

ஒள்ளியோன் இனைய எல்லாம் உரைத்தலும்
[உரைக்கலுற்ற
பள்ளம்நீர் வெள்ளம் அன்ன பரதனை விலக்
[கிப் பண்டு
தெள்ளிய குலத்தோர் செய்கை சிக்குஅறச்
[சிந்தை நோக்கி
வள்ளியோய் கேட்டி என்னா வசிட்டமா முனி
[வன் சொன்னான்

பொழிப்பு:

ஒளிபொருந்திய இராமன் இத்தன்மையவான எல்லாம் கூறிய அளவிலே, (அவற்றிற்கு விடை) கூறத் தொடங்கிய ஆழமான கடல் நீரின் பெருக்கினை ஒத்த (பெருமிதம் கொண்ட) பரதனை (விடை கூறவிடாது) விலக்கி, ''வள்ளலே, முன்பிருந்த (உன்) குலத்தினரின் தெளிவான செயற்பாடுகளைச் சிக்கல் அற்றவகையில் மனத்தாற் கவனித்துக் கேள்.'' என்று பெரிய முனிவனான வசிட்டன் கூறத் தொடங்கினான்.

அருஞ்சொற் பொருள்:

ஒள்ளியோன் – ஒளிபொருந்தியவன். பள்ளம் – தாழ்ந்தநிலம் (தரையிலும் தாழ்ந்ததாகிய கடல் ஒப்புநோக்கிக் கொள்ளப்பட்டது.)

திருமால் பெருமை

119. ஊரகன் புனலுணின் றரியொர் கேழலா
யிளையெனுந் திருவினை யேந்தி னானரோ
வுளைவரும் பெருமையோ ரெயிற்றி னுட்புரை
வளரிளம் பிறையிடை மறுவிற் றோன்றவே.

பதப்பிரிப்பு.

கிளர் அகல் புனலுள் நின்று அரிஓர் கேழலாய்
இளைஎனும் திருவினை ஏந்தினானரோ
உளைவு அரும் பெருமையோர் எயிற்றின்உட்புரை
வளர் இளம் பிறைஇடை மறுவில்தோன்றவே.

பொழிப்பு:

திருமால் ஓர் ஒப்பில்லாத பன்றியுருவெடுத்து, வருந்துதலில்லாத அரியதும் பெரியதுமான (தனது) பல்லின் உள்ளிடத்தில், வளரும் இயல்புள்ள இளம்பிறைச் சந்திரனின் மறுப்போன்று பொங்குகின்ற பரந்த கடலிலே நின்று பூமி என்னும் பூமகளை எடுத்தருளினான்,

அருஞ்சொற் பொருள்:

கிளர்—ஒலிக்கின்ற, அகல்—பரந்த, புனல் –நீர் (ஈண்டுக் கடலைக் குறித்தது), கேழல் – பன்றி (திருமாலின் வராகாவதாரம்) இளை–பூமாதேவி, உளைவு—வருத்தம்.

120. ஆதிய வமைதியி னறுதி யைம்பெரும்
பூதமும் வெளியொழித் தெவையும் புக்கபி
னாதனவ் வகன்புன னல்கி நண்ணருஞ்
சோதியாந் தன்மையிற் றுயிறன் மேயினான்.

பதப்பிரிப்பு:

'ஆதிய அமைதியின் அறுதி ஐம்பெரும்
பூதமும் வெளிஒழித்து எவையும் புக்கபின்
நாதன் அப்புனல் நல்கி நண்(ண) அரும்
சோதியாம் தன்மையில் துயிலல் மேயினான்,

பொழிப்பு:

'·ஊழிக்காலத்து முடிவிலே ஐம்பெரும் பூதங்களும் வெளிப்பட்டுத் தோன்றுவதைப் போக்கி,

(சத்து, அசத்தாகிய) எல்லாப் பொருள்களையும் தன்னுள்ளே அடக்கி, அகன்ற நீரினை (சமுத்திரத்தை) உண்டாக்கி எதனாலும் பொருந்தி அடைய முடியாத ஒளிவடிவம் கொண்டு (நாராயணனாகிய திருமால்) தலைவன் அறிதுயிலைப் பொருந்தினான்.

அருஞ்சொற் பொருள்:

ஆகிய அமைதியின் அறுதி - ஊழிக்காலத்து முடிவு (யுகாந்தரம்), நாராயணன் என்ற சொல்லுக்கு அனைத்தையும் தன்னுள்ளே கொண்டவன், நீரில் தோன்றியவன் என்பன பொருள்களாகக் கொள்ளப்படும். நண்ண அரும் — அடைவதற்கு அரிய, மேயினான் – பொருந்தினான். (நாதன் — தலைவன் இங்கு நாராயணனைக் குறித்தது.)

121: ஏற்றவித் தன்மையி னமரர்க் கின்னமு
தூற்றுடைக் கடல்வண னுந்தி யுந்திய
நூற்றிதழ்க் கமலத்தி னொய்தின் யாவையுந்
தோற்றுவித் துதவிட முதல்வன் தோன்றினான்.

பதப்பிரிப்பு:

ஏற்ற இத் தன்மையின் அமரர்க்கு இன்னமுது
ஊற்று உடைக் கடல்வண்ணன் உந்தி உந்திய
நூற்றுஇதழ்க் கமலத்தின் நொய்தின் [யாவையும்
தோற்றுவித்து உதவிட முதல்வன் [தோன்றினான்

பொழிப்பு:

(பாற்கடலில் அறிதுயில் கொண்டு) ஏற்றதாகிய இத்தன்மையினால், தேவர்களுக்கு' இனிய

அமிர்தத்தினைச் சொரிதலையுடைய கடல் போலும் கரிய நிறத்தினனாகிய திருமாலின் (தொப்பூழிலிருந்து) நூறு இதழ்கள் கொண்ட தாமரை மலரிலே யாவற்றையும் எளிதிற் படைத்து உதவுதற்காய்ப் பிரமன் வெளிப்பட்டான்.

அருஞ்சொற் பொருள்:

ஏற்றஅத்தன்மை (அறிதுயில் பூண்டு) ஏற்ற அந்தத் தன்மை, ஊற்று உடை — சொரிதலை உடைய, நொய்தின் — எளிதாக, வண்ணன் — நிறத்தினன், முதல்வன் — எல்லாவற்றிற்கும் முன்னே தோன்றி அவற்றைப் படைப்பவனாகிய பிரமன்.

படைப்புக் காலத்திலேயே தோன்றிய அரச குலம்

122. அன்றவ னுலகினை யளிக்க வாகிய
துன்றனிக் குலமுத லுள்ள வேந்தர்க
ளின்றள வினுமுறை யிகந்து ளாரிலை
யொன்றுள துரையின முணரக் கேட்டியால்.

பதப்பிரிப்பு:

'அன்று அவன் உலகினை அளிக்க ஆகியது
உன்தனிக் குலமுதல் உள்ள வேந்தர்கள்
இன்று அளவினும் முறை இகந்து உளார்இலை
ஒன்றுஉளது உரை இனம் உணரக் கேட்டியால்,

பொழிப்பு:

'அக்காலத்தில், பிரமன் உலகினைப் படைத்த பொழுது, உனது ஒப்பற்ற அரச குலம், முதலில்

உண்டாயிற்று. (அந்தக்குலத்தில் வந்த) அரசர்கள் இன்றுவரை முறைமையிலே தவிர்ந்ததில்லை. இன்னும் நான் சொல்லவேண்டிய ஒன்று உள்ளது. தெரியக் கேட்பாய்.'

அருஞ்சொற் பொருள்:

அளிக்க – படைக்க, தனி – ஒப்பற்ற, இகந்து– நீங்கி, தவிர்ந்து, இனம் – இன்னும்.

123. இதமிய லியற்றிய குரவர் யாரினு
மதவியல் களிற்றினாய் மறுவில் விஞ்சைகள்
பதவிய விருமையும் பயக்கப் பண்பினா
லுதவிய வொருவனே யுயரு மென்பரால்.

பதப்பிரிப்பு:

இதம்இயல் இயற்றிய குரவர் யாரினும்
மதம்இயல் களிற்றினாய் மறுஇல் விஞ்சைகள்
பதவிய இருமையும் பயக்கப் பண்பினால்
உதவிய ஒருவனே உயரும் என்பரால்

பொழிப்பு:

"மதம் பொருந்திய ஆண்யானை போன்றவனே, (இம்மை, மறுமையாகிய) பதவிகளை (உயிர்கள்) பெற்று இரண்டினதும் பயன்களை அனுபவிக்கும் வண்ணம் அன்போடு கல்விகள் கற்பித்து உதவிய குருவே நன்மையாகிய செயல்களைச் செய்கின்ற ஐம்பெருங் குரவர்களுள்ளும் மேன்மையுடையவன் என்று (மேலோர்) உரைப்பர்"

அருஞ்சொற் பொருள்:

இதம் — நன்மை, குரவர் - ஐம்பெருங் குரவர், மதவியல் - மதம் பொருந்திய, பயக்க — அளிக்க, பண்பினால் — (அன்பாகிய) பண்போடு, விஞ்சைகள் — அறிவுகள்.

124 என்றலால் யானுனை யெடுத்த விஞ்சைக
ளொன்றலா தனபல வுதவிற் றுண்மையா
லன்றெனா தின்றென தாணை யையநீ
நன்றுபோந் தளியுனக் குரிய நாடென்றான்

பதப்பிரிப்பு:

'என்றலால் யான்உனை எடுத்த விஞ்சைகள்
ஒன்றுஅலாதன பல உதவிற்று உண்மையால்
அன்றுஎனாது இன்றுஎனது ஆணை ஐயநீ
நன்றுபோந்து அளிஉனக்கு உரியநாடு' என்றான்

பொழிப்பு

''(மேலோர் இவ்வாறு) உரைப்பதால் நான் உன்னை ஆதரித்து மிகப்பலவான கல்விகளைக் கற்பித்தது உண்மையானால், என்னுடைய கட்டளையை ஏற்கத் தக்கது அன்று என மறுக்காது மீண்டு வந்து உனக்குரிய நாட்டினை நன்கு காப்பாற்றுவாய்'' என்றான் (வசிட்டன்).

அருஞ்சொற் பொருள்:

ஒன்று அலாதனபல — ஒன்று அல்ல, பல, உதவிற்று—உதவியது (கற்பித்தது), அளி–காப்பாற்று.

இராமன் வசிட்டனுக்கு விடை கூறல்

125. கூறிய முனிவனைக் குவிந்த தாமரை
சீறிய கைகளாற் றொழுது செங்கணா
னாறிய சிந்தனை யறிஞ வொன்றுரை
கூறுவ துளதெனக் கூறன் மேயினான்

பதப்பிரிப்பு:

கூறிய முனிவனைக் குவிந்த தாமரை
சீறிய கைகளால் தொழுது செங்கணான்
ஆறிய சிந்தனை அறிஞ ஒன்றுஉரை
கூறுவது உளதுஎனக் கூறல் மேயினான்.

பொழிப்பு:

இவ்வாறு எடுத்துரைத்த வசிட்டமுனிவனைச் சிவந்த கண்களை உடையவனான (இராமன்), தாமரை மலர்களிலே (தமக்குப் பகைஎன்று) சீற்ற மடைந்தனவான (தன்) கைகளாலே வணங்கி, ''அடங்கிய மனத்தினை உடைய (யாவும்) அறிந்தவனே, நான் கூறவேண்டுவது ஒன்று உள்ளது'' என்று கூறத் தொடங்கினான்.

அருஞ்சொற்பொருள்:

ஆறிய — அடங்கிய, சிந்தனை - மனம் குவிந்த தாமரையைச் சீறியகைகள் என்றது, தாமரையிலும் சிவந்த அழகிய கைகள் என்பதைக் குறித்தற்காகும்.

126. சான்றவ ராகதன் குரவ ராகதாய்
போன்றவ ராகமெய்ப் புதல்வ ராகதான்
தேன்றரு மலருளான் சிறுவ செய்வெனென்
றேன்றபி னவ்வுரை மறுக்கு மீட்டதோ.

பதப்பிரிப்பு:

சான்றவர் ஆக, தன் குரவர் ஆக, தாய்
போன்றவர் ஆக, மெய்ப்புதல்வர் ஆக, தான்
தேன் தருமலருளான் சிறுவ செய்வன் என்று
ஏன்றபின் அவ்வுரை மறுக்கும் ஈட்டதோ?

பொழிப்பு:

'தேன் சொரிகின்ற தாமரைமலரில் வீற்றிருக்கும் நான்முகனின் மைந்தனே, பெரியோர்களே ஆகுக, தன்னுடைய ஆசிரியரேயாகுக, உண்மையைக கடைப்பிடிக்கும் புதல்வர்களேயாகுக தான் செய்வதாக ஒப்புக்கொண்ட பின், அந்த வாக்குறுதி (அவரெவராலும்) தடுக்கத் தக்க தன்மை உடையதோ?'

அருஞ்சொற் பொருள்:

சான்றவர்—பெரியோர், தேன்தருமலருளான்—தேன்சொரியும் தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமன், ஏன்றபின் – ஒப்புக்கொண்டபின்.

127. தாய்பணித் துவந்தன தந்தை செய்கென
வேயவெப் பொருள்களு மிறைஞ்சி மேற்கொளாத்
தீயவப் புலையனிற் செய்கை தேர்கிலா
நாயெனத் திரிவது நல்ல தல்லதோ.

பதப்பிரிப்பு:

தாய்பணித்து வந்தன தந்தை செய்கஎன
ஏயஎப் பொருள்களும் இறைஞ்சி மேற்
கொளாத்
தீயஅப் புலையனின் செய்கை தேர்கிலா
நாய்எனத் திரிவது நல்லது அல்லதோ?

பொழிப்பு:

''தாய் கட்டளையிட்டதால் வந்தனவும், தந்தை செய்க எனக் கட்டளையிட்டனவுமாகிய எவற்றையும் வணங்கித் தலைமேற் கொள்ளாது விடல் கொடிய அந்தப் புலையனின் செய்கையி லும் செய்யத்தக்கவற்றை அறியாது அலையும் நாயின் செய்கையிலும் நல்லதாமோ?'' (தீயதாகும் எ — று)

அருஞ்சொற் பொருள்:

ஏய — பொருந்திய, இறைஞ்சி — வணங்கி, புலையன் — அற்பன், இழிந்தவன், தேர்கிலா — அறியாத

128. முன்னுறப் பணித்தவர் மொழியை யானென
சென்னியிற் கொண்டது செய்வெ னென்றதன்
பின்னுறப் பணித்தனை பெருமை யோவெனக்
கென்னினிச் செய்வதை யுரைசெ யீங்கென்றான்

பதப்பிரிப்பு:

முன் உறப் பணித்தவர் மொழியை யான் என
சென்னியில் கொண்டுஅது செய்வென் என்றதன்
பின்உறப் பணித்தனை பெருமையோ எனக்கு
என்இனிச் செய்வதை உரைசெய்ஈங்கு'' என்றான்

பொழிப்பு:

''முற்படக் கட்டளையிட்டவரின் (தாய் தந்தை) சொல்லை யான் எனது தலைமேற் கொண்டு அதனை நிறைவேற்றுவேன் என்றதன்

பின்பு, 'நீ அரசை ஏற்று ஆள்' என்ற இதனைக் கட்டளையிடுகிறாய். இது எனக்குப் பெருமையோ? இனி நான் செய்யத்தக்கதை இப்பொழுது (நீயே) எடுத்துச் சொல்''

அருஞ்சொற்பொருள்:

பணித்தவர் - கட்டளையிட்டவர், சென்னி – தலை, செய்வதை – செய்யவேண்டியதை.

வசிட்டனின் மௌனம், பரதனின் தீர்மானம்

129. முனிவனு முரைப்பதோர் முறைமை கண்டில
மினி யென விருந்தன னிளைய மைந்தனு
மனையதே லாள்பவ ராள்க நாடுநான்
பனிபடர் காடுடன் படர்தன் மெய்யென்றான்.

பதப்பிரிப்பு:

முனிவனும் ''உரைப்பதுஓர் முறைமை கண்டிலம்
இனி'' என இருந்தனன் இளைய மைந்தனும்
''அனையதேல் ஆள்பவர் ஆள்க நாடுநான்
பனிபடர் காடுடன் படர்தல் மெய்'' என்றான்

பொழிப்பு:

வசிட்டமுனிவனும் ''இனி (இதற்கு மாறாக) எடுத்துக்கூற ஒரு நீதியைக் கண்டிலேன்' என (மௌனமாய்) இருந்தான். இளைய புதல்வனான (பரதனும்) ''அவ்வாறாயின் (நாட்டை) ஆள்பவர் (எவராவது) ஆளட்டும். நான் பனிமிகுதியான காட்டிலே (இராமனுடன்) செல்வது உண்மை'' என்றான்.

அருஞ்சொற் பொருள்:

அனையதேல் —அவ்வாறாயின், படர் — மிகுதி, படர்தல் — செல்லுதல்.

வானத்திலே தேவர்கள் கூடிஆராய்தல்.

130. அவ்வழி யிமையவ ரறிந்து கூடினா
ரிவ்வழி யிராமனை யிவன்கொண் டேகுமேற்
செவ்வழித் தன்றுநஞ் செயலென் றெண்ணினார்
கவ்வையர் விசும்பிடைக் கழறன் மேயினார்.

பதப்பிரிப்பு:

அவ்வழி இமையவர் அறிந்து கூடினார்
இவ்வழி இராமனை இவன்கொண்டு
ஏகுமேல்
செவ்வழித்து அன்றுநம் செயல்என்று
எண்ணினார்
கவ்வையர் விசும்பிடைக் கழறன் மேயினார்.

பொழிப்பு:

அப்பொழுது தேவர்கள் அங்கு நடந்தவற்றை அறிந்து) "இவ்வாறு இவன் (பரதன்) இராமனை (அயோத்திக்குக்) கொண்டு செல்வானானால் (அரக்கரை அழிப்பதாகிய) எமது செயல் (எமக்காக இராமன் செய்யவேண்டிய செயல்) நல்வழியில் நடந்தேறாது" என்று எண்ணித் துயருற்றவர்களாய்ஆகாயத்தில் ஒன்றுகூடி உரைக்கத் தொடங்கினார்கள்.

அருஞ்சொற்பொருள்:

ஏகுமேல் — செல்வானானால், செவ்வழித்து — நல்லவழியாவது, கவ்வையர் — துயருற்றவர்.

தேவர்களின் கூற்று

131. ஏத்தரும் பெருங்குணத் திராம னிவ்வழி
போத்தருந் தாதைசொற் புரக்கும் பூட்சியா
லாத்தவாண் டேழினோ டேழு மந்நிலங்
காத்தலுன் கடனிவை கடமை யென்றனர்.

பதப்பிரிப்பு:

'ஏத்த அரும் பெரும்குணத்து இராமன் இவ்வழி
போத்து அரும் தாதைசொல் புரக்கும் பூட்சியால்
ஆத்த ஆண்டு ஏழினோடு ஏழும் அந்நிலங்
காத்தல்உன் கடன்இவை கடமை' என்றனர்.

பொழிப்பு:

"புகழ்வதற்கு அரிய பெருமைக்குணங்களுடைய இராமன், இவ்வனத்திடையே செல்வதாகிய தந்தையின் சொல்லினைக் காப்பாற்றும் உரிமை உடையவன். தந்தையாற் குறிக்கப்பட்ட பதினான்காண்டுகளும் (நீ) அரசைக் காத்தலாகிய கடமை உடையாய். இவ்விரண்டும் (இருவராகிய உங்களால்) நிறைவேற்றற்குரிய நீங்காக் கடன்கள்" என்று (இராம, பரதருக்குத் தேவர்) கூறினர்.

அருஞ்சொற் பொருள்:

ஏத்த – புகழ, போத்து – போந்து என்பதன் வலித்தல் விகாரம், புரக்கும் – காக்கும், ஆத்தன் – தந்தை (அத்தன் என்பதன் நீட்டல் விகாரம்)

இராமன் பரதனுக்கு உரைத்தல்

132. வானவ ருரைத்தலு மறுக்கற் பாலதன்
றியானுனை யிரந்தன னினியென் னாணையா
லானதோ ரமைதியி னளித்தி பாரெனாத்
தானவன் றுணைமலர்த் தடக்கை பற்றினான்.

பதப்பிரிப்பு:

"வானவர் உரைத்தலும் மறுக்கற் பாலது அன்று
யான் உனை இரந்தனன் இனிஎன் ஆணையால்
ஆனதோர் அமைதியின் அளித்திபார்" எனாத்
தான் அவன் துணைமலர்த் தடக்கை பற்றினான்.

பொழிப்பு:

"தேவர்கள் இவ்வாறு கூறுவதும் மறுக்கத்தக்க தன்று. நான் உன்னை இரந்து வேண்டுகின்றேன். இனி எனது கட்டளைப்படி அமைந்த, தகுதியான முறைமையினால் நீ அரசை ஆள்வாய்" என்றுரைத்து இராமன் பரதனது தாமரைமலர்போன்ற இரண்டு பெரிய கைகளையும் பிடித்தனன்.

அருஞ்சொற் பொருள்:

அமைதி – தகுதி, புரத்தி – ஆள்வாய், துணை – இரண்டு, மலர் (தாமரை) – மலர். தடக்கை – பெரியகைகள்.

பரதனின் சத்தியவாக்கு

133. 'ஆமெனி லேழிரண் டாண்டி லையநீ
நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலங்
கோமுறை புரிகிலை யென்னிற் கூரெரி
சாமிது சரதநின் னாணை' சாற்றினேன்

பதப்பிரிப்பு:

'ஆம்எனில் ஏழுஇரண்டு ஆண்டில் ஐயநீ
நாமநீர் நெடும்நகர் நண்ணி நால்நிலம்
கோமுறை புரிகிலை என்னில் கூர்எரி
சாம்இது சரதம்நின் ஆணை சாற்றினேன்.

பொழிப்பு:

''அவ்வாறாயின் பதினான்காண்டுகள் கழிந்த பின் அச்சந் தருகின்ற அகழிநீர் சூழ்ந்த பெரிய (அயோத்தி) நகரத்தை அடைந்து பூமியை நீ அரசாட்சி செய்யாவிடில் (நான்) மிகுதியான நெருப்பிலே புகுந்து சாவேன். இஃது உண்மை'' என்று உன்மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன்'

அருஞ்சொற் பொருள்:

ஆமெனில் — அவ்வாறெனில், நாமம்— அச்சம், நீர் – (அகழி) நீர், கோமுறை — அரசருக்கு உரிய நீதி (நெறியில்) அரசாட்சி, கூர் — மிகுதி (சால, உறு, தவ, நனி, கழி, கூர் என்ற உரிச் சொற்கள் மிகுதி என்ற பொருள் தருவன) சாம் – (சாகும்) – சாவேன், ஆணை - சத்திய வாக்கு.

இராமன் இசைவளித்தல்

134. என்பது சொல்லிய பரதன் யாதுமோர்
துன்பில னவனது துணிவை நோக்கினா
னன்பின னுருகின னன்ன தாகென்றான்
றன்புகழ் தன்னிலும் பெரிய தன்மையான்

பதப்பிரிப்பு:

என்பது சொல்லிய பரதன் யாதும்ஓர்
துன்புஇலன் அவனது துணிவை நோக்கினான்
அன்பினன் உருகினன் 'அன்னது ஆகுக' என்றான்
தன்புகழ் தன்னிலும் பெரிய தன்மையான்

பொழிப்பு:

(என்று பரதன் ஆணையிட்டுக்) கூறியதைக் கேட்ட, தனது புகழிலும் பெரிய பண்புகள் வாய்க்கப்பெற்ற இராமன் எந்த ஒரு துன்பமும் இல்லாதவனான (பரதனாகிய) அவனது மனவுறுதியை நினைந்து அன்பு உடையவனாய் உருகினான். 'அவ்வாறே ஆகுக' என்றான்.

அருஞ்சொற் பொருள்:

அன்னது - அவ்வாறே

பரதன் இராமனுடைய பாதுகைகளை வேண்டிப் பெறல்

135. விம்மினன் பரதனும் வேறு செய்வதொன்
றின்மையி னரிதென வெண்ணி யேங்குவான்
செம்மையின் றிருவடித் தலந்தந் திகென
வெம்மையுந் தருவன விரண்டு நல்கினான்.

பதப்பிரிப்பு:

விம்மினன் பரதனும் வேறுசெய்வது ஒன்று
இன்மையின் அரிதுன எண்ணி ஏங்குவான்
செம்மையின் திருவடித் தலம்தந்து ஈக' என
வெம்மையும் தருவன இரண்டும் நல்கினான்.

பொழிப்பு:

பரதனும் வேறு செய்யக்கூடியது ஒன்றும் இல்லாமையால் இது (இராமனைப் பிரிந்து சென்று ஆட்சி நடத்தல்) கடினமானதே என்று நினைத்துக் கலங்கியவனாய், ''உனது திருவடி நிலைகளை (பாதுகைகளை) அன்போடு தந்தருள்க'' என்று வேண்ட, இராமன் (எல்லா உலக) இன்பங்களையும் தருவனவாகிய (பாதுகைகள்) இரண்டினையும் அளித்தான்.

அருஞ்சொற்பொருள்:

இன்மை — இல்லாமை, செம்மை — அன்புடன், வெம்மை – விருப்பம் (இன்பங்கழ தலம் நிலை.

பரதன் பாதுகைகளைத் தன் தலையிலே சூடிச் செல்லல்.

136. அடித்தல மிரண்டையு மழுத கண்ணினான்
முடித்தல மிவையென முறையிற் சூடினான்
படித்தலத் திறைஞ்சினன் பரதன் போயினான்
பொடித்தல மிலங்குறு பொலங்கொண் மேனியான்.

பதப்பிரிப்பு:

அடித்தலம் இரண்டையும் அழுத கண்ணினான்
முடித்தலம் இவைஎன முறையில் சூடினான்

படித்தலத்து இறைஞ்சினான் பரதன் போயி
[னான்
பொடித்தலம் இலங்குஉறு பொலங்கொள்
[மேனியான்

பொழிப்பு:

அழுத கண்ணினனும், (நிலத்தின்) புழுதி படிந்து விளங்குகின்ற பொன்போலும் அழகிய மேனியினனுமான பரதன், அந்தப் பாதுகைகள் இரண்டினையும் (இவையே என்) முடிகள் என்று கொண்டு முறைப்படி தலையிலே சூடியவனாய், தரையில் விழுந்து வணங்கிப் போனான்.

அருஞ்சொற்பொருள்:

பொடி—புழுதி, பொலம்—பொன், இலங்குறு—விளங்குகின்ற, படித்தலம் – பூமியாகிய இடம்.

பரதனைச் சூழ்ந்து தாய்மாரும் சுற்றமும் சேனையும் முனிவரும் செல்லல்.

137. ஈன்றவர் முதலிய வெண்ணில் சுற்றமுஞ்
சான்றவர் குழுவொடு தவத்து ளோர்களும்
வான்றரு சேனையு மற்றுஞ் சுற்றுற
மூன்றுநூல் கிடந்ததோண் முனியும் போயினான்.

பதப்பிரிப்பு:

ஈன்றவர் முதலிய எண்இல் சுற்றமும்
சான்றவர் குழுவொடு தவத்து உ(ள்)ளோர்களும்
வான்தரு சேனையும் மற்றும் சுற்றுஉற
மூன்றுநூல் கிடந்ததோள் முனியும் போயினான்

பொழிப்பு:

பெற்ற தாயர் முதலாம் சுற்றத்தினரும் பெரியோர் கூட்டமும் தவத்தராகிய முனிவர்களும் பெருமை மிக்க படையினரும் மற்றும் உள்ளோர்களும் பரதனைச் சூழ்ந்து செல்ல, முப்புரிநூல் தாங்கிய தோளினனான (வசிட்ட) முனிவனும் உடன் சென்றான்.

அருஞ்சொற் பொருள்:

ஈன்றவர் — பெற்றவர் (தாய்மார்), சான்றவர் - பெரியோர், வான்தரு — பெருமைமிக்க.

பரத்துவாச முனிவர் அயோத்திமக்கள் தேவர்கள், குகன் போதல்.

138. பண்டைநூ றெரிபரத் துவனும் போயினான்
மண்டுநீர் நெடுநகர் மாந்தர் போயினார்
விண்டுறை தேவரும் விலகிப் போயினார்
கொண்டறன் னாணையாற குகனும் போயினான்

பதப்பிரிப்பு:

பண்டை நூல் தெரிபரத் துவனும் போயினான்
மண்டுநீர் நெடுநகர் மாந்தர் போயினார்
விண்டுஉறை தேவரும் விலகிப் போயினார்
கொண்டல்தன் ஆணையால் குகனும் போயினான்

பொழிப்பு:

பழைமையான நூல்கள் (வேதங்கள், சாத்திரங்கள் நன்கு) தெரிந்த பரத்துவாச முனிவனும் சென்றான். மிகுந்த அகழிநீர் சூழ்ந்த அயோத்தி நகர மக்களும் சென்றார்கள். விண்ணுலகத்துத்

தேவர்களும் விலகிச் சென்றார்கள். முகில்போலும் நிறத்தினனான இராமனின் கட்டளையை ஏற்றுக் குகனும் சென்றான்.

அருஞ்சொற் பொருள்:

மண்டு மிகுதி, நீர் (அகழிநீர்), நெடுநகர் பெரிய நகரம் (அயோத்தி), விண்டுறை — (விண்ணுறை என்ற சொற்றொடரின் வலித்தல் விகாரம் (விண் + உறை) சுவர்க்கத்தில் வாழும்.

கங்கையைக் கடக்க முற்பட்ட பரதன் அயோத்தி சென்றிலன்

139. பாதுகந் தலைக்கொடு பரதன் பைம்புனன்
மோதுகங் கையின்கரை கடந்து முந்தினான்
போதுகுங் கடிபொழி லயோத்தி புக்கில
னோதுகங் குலினெடி துறக்க நீங்கினான்

பதப்பிரிப்பு:

பாதுகம் தலைகொடு பரதன் பைம்புனல்
மோது கங்கையின் கரை கடந்து முந்தினான்
போது உகும் கடிபொழில் அயோத்தி புக்குஇலன்
ஓதுகங்குலின் நெடிது உறக்கம் நீங்கினான்.

பொழிப்பு:

பாதுகைகளைத் தலைமேற்கொண்டு (பரதன்) குளிர்ந்த நீரானது அலை மோதும் கங்கைக் கரையினைக் கடக்க முற்பட்டு, மலர்கள் சிந்துகின்ற நறுமணச் சோலைகள் அமைந்த அயோத்தி நகரத்திற்குச் செல்லாது இரவு முழுவதும் தூங்காதவனாய்,

அருஞ்சொற் பொருள்:

பாதுகம் — பாதுகை, பைம்புனல்—பசுமை + புனல்) குளிர்ந்த நீர், முந்தினான் - முற்பட்டு, முந்தினான், புக்கிலன், நீங்கினான் என்பன முறையே முந்தி, புகாது, நீங்கி என்று எச்சப் பொருளைத் தந்தமையால் முற்றெச்சங்கள்.

பரதன் நந்திக் கிராமத்தில் இருந்து செங்கோல் நடத்தல்

140. நந்தியம் பதியிடை நாதன் பாதுகஞ்
செந்தனிக் கோன்முறை செலுத்தச் சிந்தையா
னிந்தியங் களையவித் திருத்தன் மேயினா
னந்தியும் பாலுநீ ரறாத கண்ணினான்.

பதப்பிரிப்பு:

நந்தி அம் பதி இடை நாதன் பாதுகம்
செம் தனிக் கோல்முறை செலுத்தச் சிந்தை
[யான்
இந்தியங்களை அவித்து இருத்தல் மேயினான்
அந்தியும் பகலும்நீர் அறாத கண்ணினான்.

பொழிப்பு:

நந்திக் கிராமம் என்னும் இடத்திலே, தலைவனான (இராமனது) பாதுகைகளே செங்கோல் செலுத்திவரப் பரதன் தனது ஐம்பொறிகளையும் அடக்கி, இரவும் பகலும் இடையறாது சொரியும் கண்ணீருடையவனாய் (அங்குத்) தங்கியிருக்கலானான்.

அருஞ்சொற் பொருள்.

செந்தனிக்கோல் – செங்கோல், இந்தியங்கள்– இந்திரியங்கள் (ஐம்பொறிகள்) அவித்து – அடக்கி

இராமன் தென்திசை நோக்கிச் சீதையுடனும் இலக்குமணனுடனும் செல்லல்

141 குன்றினி லிருந்தன னென்னுங் கொள்கையா
நின்றவர் நலிவரா னேயத் தாலெனாத்
தன்றுணைத் தம்பியுந் தானுந் தையலுந்
தென்றிசை நெறியினைச் சேறன் மேயினான்.

பதப்பிரிப்பு:

குன்றினில் இருந்தனன் என்னும் கொள்கையால்
நின்றவர் நலிவரால் நேயத்தால் எனாத்
தன் துணைத் தம்பியும் தானும் தையலும்
தென் திசை நெறியினைச் சேறல் மேயினான்.

பொழிப்பு:

தான் சித்திரகூட மலையிலே இருக்கிறான் என்ற எண்ணத்தினால், (அயோத்தி நகரத்தில்) உள்ளோர் (தன் மீதுள்ள அன்பினால்) வருந்துவர் என்று கருதிய (இராமன், தனக்குத் துணையாயுள்ள தம்பி இலக்குமணனும் சீதாதேவியும் (உடன்வரத்) தெற்குத்திசையை நோக்கி நடக்கலானான்.

அருஞ்சொற் பொருள்:

நலிவர் – வருந்துவர் (நலிவரால் என்ற சொல்லின் ஆல் இடைச்சொல் அசைநிலை), தையல் – (மாதரசி ஆகிய) சீதை.

மாதிரி வினாக்கள்

1. மேல்வரும் செய்யுட் பகுதிகளுக்குச் சந்தர்ப்பங் கூறிப் பொருள் விளக்கமுந் தருக.

[அ] மறையின் கேள்வற்கு மன்னிளந் தோன்றல்பின்
முறையி னீங்கி முதுநிலங் கொள்கிலே
னிறைவன் கொண்டில னாமெனின் யாண்டெலா
முறைவன் கானத் தொருங்குட னேயென்றான்.

உரைத்த வாசகங் கேட்டலு முள்ளெழுந்
திரைத்த காத லிருந்தவத் தோர்க்கெலாங்
குரைத்த மேனியொ டுள்ளங் குளிர்ந்ததா
லரைத்த சாந்தமொ டப்பிய தென்னவே.

[ஆ] அரியவ னுரைசெயப் பரத னையநிற்
பிரிவெனும் பிணியினா லென்னைப் பெற்றவக்
கரியவள் வரமெனுங் கால னாற்றனக்
குரிய மெய்ந் நிறுவிப்போ யும்ப ரெய்தினான்.

விண்ணிடை யடைந்தன னென்ற வெய்யசொற்
புண்ணிடை யயிலெனச் செவிபு காமுனங்
கண்ணொடு மனஞ்சுழல் கறங்கு போலவாய்
மண்ணிடை விழுந்தனன் வானி னும்பரான்

[இ] வையகந் துறந்துவந் தடவி வைகுத
லெய்திய துணக்கென நின்னை யீன்றவ
ளைதல்கண் டுவந்தவ ளவையி லோங்கிய
கைகயன் மகள்விழுந் தரற்றக் காண்டியால்

அரஞ்சுட வழனிமி ரலங்கல் தோளினாய்
விரஞ்சொரு நொடியிலிவ் வனிக வேலையை
யுரஞ்சுடு வடிக்கணை யொன்றில் வென்றுமெய்
புரஞ்சுடு மொருவனிற் பொலிவன் யானென்றான்.

(ச) என்றலால் யானுனை யெடுத்த விஞ்சைக
ளொன்றலா தனபல வுதவிற் றுண்மையா
லன்றெனா தின்றெனா தாணை யையநீ
நன்றுபோந் தளியுனக் குரியநா டென்றான்.

கூறிய முனிவனைக் குவிந்த தாமரை
சீறிய கைகளாற் றொழுது செங்கண
னாறிய சிந்தனை யறிஞ வொன்றுரை
கூறுவ துளதெனக் கூறல் மேயினான்.

2. பரத்துவாச முனிவர் அளித்த விருந்திலே பரதனது படைகுடிபரிவாரங்களைத் தேவமாதர் உபசரித்த வகையினை விளக்கிக் கதைநிகழ்வுக்கு அது எந்த அளவிலே பொருத்தப்பாடானது என்பதைத் தெளிக்குக.

3. 'பரதன் படைகொண்டு இராமனோடு போராட வருகின்றான்' என்று தவறாகக் கருதிச் சினங்கொண்ட இலக்குமணனை இராமன் அமைதிப்படுத்திய வகையினையும் சிறப்பினையும் வகுத்துக்காட்டுக.

4. பரதனின் சோகம், அவனுடைய மனநிலை, உறுதிப்பாடு என்பவற்றைத் தக்க சான்றுகளுடன் விரித்துரைத்து அப்பாத்திரத்தின் உருவாக்கத்தில் நீர் காணும் சிறப்புக்களை விளக்குக.

5. வசிட்டமுனிவருக்கும் இராமனுக்குமிடையே நடந்த உரையாடலிலே இராமன் வசிட்டரை வாயடக்கி மௌனங்காக்க வைத்தது எவ்வாறு? ஆராய்க.

6. திருவடி சூட்டு படலத்தில் இராமன் என்ற பாத்திரம் கம்பராலே உருவாக்கப்பட்டுள்ளவாற்றினை ஆராய்க.

7. நிலையாமைக் கோட்பாட்டினை வசிட்டமுனிவர் அறிவுறுத்தும் வகையினை விளக்கி அதில் நீர் காணும் சிறப்பினைத் தெளிக்குக.

8. இராமன் பரதனுக்குக் கூறிய விடையிலே உமது உள்ளத்தைத் தொட்டவற்றைக் காரணங் காட்டி விளக்குக.

விற்பனையாகின்றன !

க. பொ. த. (உ/த)
G. C. E. (A/L)

புதிய பாடத்திட்டத்திற்கமைவான
புதிய நூல்கள்.

1. திருக்குறள் — பொருட்பால் ஒளிபியல்
வித்துவான் க. சொக்கலிங்கம் M.A.
(சொக்கன்)

2. செய்யுட் கோவை
(சங்க காலம் தொடக்கம் இக்காலம் வரை)
பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு. வே)

3. நாகம்மாள் — (நாவல்)
ஆர். ஷண்முகசுந்தரம்

4. இந்து நாகரிகம் — பாகம் I
வித்துவான் க. சொக்கலிங்கம் M. A.
(சொக்கன்)

5. இந்து நாகரிகம் — பாகம் II
வித்துவான் க. சொக்கலிங்கம் M. A.
(சொக்கன்)

6. உரைநடைக் கோவை
(ஆறுமுகநாவலர் தொடக்கம் சிவராமன் வரை)
பண்டிதர் சு. வேலுப்பிள்ளை

பதிப்பாளர்:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.